பக்கங்கள் : இருபத்தெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 30 ஞாயிற்றுக்கிழமை (12.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :77

# பேசாலைக் கடலில் படகு வெடித்துச் சிதறி எரிந்தது!

## அதிலிருந்த நால்வர் மரணம் கடற்படையினர் தாக்குதல்?

மன்னார்,பெப்ரவரி12

மன்னார் பேசாலைக் கடற்பரப்பில் நேற்றுமாலை படகு ஒன்று வெடித்துச் சிதறித் தீப்பற்றி எரிந்தது. அதில் பயணம் செய்த நால்வர் உயிரிழந்துவிட்டனர் என்று அஞ்சப்படுகிறது.

வேகமாகச் சென்றுகொண்டிருந்த மீன்பிடிப் படகு ஒன்றைச் சந்தேகத்தின் பேரில் சோதனையிடுவதற்காக கடற்படைப் படகு ஒன்று வழிமறிக்க முற்பட்டபோது அந்தப் படகு வெடித்துச் சிதறி எரிந்தது என்று மன்னார் பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர். ஆனால், கடற்படைப் படகில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஆர்.பி.ஜி. தாக்குதலினாலேயே மீனவர் படகு ஒன்று வெடித்துச் சிதறியது என்று பேசாலை மீனவர்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றனர்.

நேற்று மாலை 7 மணியளவில் கடலில் வெகு தொலைதூரத்தில் வெடி ஓசையைத் தொடர்ந்து படகு ஒன்று எரிவதைத் தாங்கள் கண்டனர் என்று பேசாலை மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் படகு வெடித்துச் சிதறிய சம்பவத்தில் நால்வர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுவதாக மன்னார் பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்கள் மீனவர்கள் அல்லது சிவிலியன்களாகவே இருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்பட்டது.

வெடித்துச் சிதறிய படகு, விடத்தல்தீவு கடற்கரையை நோக்கி வந்துகொண்டிருந்ததை

(16ஆம் பக்கம் பார்க்க)

## தங்கள் படகு எதுவும் மன்னார்க் கடலில் தாக்கப்படவில்லை என்கின்றனர் புலிகள்

கிளிநொச்சி,பெப்.12

மன்னார்க் கடற் பகுதியில் படகு ஒன்று வெடித்துச் சிதறியதாகக் கூறப்படும் சம்பவத்துடன் தமக்கு தொடர்பு எதுவும் கிடையாது என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

தமது படகுகளோ அல்லது போராளிகளோ இந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்றும் -

தங்கள் படகு எதுவும் தாக்குதலுக்கு இலக்காகவில்லை என்றும் -

புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

படகு வெடித்துச் சிதறியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக தாங்கள் அறிந்துகொண்டதாகவும் மீனவர் படகு அல்லது வேறு ஏதாவது பயணிகள் படகு இந்தச் சம்பவத்தில் சிக்கியிருக்கக் கூடும் என்றே தாங்கள் சந்தேகிப்பதாகவும் விடுதலைப் புலிகளின் ஊடகப்பிரிவுப் பேச்சாளர் ஒருவர் நேற்றிரவு தகவல் வெளியிட்டார். (ஐ)

## வெடிமருந்து கடத்தி வந்த படகே வழிமறிக்கப்பட்டது என்கிறது அரசு

### தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிக்கை

கொழும்பு,பெப்.12

மன்னார் கடற்பரப்பில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

பெருந்தொகையான வெடிப்பொருள்களை இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிக்குக் கடத்தி வரமுயன்ற படகு ஒன்றை கடற்படையினர் சோதனையிட முயன்றபோதே அந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்ட இந்த அறிக்கையில், கடல் சம்பவத்துடன் விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்தும் வகையில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை.

கடந்த பத்துத் தினங்களுக்கு முன்னர் இதே பகுதியில் மீன்பிடிப் படகு ஒன்றில் இருந்து சுமார் 61 ஆயிரம் 'டிட்டொனேட்டர்' வெடிப்பொருள்களைக் கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. (ஐ)

## ஜெனீவாப் பேச்சுக்கு சகலருமே ஆதரவு: கடல் சம்பவம் அதைப் பாதிக்கமாட்டாது!

### இராணுவப் பேச்சாளர் இப்படிக் கூறுகிறார்

கொழும்பு,பெப்.12

அரசு, கடற்படை, இராணுவம் என்று சகல தரப்பினருமே சமாதானப் பேச்சுக்களை ஆதரிக்கின்றனர். அந்தவகையில் மன்னார்க் கடலில் இடம்பெற்றிருக்கும் சிறு சம்பவம், நடைபெறவிருக்கும் பேச்சுக்களைப் பாதிக்கமாட்டாது.

- இப்படிக் கருத்து வெளியிட்டிருக்கின்றார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க.

மன்னார் கடற்பரப்பில் படகு ஒன்று வெடித்துச் சிதறிய சம்பவம் தொடர்பாக அவர் கூறியதாவது:

இரணைதீவுக்கும் தலைமன்னாருக்கும் இடையே - இரணைதீவுக்கு தென்மேற்காக 8 கடல்மைல் தொலைவில் - இச்சம்பவம் நடைபெற்றிருக்கின்றது.

அங்கு பன்முக செயற்திறன் கொண்ட மீன்பிடிப்படகு ஒன்று விடத்தல்தீவுக் கடற்கரையை நோக்கி வந்துகொண்டிருந்தது.

அப்போது அங்கு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையின் டோறாப் படகொன்று அந்த மீன்பிடிப்படகை நிறுத்துமாறு உத்தரவிட்டது. அந்த மீன்பிடிப்படகில் 4 பேர் இருந்தனர். அதனை அடுத்து அப்படகைக் கடற்படையினர் சோதனை செய்ய முற்பட்டபோது, படகில் இருந்தவர்கள் தமது படகை வெடிக்கவைத்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கடற்படைச் சிப்பாய்

(16ஆம் பக்கம் பார்க்க)

## 119 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தின!

கொழும்பு,பெப்.12

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இதுவரை 119 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, மாத்தறை உட்பட 22 மாவட்டங்களில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இத்தேர்தலுக்கான கட்டுப்பணத்தை எதிர்வரும் 15ஆம் திகதி வரை செலுத்த முடியும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## புதுவையில் பெப். 18ஆம் திகதி ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு

புதுவை,பெப்.12

இந்தியாவின் புதுவை ஜூனியன் பிரதேசத்தில் பெப்ரவரி 18ஆம் திகதி ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு நடைபெறவுள்ளது.

புதுவை மாநில தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது.

புதுவை மாநிலத் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவரும் தமிழீழ விடுதலை ஆதரவாளருமான லோகு அய்யப்பன் மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.

இந்த மாநாட்டில் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு செயல்களத்தில் ஆதரவு தெரிவித்து சிறையேகிய தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தமிழ்நாட்டுத் தலைவர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் கடத்தப்பட்ட தமிழ் வர்த்தகர் விடுவிப்பு

கொழும்பு,பெப்.12

கடந்த புதன்கிழமை கொழும்பில் கடத்தப்பட்ட பிரபல தமிழ் வர்த்தகர் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்.

செட்டியார் தெருவில் உள்ள நகைக்கடை ஒன்றின் உரிமையாளரான இவர் கடந்த புதனன்று அவரது வீட்டின் அருகே வைத்து இனந்தெரியாத நபர்களால் வான் ஒன்றில் கடத்திச்செல்லப்பட்டிருந்தார். இவரை விடுவிப்பதற்கு 2 கோடி ரூபா தரவேண்டும் என்று கடத்தல்காரர்கள் கேட்டிருந்தனர். எனினும், நேற்றுமுன்தினம் இரவு கடத்தல்காரர்கள் இவரை விடுதலை செய்துள்ளனர்.

வான் ஒன்றில் ஏற்றிவரப்பட்டு பொரளைப் பகுதியில் வைத்து இவர் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்.

உடல் நலக்குறைவுக்கு உள்ளாகியிருக்கும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மற்றும் தலைநகரிலும் பணியாளருக்கு கடத்தல் அச்சுறுத்தல்

### தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தகவல்

மட்டக்களப்பு,பெப்.12

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அம்பாறை மாவட்டப் பணியாளர்களுக்கும் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறையைச் சேர்ந்த தமது பணியாளர்களுக்கும் கடத்தல் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி. ரெஜி தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் சிட்னியில் ஒலிபரப்பாகும் 'தமிழ் முழக்கம்' வானொலிக்கு அளித்த செவ்வியில் ரெஜி இத்தகவலைத் தெரிவித்தார்.

அம்பாறையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் தமது பணிகளை நிறுத்தாவிட்டால் மட்டக்களப்புப் பணியாளர்களைப் போல கடத்தப்படுவார்கள் என்றும் அம்பாறை மாவட்ட புனர்வாழ்வுக்கழக அலுவலகத்துக்குத் தொலைபேசியூடாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

கொழும்பு தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகத்துக்கும் இத்தகைய அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் ரெஜி மேலும் தெரிவித்தார்.

(ஐ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண நோய்களுக்கும் யாழ். ஆஸ்பத்திரிக்கு வராமல் கிராமிய மருத்துவமனைகளையும் மக்கள் நாடவேண்டும்!

## போதனா வைத்தியசாலை நிபுணர்கள் சிறப்பாக பணியாற்ற இது உதவும் என்கிறார் பணிப்பாளர்



யாழ்ப்பாணம்,பெப்ரவரி12

"மக்கள் தமக்கு ஏற்படுகின்ற சாதாரண சிறுசிறு நோய்களுக்கும் பெரியாஸ்பத்திரிக்குத்தான் போகவேண்டும் என்று நினைக்கின்றார்கள். இந்த நிலை மாறவேண்டும் சாதாரண நோய்களுக்கு அருகிலுள்ள வேறு அரசினர் ஆஸ்பத்திரிகளை நாடலாம். அங்கு சிகிச்சை பெற்று, தேவையேற்படின் அங்குள்ள மருத்துவரின் ஆலோசனையின் பிரகாரம் போதனா வைத்தியசாலைக்கு வருவதுதான் நல்லது"

இதன்மூலம் யாழ்.ஆஸ்பத்திரியில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளைத் தவிர்த்து நிறைவான சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக பணியேற்றிருக்கும் வைத்திய கலாநிதி அந்தோனிப்பிள்ளை எட்மன் ஞானசோதி.

54 வயதான டாக்டர் ஞானசோதி யாழ்ப்பாணம் பாங்ஷால் வீதியைச் சேர்ந்தவர். 1982 - 84 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ். ஆஸ்பத்திரியில் வைத்தியராகப் பணியாற்றியவர்.

பின்னர் அரச சேவையிலிருந்து விலகிச் சென்ற அவர் மீண்டும் 1995 ஆம் ஆண்டு அரச மருத்துவராகப் பணியாற்றத் தொடங்கினார்.

அப்போதிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலை, அங்கொடை மருத்துவமனை போன்றவற்றிலும் கொழும்பு டி சொய்சா மருத்துவமனையிலும் மருத்துவராகவும் மருத்துவமனை நிர்வாகப் பிரிவு அதிகாரியாகவும் பணியாற்றினார்.

தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார் டாக்டர் ஞானசோதி. ஆஸ்பத்திரியின் நிலைமைகள் தொடர்பாக அவர் உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வி இது.

**கே.:** யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவ ஆளணிப் பற்றாக்குறை இருக்கிறதா...?

**ப.:** இங்கு மருத்துவர்கள் போதியளவில் இல்லாது விடினும் ஓரளவுக்கு இருக்கிறார்கள். விசேட மருத்துவ நிபுணர்கள் கூட இங்கு இருக்கிறார்கள். மிகவும் கஷ்டமான நிலையிலும் அவர்கள் சேவை செய்துகொண்டிருப்பது பெரிய காரியம். அவர்களுடைய சேவை எனக்கு ஆறுதலைத் தருகிறது.

தொழிலாளர்கள் மற்றும் ஏனைய சில ஆளணி வளங்களில் பற்றாக்குறை நிலவுகிறது. பணியாளர்கள் பலரும் போதியளவு இருந்தால் எமது சேவையை மேலும் திருப்தியாகச் செய்யமுடியும் என்று நான் கருதுகிறேன்.

**கே.:** இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்?

**ப.:** இது தொடர்பாக சுகாதார அமைச்சிடம் கேட்க இருக்கிறோம். இதற்கு நாங்களாக உடனடி நடவடிக்கை எடுக்கமுடியாது. அமைச்சு மூலமாக அணுகி அதற்குரிய ஏற்பாட்டை செய்வதற்குத் திட்டமிட்டிருக்கிறேன்.

**கே.:** மருந்து வகைகளின் நிலைமைகள் எப்படி..?

**ப.:** ஓரளவுக்கு பெரும்பாலான மருந்து வகைகள் இங்கு இருக்கின்றன. இங்கு இல்லாத மருந்துகளை ஆஸ்பத்திரியில் தங்கி இருந்து சிகிச்சை பெறுவோருக்கு வெளியிலும் வாங்கிக் கொடுக்க நேரிடுகிறது.

அதற்கு ஆஸ்பத்திரியே பணத்தையும் செலுத்துகிறது.

**கே.:** ஜப்பான் அரசின் உதவியுடன் இந்த ஆஸ்பத்திரியை நவீனமயப்படுத்தி அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டிருப்பதாக அறிகிறோம். அது தொடர்பாக...?

**ப.:** ஆம். அதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருக்கிறது. பழைய - பழுதடைந்த - கட்டடங்களை உடைத்து அவற்றை நவீன வசதிகளுடன் புதிதாக அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

அது எப்போது நடைமுறைக்கு வரும் என்பதை இப்போது என்னால் சொல்லமுடியாது.

**கே.:** சில சந்தர்ப்பங்களில் சில விடுதிகளில் நெருக்கடி ஏற்பட்டு நோயாளர்கள் கட்டில் இன்றி கீழே படுக்கவேண்டிய நிலையும் ஏற்படுகிறது. இது குறித்து என்ன கூறுகிறீர்கள்.

**ப.:** அது ஒரு பொதுவான பிரச்சினை இப்படியான பிரச்சினை இங்கு மட்டுமல்ல எல்லா ஆஸ்பத்திரிகளிலும் இருக்கிறது. ஒரு சந்தர்ப்பத்தில் நோயாளர்கள் அதிகளவில் வருகின்றபோது நெருக்கடி ஏற்படத்தான் செய்யும். எங்களுக்கும் இந்தப் பிரச்சினை இருக்கிறது.

இந்த விடயத்தில் நோயாளர்கள், பொது மக்களிலும் பிழை இருக்கிறது. அதாவது சதாரண - சிறு நோய்கள் என்றாலும் இங்கு வந்து சிகிச்சை பெறவேண்டும் என்ற மன நிலை அவர்களிடம் இருக்கிறது. சதாரண காய்ச்சலுக்குக்கூட இங்குதான் வருகிறார்கள்.

சாதாரண நோய்களுக்கு கிராமப் புறங்களில் உள்ள சிறிய அரசினர் வைத்தியசாலைகளுக்குச் சென்று அங்கு சிகிச்சை பெறலாம் அங்குள்ள வைத்தியர்களிடம் ஆலோசனை பெற்றுக்கொண்டு தேவையானால் இங்கு வரலாம்.

அப்படி ஒரு நிலை ஏற்படுகின்றபோது இங்கு வார்ட்டுகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கையும் குறைவடையும் இதனால் இங்கு பணியாற்றுவோரின் அதிகமான வேலைப்பழுவும் குறையும் சாத்தியம் உண்டு. இதன் மூலம் தமது சேவையை அவர்கள் மேலும் திறம்படச் செய்யமுடியும் அதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். (த)

## சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நேற்று பணிப் புறக்கணிப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.போதனா மருத்துவமனையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தங்கள் கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு கோரி நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றைய அடையாள பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தின் மூலம் தமது கோரிக்கையை ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தியிருப்பதாவும் -

தமது கோரிக்கை ஏற்கப்படாவிட்டால் தொடர்ச்சியாகப் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் இறங்கநேரிடும் என்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

நீண்டகாலமாக சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் எங்களுக்கு நாள் ஒன்றுக்கு 250 ரூபாவே வேதனமாகத் தரப்படுகிறது. இது எமக்குப் போதுமானதாக இல்லை - என்று சுத்திகரிப்புத் தொழிலாளர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-14-15)

## ஆஸ்பத்திரி பாதுகாப்பு ஊழியர் தாக்கப்பட்டுப் படுகாயம்!

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.போதனா மருத்துவமனையின் சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுக் கடமையில் இருந்த சமயம் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தார்.

ஊதிய அதிகரிப்புக் கோரி நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் சிலரே பாதுகாப்பு உத்தியோகத்தரைத் தாக்கிக் காயப்படுத்தினர் என்று கூறப்படுகிறது.

போதனா வைத்தியசாலையின் பிரதான வாயில் அருகே உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் அறைக்குள் மரப் பலகைச் சட்டங்களுடன் அத்துமீறிப் பிரவேசித்த சிலரே பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கண்டபடி தாக்கினர் என்று மருத்துவமனைப் பொலீஸாரிடம் முறையிடப்பட்டிருக்கிறது.

சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தரான சுப்பிரமணியம் கருணேஸ்வரன்(வயது 45) என்பவரே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருக்கிறார்.

பலாத்காரமாக மருத்துவமனைக்குள் நுழைய முயன்ற சுத்திகரிப்புத் தொழிலாளர்களை ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் பணிப்பின் பேரில் பாதுகாப்பு ஊழியர்கள் தடுத்துநிறுத்தி இருந்தனர். (ஐ-14-15)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.12

'அன்னை இல்லம்' உளவளத்துணை உளவியல் அறிவூட்டும் நிறுவனத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு விழா இன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்னை இல்லத்தில் இடம்பெறவுள்ளது. (ஐ-14)

## பரதநாட்டிய அரங்கேற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.12

புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மாணவி ஜனரஞ்ஜனி தவரட்ணத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவியான இவர், புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியில் திருமதி சாம்பவி கண்ணதாசனின் நடன மாணவியுமாவார். (ஐ-202)







வவுனியா மாவட்டம் புதூர் பகுதியில் காட்டு யானை ஒன்று பாழடைந்த கிணறு ஒன்றுக்குள் தவறுதலாக வீழ்ந்துள்ளது. இந்த யானையைப் பத்திரமாக மீட்கும் முயற்சியில் தமிழீழ வனவளப் பிரிவினர், தமிழீழ காவல்துறையினர் அப்பகுதிப் பொதுமக்களுடன் இணைந்து தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

புதூர் நாகதம்பிரான் ஆலயப் பகுதியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காட்டுப் பகுதியில் இருந்த கிணற்றிலேயே இந்த யானை வீழ்ந்துள்ளது.

யானை கிணற்றினுள் வீழ்ந்திருப்பதைக் கண்ட அப்பகுதிப் பொதுமக்கள் தமிழீழ காவல்துறையினருக்கும் தமிழீழ வனவளப் பிரிவினருக்கும் அறிவித்ததையடுத்து அப்பகுதிக்குச் சென்ற காவல்துறையினரும் வனவளப் பிரிவினரும் பொதுமக்களின் உதவியுடன் பாரம் தூக்கி மூலம் யானையை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழீழக் காடுகளின் சொத்தான யானை பாதுகாத்துப் பேணப்படவேண்டிய ஒன்று என இம்மீட்புப் பணிகளில் ஈடுபடுகின்ற தமிழீழ வனவளப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர். கிணற்றில் வீழ்ந்து அவதியுறும் யானையையும் அங்கு இடம்பெறும் மீட்புப் பணிகளையும் [illegible] சோ.தங்கன் நேரில் சென்று பார்வையிட்டார். மீட்பு முயற்சியில் ஈடுபட்டிருப்போரைப் படங்களில் காணலாம். (ஐ)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# கற்றலுக்காகப் போராட்டம் போராட்டத்துக்காகக் கற்றல்

சூடாநாட்டில் மாணவர்கள், ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பெரும் குந்தமாகப் படையினரின் நடவடிக்கைகள் அமைந்திருக் கின்றன. பாடசாலைச் சூழலில் படையினரின் சோத னைச் சாவடிகள், பிரசன்னம் போன்றவை இருப்பதால் இளம் மாணவர்கள் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகின் றனர். இயல்பாகக் கற்றலுக்கான வசதி - உரிமை - அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு ஒன்று, இலங்கை கல்வி, உயர்கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜயந்துக்குத் தெரிவித்திருக் கின்றது. தூதுக்குழு சுட்டிக்காட்டிய விடயங்களை ஏற்றுக்கொண்ட கல்வி அமைச்சர், படையினரின் நெருக்குவாரங்கள் கொஞ்சம், கொஞ்சமாகக் குறைக் கப்பட்டு - படிப்படியாக நீக்கப்பட்டு - இயல்புநிலை ஏற்படுத்தப்படுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என உறுதியளித்திருக்கின்றார் என்றும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

வடக்கு - கிழக்கில் படையினரின் சோதனைகள், கெடுபிடிகள், கைதுகள் போன்றவை அதிகரித்திருக் கின்றன. இளம் சமூகத்தினர் - குறிப்பாக - மாணவர் கள் படையினரின் இலக்காகுகின்றனர். கற்றலுக்கான இயல்புநிலை மாணவ சமூகத்துக்கு மறுக்கப்பட்டு வருகின்றது.

பிரிட்டிஷ் காலனித்துவத்திலிருந்து இலங்கைத் தீவு விடுபட்டு ஆட்சி அதிகாரம் சிங்களப் பெரும்பான்மை யினர் வசம் ஒப்படைக்கப்பட்ட காலத்திலிருந்து, பேரினவாதம் சிறுபான்மையினரான தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, உரிமைகளைப் பறித்து தனது எதேச் சாதிகாரத்தை செலுத்திவருகின்றது.

தமிழர்களுக்கு எதிரான மொழி உரிமைப் பறிப்பு, வேலைவாய்ப்பு உரிமை மறுப்பு, தாய் மண் அபகரிப்பு என்ற வரிசையில் கல்வி கற்கும் உரிமை மறுப்பும் குறிப்பிடத்தக்கது.

உயர்கல்வி வாய்ப்பை திறமை அடிப்படையில் வழங்கும் முறையை மறுத்து, மாவட்ட ரீதியில் தெரிவு என்ற முறையை நடைமுறைப்படுத்தி, தமிழர்களின் கல்வி உரிமையைத் திட்டமிட்டு பறித்தபோதே, உரிமைக்கான தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பி, மூர்க்கம் பெற்றது.

ஒரு வகையில் பார்த்தால், இளம் தமிழ்ச் சமூகத் துக்கு எதிரான பெரும்பான்மையினரின் கொடூரப் போக்கே, தனிநாட்டு விடுதலைக்கான தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை உக்கிரம் கொள்ளவைத்தது. இந்த அடிப்படை உண்மையைப் பேரினவாதம் தொடர்ந்து மறந்து - மறுத்து - செயற்பட்டு வருவது அதன் அபத்தப் போக்காகும்.

'கற்பதற்காகப் போராடுவோம். போராடுவதற்காகக் கற்போம்' - என்ற புதிய பரிமாணத்துக்குள் ஈழத்தமிழ் மாணவர்களின் கல்வித்துறை நகர்ந்திருப்பது இன் றைய நிலைமை. சிங்கள ஆட்சியாளர்கள் இதை இன் னும் புரிந்து கொள்ளாமலிருப்பது வேடிக்கைதான்.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் தமிழ் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறாக அரசுப் படை களின் இராணுவச் செயற்பாடுகள் பலவந்தமாகத் திணிக்கப்படுவது, இயல்பாகவே அந்த அத்துமீற லுக்கு - அடாவடித்தனத்துக்கு - எதிரான ஆக்ரோஷப் போக்கை இளம் மாணவர்கள் மனதில் விதைக்கின்றது என்ற உண்மையைப் புரிந்துகொள்ளாமல், தனக்குத் தானே வினை விதைத்துக்கொண்டிருக்கின்றது கொழும்பு ஆட்சித் தலைமை.

தமிழர் தாயகத்தில் பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் இளம் சிறார்களில் இருந்து பல்கலைக்கழகத் தில் கல்வி பயிலும் உயர்கல்வி மாணவர்கள் வரை அனைவரும் தமது அன்றாடக் கல்விச் செயற்பாடுகள் இடையே துருத்திக் கொண்டு - இடையூறாக - கெடுபிடியாக - நிற்கும் இராணுவ ஆக்கிரமிப்பை தினசரி சந்திக்கும் நிலைமையே இங்கு நீடித்து வருகின்றது.

வளரும் இளம் பயிரின் மனதில் பட்டறிவாகக் கிடைக்கும் இந்த அனுபவம் இயல்பாகவே அவர்களை 'போராட்டத்துடன் கல்வி' என்ற மனநிலைக்கு இட்டுச் செல்கின்றது.

இந்தத் தாற்பரியத்தைப் புரியாமல், கல்விச் செயற் பாடுகளுக்கு எதிரான தனது படைகளின் கெடுபிடி களை மேலும் மேலும் தீவிரப்படுத்துவதன் மூலம், இளம் தமிழ்ச் சமூகத்தை தனக்கு எதிரான போராட் டத்தின்பால் தன்னை அறியாமலேயே மேலும் மேலும் திருப்பி விட்டுக் கொண்டிருக்கின்றது சிங்கள ஆட்சித் தலைமை.

இவ்விடயத்தில் இனிமேலும் அது திருந்தும் என எதிர்பார்ப்பது வெறும் நப்பாசைதான்!

# யுத்த அச்சுறுத்தலைத் தடுக்கும் வகையில் ஜெனீவாப் பேச்சில் சாதகமான முடிவு தேவை

## அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் தீர்மானம்

கொழும்பு, பெப்.12

யுத்த அச்சுறுத்தலைத் தடுக்கும் வகையில், ஜெனீவாப் பேச்சுக்களில் சாதக மான முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது அமெ ரிக்கப் பிரதிநிதிகள் சபை.

ஜனநாயக காங்கிரஸின் உறுப்பின ரான பிராங்பலொன் பிரதிநிதிகள் சபை யில் இந்தத் தீர்மானத்தை தாக்கல் செய் தார். இதனைஆராய்ந்த மேற்படி பிரதி நிதிகள் சபை அந்தத் தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றியது.

அந்தத் தீர்மானத்தின் விவரம் வரு மாறு:

இலங்கையில் மீண்டும் ஆயுதப் போராட்டத்தைத் தடுக்கும் வகையில் ஜெனீவாவில் நடைபெறும் பேச்சு களில் சாதகமான சூழ்நிலையை ஏற்ப டுத்த வேண்டும் என்று இலங்கை அர சையும் விடுதலைப் புலிகளையும் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆசியாவின் மிகப் பழமையான நாடாகவும் அமெரிக்காவுடன் நெருங்கிய நட்பு நாடாகவும் இலங்கையுள்ளது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான 20 ஆண்டு காலப் போரினால் 64 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ளனர்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தி டப்பட்ட பின்னர் மிக மோசமான இரத் தம் தோய்ந்த மாதமாக 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மாறியது. இலங்கை அரச படையினருக்கு எதி ரான தொடர்ச்சியான கிளைமோர்த் தாக்குதல்களும் தற்கொலைத் தாக்கு தல்களும் விடுதலைப் புலிகளால் நடத் தப்பட்டன.

இலங்கை யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல் தொடர்பாகவும் வன்முறைச் சம் பவங்கள் தொடர்பாகவும் அமெரிக்கா கவலை கொள்கிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண காலக்கெடு விதித்தும் தீர்வு காணாவிட் டால் சுயநிர்ணய போராட்டத்தை தீவி ரப்படுத்தவுள்ளதாக விடுதலைப் புலி களின் தலைவர் வேலுப்பிள்ளை பிர பாகரன் அண்மையில் அறிவித்திருந் தார்.

இலங்கையில் மீண்டும் யுத்தம் ஏற் பட்டால் மரபு வழியற்ற ஆயுதங்களும் தற்கொலைத் தாக்குதல்களும், இதர பயங்கரவாத யுக்திகளும் விடுதலைப் புலிகளால் கடைப்பிடிக்கப்படக் கூடும். இதனால் இலங்கைக்கு பேரழிவு ஏற்ப டுவதுடன் பிரதேச பாதுக்காப்பில் தாக் கம் ஏற்படும்.

ஜெனீவாவில் யுத்த நிறுத்த ஒப்பந் தத்தை வலுப்படுத்துவதற்கான பேச்சு கள் பெப்ரவரி மாதம் தொடங்குகிறது. அமைதிப் பேச்சுக்கள் தொடர்ந்து நடை பெற்றாலும் மீண்டும் ஆயுதப் போராட் டம் தொடங்கப்படும் சூழ்நிலையானது பாரிய அச்சுறுத்தலாகும். ஆகையால், அதற்கு தீர்வு காணவேண்டும்.

ஆயுதப் போராட்டம் மீண்டும் தொடங்குவதைத் தடுக்க அமைதிப் பேச்சுகளில் சாதகமான சூழ்நிலையை உருவாக்கவேண்டும். யுத்தநிறுத்த ஒப் பந்தத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்த வேண்டும்.

அமைதியை மீளக்கட்டியெழுப்பி இலங்கையின் எதிர்காலத்தைப் பாது காக்க வேண்டும் என்ற இந்த பிரதிநிதி கள் சபையானது இலங்கை அரசையும் விடுதலைப்புலிகளையும் கேட்டுக் கொள்கிறது என்று அந்தத் தீர்மானத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

ஆழிப்பேரலை பாதித்தோருக்காக நிறுவப்பட்டு வரும்

# வீட்டுத் திட்டப் பணிகளைத் துரிதப்படுத்துமாறும் முன்னேற்ற அறிக்கை தருமாறும் அரச அதிபர் பணிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.12

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட மக்களுக்காக மேற்கொள்ளப் பட்டு வரும் வீட்டுத்திட்டப் பணிகளைத் துரிதப்படுத்துமாறும் -

அது தொடர்பான அறிக்கைகளை உட னுக்குடன் தமக்கு அறியத்தருமாறும் -

யாழ்.அரச அதிபர் சம்பந்தப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அறிவுறுத்தி யுள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட மக்களுக்காக நாடளாவிய ரீதி யில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டுத் திட்டப் பணிகள் மிகவும் மந்தகதியில் இடம்பெற்று வருவதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து திறைசேரியின் செயலாளர் ஜே.பி.ஜெயசுந்தர ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மாவட் டங்களின் அரச அதிபர்களுக்கு சில பணிப்புரைகளை விடுத்திருந்தார்.

வீடமைப்புத் திட்டத்தை மேற்கொள் ளும் தொண்டு நிறுவனங்கள், எதிர் வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் எத் தனை வீடுகளைக் கட்டி முடிக்கக்கூடி யதாக இருக்கும்.

குறிப்பிட்ட கால வரையறைக்குள் ஒவ்வொரு மாதமும் எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்படும்.

அவ்வாறு குறித்த கால எல்லைக்குள் முடிக்கப்படாத வீடுகள் குறித்த முடிவு என்ன? என்பவற்றை உள்ளடக்கிய கால அட்டவணை ஒன்றைத் தயாரித்து தமக்கு உடன் அனுப்பிவைக்குமாறு திறை சேரிப் பணிப்பாளர் அரச அதிபரிடம் கோரியுள்ளார்.

இதற்கமைய, யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட பிரதேசங்களில் வீடமைப்புத் திட்டங்களை மேற்கொள்ளும் தொண்டு நிறுவனங்கள் மேற்குறித்த கால அட்ட வணையைத் தயாரித்து தமக்கு உடன் அனுப்பிவைக்கவேண்டும் என்று யாழ். அரச அதிபர் கே. கணேஸ், தொண்டு நிறு வனங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடி தத்தில் கோரியுள்ளார். (எ-202-203)

# வடமராட்சியில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்கிறது

வடமராட்சி,பெப்.12

வடமராட்சிப் பிரதேசத்தில் சட்ட விரோதமாக மணல் அகழ்வு தொடர்கிறது.

பிரதேசத்தில் மண்வளம் கொண்ட வல்லிபுரம், துன்னாலை கிழக்கு, குடத் தனை ஆகிய இடங்களில் சட்டவிரோ தமாக மணல் அகழப்பட்டு லொறிகள், டிராக்டர்களில் கடத்தப்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

முடிக்குரிய காணிகளிலிருந்து மட்டு மன்றி, தனியாருக்குச் சொந்தமான காணி களிலிருந்தும் இவ்வாறு மணல் அகழப் பட்டு வருகின்றது.

மணல் அகழ்வது, அதனை எடுத்துச் செல்வது தொடர்பாக முறையான நடை முறை தற்போது இன்மையால் சட்ட விரோத மணல் அகழ்வு அதிகரித்துள்ள தாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத மணல் அகழ்வினால் நிலங்கள் தாழ்நிலங்களாக மாறக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக அச்சம் தெரி விக்கப்படுகிறது. (எ-173)

# தியாகராஜ சுவாமிகளின் 159 ஆவது ஆராதனை விழா

## நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இன்று

யாழ்ப்பாணம்,பெப்.12

வட இலங்கைச் சங்கீத சபை நடத் தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமி களின் 159 ஆவது ஆராதனை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நல் லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை (நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியால யம்) மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளரும் சபையின் தலைவரு மான வே.தி.செல்வரத்தினத்தின் தலை மையில் நடைபெறும் இந்த விழாவில் இசைக் கலைஞர்கள், தேர்வுக்குத் தோற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொள்வர்.

மங்கள விளக்கேற்றல், இறை வணக்கம், மங்கள இசை என்பவற் றைத் தொடர்ந்து சற்குரு ஸ்ரீ தியாராஜ சுவாமிகளின் பூசை, தலைமையுரை, பஞ்சரத்தின கீர்த்தனாஞ்சலி, "சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் இசைத் தொண்டு" என்ற தலைப்பில் கலாபூஷ ணம் எல்.திலகநாயகம் போல் நிகழ்த் தும் பேச்சு, பக்கவாத்தியங்கள் சகிதம் இசைக் கலைஞர்கள் வழங்கும் இசைக் கச்சேரி என்பன இடம்பெறும். (எ)

### நாளை

மாசி 01
திங்கட்கிழமை
13.02.2006
திதி: பூரணை
முற்பகல்: 10.55 வரை,
நட்சத்திரம் : ஆயிலியம்
முற்பகல் : 10.07
சுபநேரம் : 12.34 - 02.04
ராகுகாலம் :08.04 - 09.34
(யாவும் பழைய நேரப்படி)

# வலி.கிழக்குப் பிரதேச நிர்வாகம் 2 அலகுகளாகப் பிரிக்கப்படும்

## அச்சுவேலியில் புதிய பிரதேச செயலகம் அமையும்

யாழ்ப்பாணம் பெப்.12

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிர தேச செயலாளர் பிரிவை இரண்டு நிர் வாக அலகுகளாகப் பிரிப்பதற்கு பிரதேச மக்கள் ஒப்புதல் வழங்கியுள்ளனர்.

கடந்த 2ஆம் திகதி வலி.கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடை பெற்ற பிரதேச நிர்வாகத்தை இரண்டு அலகுகளாகப் பிரிப்பதற்கான கூட்டத் தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி, தலைமைப்பீட உதவி அரச அதிபர் வே.வீரபத்திரபிள்ளை, கோப் பாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி சா.அஞ்சலிதேவி உட்படப் பலர் இதில் கலந்துகொண்டனர்.

இதன்படி, வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவை இரண்டு நிர்வாக அல குகளாகப் பிரித்து கோப்பாய், அச்சு வேலி ஆகிய இடங்களில் தனித்தனி பிர தேச செயலகங்களை இயக்குவது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அச்சுவேலிப் பகுதிப் பொதுமக்களின் பிரதிநிதிகள், அச்சுவேலியில் புதிய பிர தேச செயலகத்தை இயக்குவதற்குத் தேவையான காணி, கட்டட வசதி களைத் தாம் ஏற்படுத்தித் தருவதாகத் தெரிவித்தனர்.

தென்மராட்சி மற்றும் வலி.கிழக்கு பிரதேச செயலக நிர்வாகப் பிரிவுகளை இரண்டு அலகுகளாகப் பிரிப்பதற்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளமை தெரிந்ததே. (எ)

### உதயவாக்கு

நேர்மையானவர்களை தீமை செய்யத் தூண்டுபவர் தாம் வெட்டிய குழியில் தாமே விழுவர்.

- சாலமோனின் நீதிமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புதிய மணவறை விற்பனைக்குண்டு. தொடர்பு: பர்ராயசிங்கம், வ.ஞானசம்பந்தன், மூன்று கோயிலடி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (46807)

**NPMA XXX** தொடரிலக்கமுடைய பஜாஜ் பல்சர் **(5000km ஓடியது)**, **Sharp Washing Machine,** ஆண்களுக்கான புதிய துவிச்சக்கர வண்டி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **0776365950.** (40818)

நல்லின யமுனாபாரி ஆடுகளும் கிடாய்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (46820)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

1½ வயது ஆண் ஜேர்மன் Shepard, 1½ வயது பெண் அயிர்ஸ், 8 அடி இரும்புக் கூட்டுடன் சேர்ந்து மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. சிறீரங்கன்.
**T.P.: 0777- 222180.** (சி/47769)

## வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்கு

**No. 15,** வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணத்தில் மூன்று மாடிக் கட்டட வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. தொடர்பிற்கு: தம்பிப்பிள்ளை, 188B, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். **T.P. 021 222 9397** அல்லது **021 222 9548** என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (வெளிநாட்டு நிறுவனங்கள் விரும்பத்தக்கது). (46595)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரி - நல்லூர் வீதியில் சகல வசதிகளுடன் 6 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: **T.P. No 021 - 2225283** (46805)

நல்லூர்- பெருமாள் கோயில்களை அண்டிய சுற்று வட்டாரங்களில் வயதான ஒருவருக்கு (பெண்) தங்குவதற்கும் சமைப்பதற்கும் ஓர் அறை தேவைப்படுகின்றது. (தண்ணீர், மலசலகூட வசதிகள் அடங்கலாக) தொடர்பிற்கு: 0777609933. (46801)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை. நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (46499)

சுத்திகரிக்கப்பட்ட (தோல் நீக்கிய) புறொயிலர் கோழி இறைச்சி 1kg 300/- கிடைக்கும் இடம் வரணி மிசன் விற்பனை நிலையம் 145, நவீன சந்தை, யாழ்ப்பாணம். **T.P.No. 222 2868** (46824)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்புமருந்து போடப்பட்ட **Original Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 20.02.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை-நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, கரன் - ஆலடி- உடுவில், நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-47786)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அழகும் நற்குணமும் உடைய மணமகளுக்கு 38-46 வயதிற்கிடைப்பட்ட வயதுடைய மணமகன் தேவை. சிறந்த சீதனம் வழங்கப்படும். குறிப்பு: இலங்கை வதிவிடமுள்ள மணமகன் தேவை. விவரங்களுக்கு உதயன் மே/பா இலக்கம் 2803.
(46814)(21.17.11)

## கட்டட நிர்மாணம்

நவீன முறையிலான புதிய கட்டட நிர்மாணம், பழைய கட்டடங்களை உங்கள் விருப்பத்திற்கேற்ப நவீன முறையில் நிர்மாணித்தல், ரெராசோ (Terrazo) பதித்தல் அனுபவமுள்ள கைதேர்ந்த (கொழும்பு) கட்டடக்கலைஞர்கள் மூலம் செய்துகொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: **077 6121643, 077 9046202**
(46649)(21.17.11)

## திருத்துநர் தேவை

T.V. *டெக், றேடியோ மற்றும் மின் உபகரணங்கள் திருத்தும் வல்லுநர் தேவை. கரன் வோச் & றேடியோ 91, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.*
(சி-47833)(21.11.17)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 74ஆம் ஆண்டு, விசாக நட்சத்திரம் 3ஆம் கால், 7இல் செவ்வாய் தோசமுடைய, **M.B.B.S.** டாக்டராக தொழில் செய்யும் மணமகனிற்கு படித்த பண்புள்ள மணமகள் தேவை. குடும்ப விவரம், சாதகக்குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பிற்கு: விளம்பர இல. 2801 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (46611)

இந்து கௌரவ குடும்பம், 1972 இல் பிறந்த, உத்தரம் 2ஆம் பாதம், லண்டனில் ஏழு வருடமாக வதியும் மணமகனிற்கு மணமகள் தேவை. மணமகன் P.R. இல்லாதவர். கனடா, லண்டன், ஜேர்மனியில் P.R. செய்யக் கூடிய மணமகளை எதிர்பார்க்கின்றோம். தொடர்பிற்கு: 077-3086894. (சி/47803)

## திருமண சேவை

தங்கள் சளைக்காத தேடல் **Scandinavi an and Non English Speking Countries** மணமக்களா? திருமண ஒப்பேற்றுத்துறையில் சதாப்தகால நிறைவெய்திய சுயதெரிவு முறை முன்னோடி' திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழுவேல் அமுதனிடம் டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, நோர்வே, சுவிஸ்லாந்து முதலிய நாடுகளுக்குத் தனித்தனி கடிதக்கோப்புத் தொகுதிகள் உண்டு! மேலதிக விவரங்களுக்கு திங்கள், புதன், வெள்ளி நாள்களில் பிற்பகல் மணி 4.30இற்கு மேல் வேல் அமுதனுடன் தொடர்புகொண்டு விசாரித்தறிக! தொலைபேசி **2360488, 4514396.** (சி-47781)

**REFRESH SYSTEM**
* Computer Service/Sales * Video Convertions
* Visiting Cards Making
At your Place
Conduct: Suthumalai South, Manipay.
T.P.: 077 3253104, 077 6279671. (46457)

## விற்பனைக்கு

Management Diary கள் மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் புதிய இந்திய வெளியீடுகளான நாவல்கள், சிறுவர் கதைகள் என்பன விற்பனையாகின்றன.

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை,**
234, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
(சி47714)
(21.11.17)

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலைப்பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையும், உப உணவுமாகும். குருதியில் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்தும் காரணியுடன் விற்றமின் A,C உடன் இரும்பு, நாகம், குரோமியம், கல்சியம், நார்ப்பொருள்கள் போன்ற நன்மை பயக்கக்கூடிய பொருள்களும் உண்டு.
*தொடர்பு:-* **BIOTEC INTERNATIONAL**
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி (பாம் ஸ்கூல் அருகில்)
T.P.021 4590907
32/3, ரெயில்வே அவெனியூ கொழும்பு -05.
T.P.0112 852269
(45514) (21.11.17)

## வீடு வாடகைக்கு

K.K.S. *வீதியில் சம்பியன் லேனுக்கும் பாடசாலைக்கும் அருகிலுள்ள சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். அரச , தனியார் நிறுவனத்துக்கு உகந்தது.*
*தொடர்பு:* T.P.: **077-3174446**
**077-9672552**
(46576)(32.26.19.45)

## மூன்றாண்டு நினைவலைகள்



### வேலுப்பிள்ளை முத்துக்குமாரு

*பிறப்பு:* *1929-04-01*

*இறப்பு:* *2003-01-17*

**திதி: பூர்வபக்க சதுர்த்தி**
**12.02.2006**

கண்கண்ட தெய்வமே அப்பாவே!
வாழ்வில் மாண்புடன் வாழ்ந்து
நாங்கள் சிறப்புடன் வாழ்வதற்கு வழிகாட்டி
உறவுகளிற்கெல்லாம் உற்றதுணையாய் இருந்து
வாழ்ந்து வழிகாட்டி எல்லோரையும் தவிக்கவிட்டு
சென்று ஆண்டுகள் மூன்று ஆகி விட்டதப்பா.
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டும்...

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
-குடும்பத்தினர்.
(சி-47832)(21.17.11)

## உள அபிவிருத்தி ஆலோசனைக்கு ஆசிரியர்கள் தெரிவு

வடக்கு-கிழக்கு தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கு 'சமூக உள அபிவிருத்திக்கான ஆலோசனை, பயிற்சிகளுக்கு 131 பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதில் யாழ். மாவட்டத்தில் 26 ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இது ஒரு வருட காலப்பயிற்சி நெறியாகும்.

இது தொடர்பான சுற்றறிக்கையினை கல்வி அமைச்சு கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

சுற்றறிக்கையின் பிரகாரம் யாழ்ப்பாண வலயத்தில் 6பேரும், தீவக வலயத்தில் 6 பேரும், தென்மராட்சியில் 2 பேரும் வடமராட்சியில் 5 பேரும் வலிகாமத்தில் 7 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இது தொடர்பான கடிதங்களை சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்கள் என்று தெரிவிக்கப் படுகிறது. (த-13)

## திருட்டுப்போன சைக்கிள் மீட்பு

சங்கானைப் பகுதியில் திருட்டுப்போன சைக்கிள்களில் 15 சைக்கிள்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. சங்கானை மற்றும் மானிப்பாய் பொலீஸ் நிலையங்களின் பொலீஸார் கடந்த செவ்வாயன்று இவற்றை மீட்டெடுத்துள்ளனர். மேற்படி சைக்கிள் திருட்டுடன் சம்பந்தப்பட்ட மூவர் கொடுத்த தகவலின் பேரில் சங்கரத்தை துணைவி பகுதியில் இருந்து இவை மீட்டெடுக்கப்பட்டுள்ளன. சைக்கிள்களைப் பறி கொடுத்தவர்கள் உரிய ஆவணங்களுடன் மானிப்பாய் பொலீஸ் நிலையத்துக்குச் சமூகமளித்து தத்தமது சைக்கிள்களை அடையாளம் காட்டுமாறு பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (எ-29)



**COLLEGEVIEW International**
Your **VISA** to the World
Basic Qualification G.C.E. (O/L)

**STUDY IN LONDON**
CANADA, MALAYSIA, SINGAPORE
CYPRUS & INDIA

Special clases for IELTS & Spoken English

**Available Courses**

| | |
|---|---|
| Management | Hotel Management |
| Business Ad. (BBA, MBA, Phds) | Travel & Tourism |
| Marketing | Engineering (Aerospace, Electrical & Electronical etc...) |
| HRM | Medicine |
| Law | Dental |
| Computer Science | Fine Arts |
| IT Networking, | Beauty Culture |
| Pattern Designing & Textile | Shipping Courses, |
| Nursing etc | |

All Courses are available in any field
- April & May Semester க்கான பதிவுகள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
- 15 % விலைக்கழிவுடன் விமானச்சீட்டு, பகுதிநேர வேலைவாய்ப்பு, இலகுவாக செலுத்தக்கூடிய தங்குமிட வசதிக்கட்டணம்.
- 1000 £ Scholarship for UK University

**COLLEGEVIEW International**
(Professional Overseas Educational Consultants & Promoters)
No. 142-1/2, Galle Road, Wellawatta, Colombo 06, Sri Lanka.
Tel : 0 115 672131, 0114 512175 Fax : 0114 512175
Hotline : 0714 245166, 0773 113156
Email : collegeview@visualnet.lk

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

மலேசியா, டோகா, கட்டார், டுபாய் ஆகிய நாடுகளில் உடனடி வேலை வாய்ப்பு

### ஒரு மாதத்தில் பிரயாணம்

★ டோகா, கட்டார், டுபாய்

*கூச்சுவேலை, மேசன் வேலை, பார்பெண்டர்ஸ், எலக்ரிசியன், பிளம்பர், சாரதி,* OFFICE BOY, *விமான நிலையத் துப்புரவுத் தொழிலாளர், பொதி சுமப்போர்* (PORTERS)

★ **மலேசியாவில்**

ஆண்/ பெண் இருபாலாருக்கும்
பின்வரும் துறைகளில் வேலை வாய்ப்பு
சுப்பர் மார்க்கட், கொம்பியூட்டர் கம்பனி,
தையல் வேலை, பொது வேலை,
துப்புரவுத் தொழிலாளர், உதிரிப்பாக உற்பத்தியாளர்

தொடர்பு:

**RAINBOW TRAVELS and TOURS**
32/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0777328219,
021 222 3237.
(c/.47352) (39.11.42)

## மரண அறிவித்தல்

### தையல்நாயகி பாலசிங்கம்



உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட தையல்நாயகி (இரத்தினக்கா) பாலசிங்கம் அவர்கள் 09.02.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சுந்தரம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம்பிள்ளை (உடையார்) - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கோவிந்தனின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் ஆருயிர் மனைவியும் பாலநாயகம், ஸ்ரீபாலன், பாலகுமாரன், பாலச்சந்திரன், பாலரஞ்சன், பாலரமேஸ், பாலபூபதி, பாலஜோதி, பாலரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயும் கோகுலபாலன், நித்தியானந்தன், கிருஷ்ணகோபால், செல்வராணி, ஞானமலர், திலகம், வாசுகி, செல்வி ஆகியோரின் அன்பு மாமியும், சோபியா, சுதன், பிரியா, லக்கி, சத்யன், சபேசன், சஞ்ஜீவன், துர்க்கா, நிறோஜினி, தயாபரன், நித்தியா, காயத்திரி, கஸ்தூரி, சுபா, தவினா, மயூரன், செல்வகுமார், குபேரன், காலஞ்சென்ற சுஜாதா மற்றும் நிசாந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரதீப், சுஜா, யதுஷா, யதுசன், நிசாந்தி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (13.02.2006) திங்கட்கிழமை 4242 **B, Kingston Road,** கனடாவில் அமைந்துள்ள மோட்ச **Funeral Home,** இல் வைக்கப்பட்டு, முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பின் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**பாலநாயகம்** (மகன்)
**பாலகுமார்** (காந்தி- மகன்)
**011 2554037**
**கோவிந்தன்** (தம்பி)

(46816)
(21.17.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாப் பேச்சின் போது எட்டப்படும் முடிவுகளாவது நடைமுறைக்கு வருமா?





ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியாகப் பதவியேற்று மூன்று மாதங்களைக் கடக்கும் நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளை முதற்றடவையாகப் பேச்சு மேசையில் சந்திக்கப் போகின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

ஜே.வி.பி. மற்றும் ஹெலஉறுமய போன்ற பேரினவாதச்சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து - தமிழர்களுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடித்து - சிங்கள மேலாண்மையை வலியுறுத்தி நாட்டின் தலைவராக அவர் தெரிவாகி மூன்று மாதங்கள் கடந்துவிட்டன.

**முதற்பேச்சு**

தமிழர் தரப்புடன் அவர் நடத்தப் போகின்ற முதலாவது பேச்சு நாட்டின் தலை

## யுத்தநிறுத்த உடன்பாடு அமுலாக்கமே பேச்சில் ஆராயப்படும் முக்கிய விடயம்

விதியை மட்டும் அல்ல, அவரது இருப்பையும் தீர்மானிக்கப்போகின்றது.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி கைச்சாத்தான ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை சர்வதேசத்தின் கண்காணிப்பில், மேடுபள்ளங்களைத் தாண்டித் தள்ளாடிய நிலையில் இன்றும் நடைமுறையில் இருக்கின்றது.

அந்த உடன்படிக்கை நான்காண்டைத் தாண்டுமா? அல்லது முறிந்து நாலாம் கட்ட ஈழப்போர் வெடிக்குமா? என்ற கேள்விகள் எழுந்துள்ள சூழலில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சு சுவிற்சர்லாந்து தலைநகர் ஜெனீவாவில் எதிர்வரும் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் நடக்கப்போகிறது.

பதவியேற்றது முதல், ஆசிய நாடு ஒன்றில்தான் பேச்சு என்று மஹிந்தவும் நோர்வேயில் தான் பேச்சு என்று விடுதலைப் புலிகளும் விடாப்பிடியாக வலியுறுத்தி வந்த நிலையில் -

கடந்த மாதம் 23ஆம் திகதி இலங்கை வந்த நோர்வே சமாதானக் குழுவின் தலைவரும் அந்நாட்டின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் ஜெனீவாவில் பேச்சு நடத்த இரு தரப்பினரையும் இணங்கவைத்தார்.

பேச்சுக்கான இணக்கம் ஏற்பட்டவுடன் விடுதலைப்புலிகள், தமது தரப்பில் பேச்சில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளை அறிவித்து, பேச்சில் தமக்குள்ள அக்கறையை, கரிசனையை உடனேயே வெளிப்படுத்தி விட்டனர்.

**அரச தரப்பு பேச்சுக்குழுவில் தொடர்ந்தும் இழுபறி நிலை**

இணக்கம் ஏற்பட்டு மூன்று வாரத்தின் பின் - பெரும் இழுபறிகளுக்குப் பின் ஒருவாறு அரசுத் தரப்புக் குழுவில் இடம்பெறுவோர் விவரங்களை அரசு உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் பேச்சில் கலந்து கொள்ளும் அரச தரப்பின் மூவர் தொடர்பான விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட அமைச்சரும் சட்ட வாதியுமான நிமால் சிறிபால டி சில்வா குழுவின் தலைவராகவும் அனுபவம் வாய்ந்த அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, ரோஹித்த போகொல்லாகம ஆகியோர் உறுப்பினர்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

பேச்சுக் குழுவில் ஐவர் இடம்பெறுவர் என்றும் அவர்களில் ஒருவர் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவார் என்றும் மற்றொருவர் படைத்தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துவார் என்றும் அரசு முன்னர் அறிவித்திருந்தது.

உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ள குழுவில் அவர்கள் தொடர்பான விவரங்கள் வெளியாகவில்லை. அவர்களை நியமிப்பது தொடர்பாக முரண்பாடுகள் தொடர்ந்து நிலவுகின்றன என்று உள் வீட்டுத் தகவல்கள் கசிகின்றன.

**முடிவு எடுக்கக் கூடியோரே பேச்சுக்கு அவசியமானவர்கள்**

எதுவாக இருந்தாலும் 1994 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுப்பிய முடிவுகளைச் செய்ய முடியாதவர்களைக் கொண்ட குழுவாக இல்லாமல் உடனுக்குடன் முடிவுகளை எடுக்கக் கூடியவர்களைக் கொண்ட குழுவை மஹிந்த அனுப்பினால் தான் பேச்சுகள் வெற்றித் திசையை நோக்கி நகரும். இல்லாவிட்டால் பேச்சுகள் தடம் புரளும். இது தான் யதார்த்தநிலையாகும்.

யுத்த நுணுக்கங்களைப் பயன்படுத்தி - யுத்தத்தில் தமது திறமைகளை வெளிக்காட்டி வெற்றிகளைக் குவித்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ராஜதந்திரத்திலும் தாங்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதை கடந்த அரசுடன் நடத்திய ஆறு கட்டப் பேச்சுகளிலும் நிரூபித்து இருந்தனர்.

இந்த நிலையை பட்டறிந்த சிங்களத் தரப்பு விடுதலைப் புலிகளின் குழுவின் திறமையை - மதி நுட்பத்தை - எதிர்கொள்ளத் தக்க வகையில் புதிய வியூகம் ஒன்றை அமைத்துள்ளது.

தற்சமயம் நெருக்கடி நிலைக் குத்தள்ளப் பட்டுள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையில்

## ஒரே இரவில் தீர்வை கண்டுவிடலாம் என்று நினைத்துச் செயற்படுகிறது அரசு

செம்மையான அமுலாக்கம் குறித்து மட்டுமே பேச்சு. வேறு எந்த விடயமும் முதல் கட்டத்தில் பேசப்படாது. எதிர்காலப் பேச்சுக்கள் குறித்து நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது குறித்தும் பேசலாம் என்று விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தமது தரப்பு நிலைப்பாட்டைத் தெட்டத் தெளிவாக வெளியிட்டு விட்டார்.

இந்த நிலையில் தமிழர்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கு ஓர் இரவில் தீர்வைக் கண்டு விடலாம் என்ற எடுப்பில் தெற்கில் நிகழ்வுகள் அரங்கேறுகின்றன.

சர்வகட்சிகளுடன் மாநாடு, பேச்சில் பங்கேற்பவர்களுக்கு விசேட செயலமர்வு, பிரபாகரன் தொடர்பாக இந்திய அறிஞர் எழுதிய நூல் பற்றிய ஆய்வு என பெரும் எடுப்பில் நிகழ்வுகள் தெற்கில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

**பயிற்சி பெறும் அமைச்சர்கள் பிரச்சினையை புரிந்து கொள்வார்களா?**

விடுதலைப் புலிகளின் தலைவரின் வரலாற்றை - மதிநுட்பத்தை - காய்நகர்த்தல்களை - நூலைப் படித்துத் தெரிந்துகொண்டு தான் பேச்சுக்குழு தயாராகிறது என்றால், தமிழர் விவகாரத்தை அகர வரிசையில் இருந்து தான் அரசுத்தரப்பு ஆரம்பிக்கப் போகின்றதா என்று கேள்வி எழுகின்றது.

1977ஆம் ஆண்டு [illegible] லான தாக்குதல்களுடன் ஆரம்பமான விடுதலைப் புலிகள் அமைப்பு கடந்த காலங்களில் நடத்திவந்த உரிமைப் போராட்டத்தின் வரலாறு இந்த அனுபவம் வாய்ந்த அமைச்சர்களுக்குத் தெரியாமல் இருப்பதுதான் வேடிக்கையான விடயம்.

1983ஆம் ஆண்டு கெரில்லாப் பாணியில் திருநெல்வேலியில் தலைவர் பிரபாகரன் தலைமையிலான குழு நடத்திய கண்ணி வெடித்தாக்குதலின் எதிரொலியாக தெற்கில் தமிழர்கள் வகை தொகையின்றி கொல்லப்பட்ட சம்பவத்தை - அவர்களின் கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான உடைமைகள் நாசமாக்கப்பட்ட சம்பவத்தைக் கூட இந்த அனுபவம் வாய்ந்த அமைச்சர்களுக்குத் தெரியாதா?

மரபுவழிப் போர்மூலம் எதிரியிடம் இருந்து பெரும் நிலப்பரப்பைக்கொண்ட தமிழர் தாயகத்தை விடுதலைப் புலிகள் மீட்ட வரலாறு கூட இவர்களுக்குத் தெரியாதா?

கடந்த ஆட்சிக் காலத்தில் ரணில் தலைமையிலான அரசுடன் நடத்திய பேச்சுகளின் விவரங்களைக்கூட அறிய முற்படாதவர்களா இந்த அமைச்சர்கள் என்ற கேள்விகூட எழுப்பப்படுகின்றது.

முன்னர் பேச்சுகள் நடக்கும்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தவர்கள் இவர்கள். பேச்சு முன்னேற்றத்தைத் தடுக்கும் வகையில் அந்தப் பேச்சை விமர்சித்தவர்கள் வரிசையில் இருந்தவர்களும் இவர்கள்தான்.

ஆட்சிப்பீடம் ஏறியவுடன் பழையனவற்றை எல்லாம் மறந்து புதிய சிந்தனையில் அவர்கள் கருத்துகளை வெளியிடுவதுதான் விந்தையாக இருக்கின்றது.

**உடன்படிக்கை அமுலாக்கம் பற்றி மட்டுமே பேச்சு**

ஜெனீவாவில் நடக்கப் போகும் பேச்சு யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் செம்மையாக நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள் பற்றி ஆராய்வதற்கு மட்டும்தான் என்பது திட்டவட்டம்.

ஆனால், இனப்பிரச்சினைக்கு ஏதோ தீர்வுகாணப்போகிறோம் என்ற தோரணையில் பெருத்த எடுப்பில் நடவடிக்கைகள் முனைப்புடன் முன்னெடுக்கப்படுவதையே தெற்குக் களத்தில் காணமுடிகின்றது.

யுத்த நிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்தபின் நடந்த முதலாவது அரச-புலிகள் பேச்சுகளில் இந்த உடன்படிக்கையை எவ்வாறு சீராக நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து ஆராயப்பட்டது.

மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீராக்க ஒரு உப குழுவும் அதிஉயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராய இன்னொரு உப குழுவும் அந்தப் பேச்சில் தெரிவுசெய்யப் பட்டன.

பேச்சின் பின் அந்தக் குழுக்களும் செயற்பட ஆரம்பித்தன. இராணுவத்தரப்பின் கடும் போக்கான நிலைப்பாடுகள் காரணமாக அந்த உபகுழுக்கள் எல்லாம் செயலிழந்துபோயின.

அந்த உடன்பாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்களில் 5 சதவீதமானவைகூட செம்மையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

துணைப்படைகள், அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான முக்கிய விடயங்கள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்படவேயில்லை.

**நெருக்கடிக்குள்ளான யுத்தநிறுத்த உடன்படிக்கை**

இதன் காரணமாக உடன்படிக்கை நெருக்கடிக்குள்ளானது. ஒட்டுப்படைகள் தொடர்பாக உடன்படிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்ட அம்சம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாததால், போராளிகள், பொறுப்பாளர்கள், தளபதிகள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். இதன் எதிரொலியாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பணியாற்றிய் போராளிகள் தமது பிரதேசத்துக்குச் செல்லவேண்டிய நிலை தோற்றுவிக்கப்பட்டது.

போராளிகள் வெளியேறிய நிலையில், பொதுமக்கள் மீதான இராணுவ மற்றும் ஒட்டுக்குழுக்களின் நெருக்குவாரங்கள் அதிகரித்தன. மக்கள் கொந்தளித்து எழுந்து படைகளுக்கு எதிராகச் செயற்படவேண்டிய நிலை தோன்றியது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் மட்டும் தமிழர் தாயகப் பிரதேசத்தில் இடம்பெற்ற வன்செயல்களால் 89 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்;104பேர் காயமடைந்தனர்.




படைத்தரப்பிலும் 77 படையினர் கொல்லப்பட்டனர்; 182 படையினர் காயமடைந்தனர். தாயகப் பிரதேசத்தில் நிலைமை பெரும் மோசமான நிலையை அடைந்து கொண்டிருந்தது.

இந்நிலையில்தான் ஜெனீவாவில் அரசு - புலிகள் பேச்சு நடத்தும் முடிவு வெளியானது. அதன் பின்னும் வடக்கு-கிழக்கில் படையினர் பிரசன்னம், தேடுதல்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்ற போதும், ஓரளவு அமைதி நிலை காணப்படுகின்றது.

**எடுக்கப்படும் முடிவுகளை நடைமுறைப்படுத்துதல் அவசியம்**

இன்றுள்ள அச்ச நிலையைப் போக்கி அமைதியான சூழல் ஒன்று உருவாகவேண்டுமானால், ஜெனீவா பேச்சின் மூலம் உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

அங்கு எடுக்கப்படப் போகும் தீர்மானங்களை தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி களத்தில் நடைமுறைப்படுத்தவேண்டும்; மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும்.

அத்தகைய மாற்றங்களை அவர் கொண்டுவராவிட்டால் ஜெனீவாப் பேச்சு அர்த்தமற்றதாக மாறுவதுடன் களத்தில் நெருக்கடி நிலை தீவிரமாகி நாடு யுத்தத்துக்குள் போய் விழும் சூழல் உருவாகலாம்.

பேச்சுக்குழுவுக்குப் பட்டறை வைத்து பட்டறிவு ஊட்டுவதில் காட்டும் ஆர்வம், பேச் சின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவ திலும் காட்டப்படவேண்டும்.

அப்போதுதான் இந்தச் சின்னச்சிறிய நாட்டில் இனியும் இரத்த ஆறு ஓடுவதைத் தவிர்க்கலாம். இதற்கான காய் நகர்த்தல்களை ஜனாதிபதி எடுப்பாரா? அடுத்து வரும் வாரங்களில் பொறுத்திருந்து பார்ப்போம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

1. எலற்றிக் வெல்டர்
2. லேத்மென் (வெல்டிங் செய்யக்கூடியவர்)
3. பழகுநர்

பழகுநர்களுக்கு தேசிய தொழிற்பயிற்சி சபை ஊடாக சான்றிதழ் பெற்றுக்கொடுக்கப்படும்.

தொடர்பு: **லிங்கோ நுண் பட்டறை**
*109, சட்டநாதர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (46642)



## சிறுகுறிஞ்சா இலை தேவை

சிறுகுறிஞ்சா இலை வெட்டிய உடன் உலராமல் fresh ஆக தேவை. சிறு குறிஞ்சா வைத்திருப்பவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:- **BIOTEC INTERNATIONAL Ltd.**
131/ 2, PALALY ROAD, THIRUNELVELY, JAFFNA.
Telephone 021 4590907.
(விவசாயப்பண்ணைக்கு அருகில்) (46534)(32-16-19)



## பெண் பணியாளர் தேவை

*எமது நிறுவனத்தில் கணக்குப் பதியுநராக பணியாற்ற பெண் பணியாளர் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும்.*
(நகரசபை எல்லைக்குள்ளவர்கள் விரும்பத்தக்கது)

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
*368/B, ஒஸ்மானியா கல்லூரி வீதி,*
*ஒட்டுமடம்.*
T.P.: 021-4590008 (46647)(32-11-19)


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில் | இறைவன் திருவடியில் |
|---|---|
| 12 - 08 - 1965 | 25 - 01 - 2005 |

**திருமதி நாகநந்தினி ஆனந்தகுமார்**
திதி: 12.02.2006

முகம் மலர இனிமையாய் பார்த்து
உளம் மலர இன்சொல் சொல்லி
பாசத்தால் அரவணைத்த எங்களின் அம்மா.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*இந்த நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் வருகைதந்து மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

ப.ஆனந்தகுமார் J.P.
"சிவனடிவாசா"
சந்தை வீதி, உடுப்பிட்டி.
T.P.: 060-2212640,
077-3611256

என்றும் உங்கள் நினைவாக:
கணவர் - பிள்ளைகள் - தாய்,
சகோதரர்கள், மைத்துனர்,
மைத்துனிமார்கள்,
உடன்பிறவா சகோதர, சகோதரிகள்.
U.K., Swiss, Germany.
(அ/47826)(32-11-19)


இதோ அறிமுகப்படுத்துகின்றோம்

## சிதாரா வர்ம தைலம்

உடைவு, முறிவு, வீக்கம், சுளுக்கு, இரத்தக்கட்டு, முழங்கால் மூட்டுவலி, குதிக்கால்வலி ஆகியவைகளுக்கு காலை, மாலை பூசி வரவும்

Reg. Number 10171 ARPR NO. 228
(வெளிப் பிரயோகத்திற்கு மட்டும்)

சந்தைப்படுத்துவோர்:
**சிவா நறுமணப்பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone 222 2567
(c/47681)(21.11.16)


## மன்னாரில் செயலமர்வு

வலி.தென்மேற்கு, பெப்.12

மன்னார் மாவட்டத்தில் பணிபுரியும் சைவசமய பாட ஆசிரியர்களுக்கு யாழ். சைவபரிபாலன சபை ஏற்பாட்டில் இருநாள் சைவசமய கருத்தரங்கும், செயலமர்வும் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இவை நடைபெறவுள்ளன.

மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களின் கல்விப்பணிப்பாளர்களின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள இந்தச் கருத்தரங்குக்கு சைவ பரிபாலன சபையின் தலைவர் கலாநிதி வ.கந்தசாமி தலைமை வகிப்பார்.

(எ-135)

## நூல்வெளியீட்டு விழா

*சுபாஷினியின்*

**'பகிர்வு' (கவிதைகள்)**

இடம்: ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம் - நல்லூர் -
காலம்: இன்று12-02-2006 பிற்பகல் 3.30 மணி(பு.நே.)
*நூல் ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.*
நூல் வெளியீட்டாளர்.
(46810)(2632-19-11)

## மரண அறிவித்தல்

### கெங்காதரன் ஆச்சாரி கணேசலிங்கம்



இல.344, காங்கேசன்துறை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கெ.கணேசலிங்கம் அவர்கள் 10.02.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் கெங்காதரன் - வசந்தமல்லிகா தம்பதியரின் மகனும் நாவற்குழியைச் சேர்ந்த க.சுப்பிரமணியம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் லதாவின் அன்புக் கணவரும் கஜன், நிது ஷன், சஜீவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவலிங்கம், சத்தியலிங்கம், சண்முகலிங்கம், சித்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுரேஸ், ரமேஸ், சுதாகரன், சுசீலா, சுஜாதா மற்றும் சுதாகர், விஜிகலா, சிவகௌரி, மணிமேகலா ஆகியோரின் மைத்துனரும் சகாதேவனின் சகலனும் லலிதாவின் உடன்பிறவாச் சகோதரனும் சிந்துஜன், பிரசாத், பிரியங்கா, சிந்து, பிரவீனா, தேவசுகன்ஜா, சிந்துஜா, செந்தூரன் ஆகியோரின் பெரியப்பாவும் கோபிநாத்தின் சித்தப்பாவும் விதுஷன், தர்சினி, நிகேதினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*344, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(46812)(32-11-19)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## நெஞ்சைவிட்டகலா மூன்றாண்டு நினைவுகள்

அமரர்
### தம்பு சிவபாக்கியன்



| மண்ணில் | மறைவில் |
|---|---|
| 12 . 01 . 1922 | 18 . 01 . 2003 |

*திதி: 12.02.2006 (பூரணை)*

அன்போடு அணைத்து ஆசைமொழி பேசி
ஆன்ற புத்திமதி கூறி அறிவூட்டி
கண்ணியமாய் வளர்த்து கல்வி நிதியும் தந்து
காலமெல்லாம் கருத்தாய் கண்ணின் மணிபோலக் காத்த
எங்கள் ஐயா! எத்தனை உறவுகள் வந்தாலும்
எமக்கு ஐயா என்றழைக்க யாருமில்லையே!
எங்களைக் காத்திரமாய்க் காத்திட
இன்னுமொருமுறை வாருங்கோ ஐயா!

*198, சென் பெனடிக்றோட், அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.*
குடும்பத்தினர்.
(46577)


## ENGLISH மொழியா? உங்கள் பிரச்சினை

இன்றே தபால் மூல ஆங்கிலப் பாடநெறியில் இணையுங்கள்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் நாம் அங்கு உங்களுக்கு ஆங்கில கல்வியை குறுகிய காலத்தில் (அடிப்படையில் இருந்தே) கற்பிக்கின்றோம்

Free **இதோ இலவச அழகிய குடை**

எமது எந்த ஒரு பாடநெறியிலும் இணையும் அனைத்து மாணவ / மாணவிகளுக்கு
- அழகிய குடை ஒன்றும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் (முந்துங்கள்)

மேலதிக விபரங்களுக்கு சுயவிலாசத்துடன் 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறுங்கள்

**UNION EDUCATIONAL INSTITUTE**
P.O. BOX 143, KANDY, SRI LANKA. TEL: 0773 123 523
சில கல்வி நிலையங்கள் போன்று மாணவர்களிடம் பணத்தை அறவிடுவது அல்ல எமது நோக்கம்



# MOTHER AND BABY CARE
## மதர் அன் பேபி கேயார்





- சிறுவர்களுக்கான ஆடைகள்
- சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள்
- பிரசவ தாய்க்கு தேவையான பொருள்கள், ஆடைகள்
- அன்பளிப்பு பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள்

முற்றிலும் இந்தோனேசியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை.

இல.108/1, பலாலி றோட், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொ.பே: 0777 631352


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனை உண்டு; வைத்தியர்கள் இல்லை! அலுவலகம் இருக்கிறது; அதிகாரிகள் இல்லை!!

## வவுனியா வடக்கில் சுகாதார செயற்பாடுகள் சீர்பெறுவது எக்காலம்...?

## ஒன்றை நம்பி இன்னொன்று நிறுத்தம்; இரண்டுமே இல்லாது மக்கள் பரிதாபம்!

வவுனியா வடக்கிலிருந்து ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து வன்னியில் பல பகுதிகளிலும் வாழ்ந்து வந்த மக்கள் ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளால் அப்பகுதிகள் இராணுவத் திடமிருந்து விடுவிக்கப்பட்ட பின்னரும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் அங்கு மீள்குடியமரத் தொடங்கினர். தற்போது சுமார் 3,500 குடும்பங்களை சேர்ந்த 15 ஆயிரம் பேர்வரை வசித்து வருகின்றனர்.

இம்மக்களின் மருத்துவ சேவைகளைப் பூர்த்தி செய்ய 2002ஆம் ஆண்டு வரை தியாக தீபம் திலீபன் மருத்துவமனை நெடுங்கேணியில் இயங்கி வந்தது. இங்கு அரச மருத்துவமனை இயங்குமென சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

அங்கிருந்த தியாகதீபம் திலீபன் மருத்துவமனை (தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டது.) நெடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவமனையாக இயங்கத் தொடங்கியது. சிறிது காலத்தின் பின் அப்போதைய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அங்கு அரசசார்பற்ற நிறுவனமொன்றின் நிதியுதவியுடன் ஆண்கள், பெண்களுக்கான விடுதியையும் மகப்பேற்றுமனையையும் அமைத்து பதிவு வைத்திய அதிகாரி ஒருவரைச் சிலகாலம் ஒப்பந்த அடிப்படையில் நியமித்தார்.

அங்கு தொடர்ந்தும் பணியாற்ற முடியாதென தெரிவித்த அந்த மருத்துவரின் வேண்டுகோளுக்கிணங்க வாராந்தம் ஒரு மருத்துவராகப் பதிவு வைத்தியர்கள் வந்து பணியாற்றிச் சென்றனர்.

அவர்கள் திங்கட்கிழமை வரும்போது நெடுங்கேணி மருத்துவமனை அம்புலன்ஸ் வவுனியா சென்று அழைத்து வரவேண்டும். மீளத் தமது பணிமுடிந்து சனிக்கிழமை வவுனியாசெல்லும்போது அம்புலன்ஸில் கொண்டு சென்று வவுனியாவில் விடவேண்டும். ஞாயிற்றுக்கிழமைகளில் மருத்துவர்கள் அவசர சிகிச்சை வழங்குவதில்லை.

அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரத்தின் படி ஒரு M.B.B.S. தர மருத்துவரின் கீழ் 2 பதிவு வைத்தியர்களும், ஒரு பற்சிகிச்சை நிபுணரும் சேவையாற்றவேண்டும். இருந்தும் ஓர் ஓய்வு பெற்ற உதவி வைத்திய அதிகாரியே ஒப்பந்த அடிப்படையில் இவ்வருடம் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது பிரசவம் இங்கு நடத்தக் கூடாது என வவுனியா பிரதிமாகான சுகாதார சேசைகள் பணிப்பாளர் பணிமனை அறிவித்ததால் இங்கு பிரசவம் நடைபெறுவதில்லை என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இங்கு 44 பணியாளர்கள் அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரப்படி பணியாற்ற வேண்டும் . ஆனால், 8பேர் மட்டுமே பணியாற்றி வருகின்றனர். இம்மருத்துவமனையில் பணியாற்றுமாறு ஒரு M.B.B.S. பெண் மருத்துவர் நியமிக்கப்பட்டார் என்றும் - அவர் ஒரு நாள் வந்து மருத்துவமனையைப் பார்வையிட்டு விட்டு பணிமாற்றம் பெற்று வேறு இடம் சென்று விட்டார் என்றும் - சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் நெடுங்கேணி சுற்றயல் கூறு மருத்துவமனை அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் நவீன வசதிகளுடன் மீள நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. தற்போது 95 வீதமான வேலைகள் நிறைவடைந்துள்ளன. இம்மருத்துவமனை ஏப்ரல் முதலாம் திகதி திறக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

**புளியங்குளம் மருத்துவமனை**

இதே போன்றுதான் புளியங்குளம் பிரதேச மருத்துவமனையும் தற்போது உள்ளது. கடந்த வருடம் ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் பெற்ற மருத்துவர் ஒருவர் பணியாற்றி வந்தார். அவர் பணியிலிருந்து இவ்வருடம் முதல் நின்று விட்டார்.

இதனைத் தொடர்ந்து 23.01.2006 ஆம்திகதியிலிருந்து வாரமொரு மருத்துவர்கள் காலை 10.00 மணிக்கு வந்து 2.00 மணியுடன் தமது கடமையை நிறைவு செய்து செல்கின்றனர். இங்கும் மகப்பேற்றுடன் வெளிநோயாளர்சிகிச்சையும்மேற்கொள்ளப்படவேண்டும். தற்போது மகப்பேறு நடைபெறுவதில்லை.

மேற்படி இரண்டு மருத்துவமனைகளிலும் மகப்பேறு மேற்கொள்ள முடியாதுள்ளமையால் மக்கள் மிக நீண்ட தூரம் சோதனைச் சாவடிகளைத்தாண்டி வவுனியா பொது மருத்துவமனைக்குச் செல்கின்றனர்.

2002 ஆம் ஆண்டு முதல் 1 சுகாதார வைத்திய அதிகாரியையும், குடும்ப நல உத்தியோகத்தர்களையும், 2 பொது சுகாதார பரிசோதகர்களையும் கொண்டு இயங் கிய வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் தற்போது செயலிழந் துள்ளது.

2002 ஆம் ஆண்டு வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவின் கீழ் பணியாற்றி வந்த 3 குடும்பநல உத்தியோகத்தர்களில் இருவர் தமது சொந்த இடமான கிழக்கு மாகாணத்திற்கு தற்காலிகமாக மாற்றலாகிச் சென்று விட்டனர்.

வன்னி மடல்

அவர்கள் இதுவரை வவுனியா வடக்கிற்கு வரவேயில்லை, ஒருவர் நெடுங்கேணி சுற்றயல் கூறு மருத்துவ மனையில் பணியாற்றுகின்றார்.

அனுமதிக்கப்பட்ட ஆளணிவிவரப்படி 1 மேற்பார்வை குடும்பநல உத்தியோகத்தரின் கீழ் 06 குடும்பநல உத்தியோகத்தர்கள் பணியாற்ற வேண்டும். ஆனால் தற்போது குடும்ப நல உத்தியோகத்தர் எவருமே வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் இல்லையென்பது கவலைக்குரியது.

**செயலகங்கள் இயங்கவில்லை**

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை இயங்கவைப்பதற்கென அரசசார்பு நிறுவனமொன்றின் நிதியுதவியுடன் சுகாதார வைத்திய அதிகாரி விடுதி அமைக்கப்பட்டு கடந்த வருடம் திறப்பு விழா நடைபெற்றது. ஆனால் இச்செயலகம் மாதத்தில் ஒரு நாளே இயங்குகின்றது.

நெடுங்கேணி, கனகராயன்குளம் பிரிவுகளின் பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கான பணிமணைகளும் இதுவரை இயங்கவில்லை.

**மக்கள் அவலம்**

அரச மருத்துவமனைகள் திறந்ததன் பின்னர் நெடுங்கேணி தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையும், புளியங்குளம் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையும் நிறுத்தப்பட்டு ஒன்றை நம்பி இன்னொன்றைக் கை விட்டதால் இப்போது இரண்டுமே இல்லாத நிலையில் மக்கள் பரிதவிக்கின்றனர்.

மன்னவன்
(புளியங்குளம் செய்தியாளர்)

திலீபன் மருத்துவமனைகள் இயங்குகின்ற வேளையில் எப்போதும் சிகிச்சை பெற முடிந்தாகவும், தற்போது நீண்டதூரம் அலைந்து திரிய வேண்டியுள்ளதாகவும்,மக்கள் கவலையடைந்துள்ளனர்.

அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் பல லட்சம் ரூபா செலவில் கட்டடங்கள் மட்டுமே கட்டப்படுகின்றன. செயற்திறனுடன் அவற்றை இயங்க வைப்பார் எவருமில்லை.

தாம் எதிர்நோக்கி வருகின்ற இன்னல்களுக்கு எப்போது தீர்வு கிடைக்கும் என்று மக்கள் ஏங்கும் அதேவேளை அக்கறையுள்ள அனைவரும் இந்தப் பிரச்சினைகளில் கவனமெடுத்து இனிமேலாவது சீர்செய்து தருவார்களா என்றும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். ✱

# நவீன மயமாகிறது குடாநாட்டு விவசாயம்; அதற்கு ஒரு முன்னோடி அறுவடை இயந்திரம்



பண்டைய காலத்தில் விவசாயிகள் உடல் வலுவைப் பயன்படுத்தியே பயிர்ச் செய்கை நடவடிக்கைகளைீ மேற்கொண்டு வந்தனர். இவர்கள் தங்களுடைய நுகர்வினை மட் டும் இலக்காகக் கொண்டே விவசாயம் செய்தனர்.

பின்னர் காலப் போக்கில் விவசாய உற்பத்தியைப் பெருக்கி, அறுவடையை சந்தைப் படுத்தி பாரிய இலாபம் ஈட்டு வதற்குரிய செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

பரந்த பரப்பளவு கொண்ட நிரப்பரப்பில் தமது உடல் வலுவைப் பயன்படுத்தி பயிர்ச் செய்கையை விருத்தி செய்வதில் சிரமம் ஏற்பட்டது. இதனால் கூலியாள்களை பணியில் அமர்த்தி பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப் பட்டதன் விளைவாக ஓரளவு உற்பத்தி அதிகரித்து சந்தைப்படுத்தும் முன்னேற்றம் அடைந்தது.

ஆனாலும் தற்போது உற்பத்தியை அதிகரிப்பதில் மட்டுமன்றி விவசாயம் தொடர்பான பெரும்பாலான செயற்பாடுகளில் வெளி நாடுகள் பல வெற்றிகண்டுள்ளன.

அண்மைக் காலத்தில் எமது நாட்டிலும், குறிப்பாக வடக்கு - கிழக்குப் பகுதியிலும் விவசாயிகள் தமது பயிர்ச்செய்கையின் போது நவீனரக இயந்திர சாதனங்களை பயன்படுத்த ஆரம்பித்துள்ளார்கள்.

மேட்டு நிலப் பயிர்ச் செய்கையின் போது விதைகளை நாட்டுவதற்குக் கூட இயந்திரங்க்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நெற்பயிர்ச்செய்கையின் போது இடையூறு விளைவிக்கும் களைகளை அகற்றுவதற்கு இயந்திரங் கள் பயன்படுத்தும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

தற்பொழுது நெல் அறுவடை செய்வதற்கும் அதனை சூடடிப்பதற்கும் விவசாயிகள் இயந்திர சாதனங்களைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளார்கள்.

விவசாய நடவடிக்கையால் மனித வலு குறைக்கப்பட்டு இயந்திர வலு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஒட்டு மொத்தத்தில் விவசாய நடவடிக்கை இயந்திர மயமாக்கப் பட்டு வரு கின்றது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தினால் யாழ்.மாவட்ட கமநலசேவைத் திணைக்களத்தின் ஊடாக விவசாய சம்மேளனத்திற்கு நெல் அறு வடை செய்யும் இயந்திரங்களும், சூடு அடிக்கும் இயந்திரங்களும் வழங்கப் பட்டன.

இவ்வியந்திரச் சாதனங்களை பயிர்ச் செய்கை நடவடிக்கையில் பயன்படுத்தப்படுவதனால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள், பிரதி கூலங்களை யாழ்.மாவட்ட கமநல சேவைத் திணை க்களத்தின் தலைமைப் பீட பெரும்பாக உத்தியோகத்தர் சதாசிவம் உருத்திரேஸ்வரன் உதயனுக்கு செவ்வியளித்தார்.

✱ பயிர்ச்செய்கை நடவடிக்கையில் இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துவதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றிக் கூறுவீர்களா?

• தற்பொழுது எமது நாட்டில் விவசாயிகள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை கூலியாள்கள் பற்றாக்குறையாகும்.

இயந்திரங்களைப் பயன்படுத்துவத னால் இவ்வாறான பிரச்சினைகள் தவிர்க்கப் படுவதுடன் குறித்த நேரத்தில் அதிகூடிய வேலை களை[illegible].

இதனால் [illegible] களைப் பெருக்கிக் கொள்வதன் மூலம் அறுவடைகளை சந்தைப்படுத்தும் தொகைகளையும் அதிகரித்துக் கொள்ளலாம். இதனால் பெருமளவான இலாபம் கிடைக்கும்.

நெல் அறுவடை செய்யும் இயந்தி ரத்தை தேர்ச்சி பெற்ற விவசாயிகள் பயன்படுத்துபவார்களாயின் நாள் ஒன்றுக்கு நான்கு ஏக்கர் பரப்பளவு கொண்ட நெல்லை அறுவடை செய்ய முடியும். மாறாக சாதரணமாகப் பயிற்சி பெற்றவர் கள் இயக்குவார்களாயின் மூன்று ஏக்கர் பரப்பளவு கொண்ட நெல்லை அறுவடை செய்ய முடியும்.

✱ இயந்திரத்தை பயன்படுத்துவதால் அறுவடையில் சேதங்கள் ஏற்பட வாய்ப்புண்டா?

• இது ஒரு முக்கியமான விடயம் தான். இவ்வாறான இயந்திரங்களை அறுவடைக்கு பயன்படுத்துகின்ற போது சில விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது நெற் கதிர்கள் அடர்த்தியாக உள்ள வயல்களில் இவ் இயந்திரத்தைப் பயன்படுத்துவது உகந்தது.

அத்தோடு நெல் நிமிர்ந்து நிற்கக் கூடிய சூழ்நிலையின் போது இயந்திரத்தைப் பாவிப்பதனால் ஒரே தடவையில் நெற்கதிர்களை அறுவடை செய்ய முடியும். இதனால் சேதங்கள் ஏற்படாது.

பயிர்கள் சாய்ந்திருக்கின்ற சூழ்நிலையில் இயந்திரத்தைப் பயன்படுத்துகின்ற போது இயந்திரத்தின் வெட்டும் பகுதிக்குள் உட்படாமல் குறிப்பிட்டளவு நெற்கதிர்கள் தப்பிக் கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

இதனால் சில நாற்றுக்கள் வயலில் மீதியாக இருக்கும். நிலை ஏற்படுகின்ற போது விவசாயிகள் அவற்றை கவனிக்காமல் விட்டால் மட்டுமே விரயங்கள் ஏற்படும்.

✱ சூடடிக்கும் இயந்திரங்களைப் பயன் படுத்துவதால் வைக்கோலில் விரயம் ஏற் படும் அல்லவா?

இதனால் வைக்கோலை உணவாக உட் கொள்ளும் விலங்குகளுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பளிக் கும். இவ் [illegible]ங்கள் என்ன கூறு கின்றீர்கள்?

• [illegible]த அறுவடை செய்யும் இயந்திரம் அதாவது ஒரு இயந்திரத்தால் மட்டும் அறுவடை செய்து சூடடிக்கும் சில இயந்திரங்கள் முன்னர் சில வெளிநாட்டு நிறுவனங்களால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இவ்வாறான இயந்திரங்களைப் பயன் படுத்தும் போதே வைக்கோல் விரயம் ஏற் பட்டது.

ஆனால், தற்போது அறுவடை செய்வதற்கு வேறு இயந்திரமும் சூடடிப்பதற்கு வேறு இயந்திரங்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான தனி இயந்திரங்களை விவசாய செயற்பாடுகளில் பயன்படுத்துகின்ற போது பெருமளவு விரயம் ஏற்படாது என்றே கூறலாம்.

✱ இயந்திரப் பயன்பாட்டால் அதிகளவில் சூழல் மாசடைகின்ற தன்மை ஏற் படாதா?

• இவ்வாறான இயந்திரங்கள் எரி பொருள் கொண்டே இயக்கப்படுகின்றன.

இதனால் வெளிவரும் புகை சூழலில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தாது.

ஏனெனில் மண்ணெண்ணெய் பாவித் தாலே அதிகளவில் புகை வெளியேற் றப்படும்.

இவ்வியந்திரங்களில் வேறு எரிபொருள் களே உபயோகிக்கப்படுகின்றன.

இதனால் வெளிவரும் புகையும் மிகவும் குறைவாக இருக்கும். எனினும் முற்று முழு தாகச் சூழல் மாசுபடாது என்றும் கூறமுடி யாது.

✱ குறைந்தளவான எண்ணிக்கை உடைய இயந்திரங்களை விவசாயிகளின் தேவைக்கு எவ்வாறு பகிர்ந்தளிப்பீர்கள்?

• மூன்று விவசாய சம்மேளனங்களிடம் பதின்மூன்று இயந்திரங்களை வழங்கியுள் ளோம்.

சம்மேளனங்களின் ஊடாக விவசாயி களின் தேவைக்கு இயந்திரங்கள் வாட கைக்கு விடப்படும்.

ஆனால், பெருமளவான நிதி அறவிடப் படமாட்டாது. இயந்திரங்களைப் பராமரிக் கும் செலவுக்கு மட்டும் குறைந் தளவு நிதி அறவிடப்படும்.

✱ விவசாயப் பயிர்ச்செய்கையில் இயந் திரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்று மதி அதிகரிக்கும் என கருதுகின்றீர்களா?

• நிச்சயமாக. எமது நாட்டில் விவசாய நடவடிக்கையின் போது இயந்திர சாதனங் களின் பயன்பாடு அதிகரிக்குமானால் உற்பத்தி அதிகரிக்கும். இதனால் ஏற்றுமதி யும் அதிகரிக்கும். ★

சுதாகரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மீண்டும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் (PARCEL) சேவை

பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், கனடா, நோர்வே, டென்மார்க், சுவிஸ், அமெரிக்கா, ஆஸ்திரேலியா

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்காரப் பொருள்கள், வீடியோ நாடா, கடிதங்கள் ஆகியவற்றை மேற்கூறிய நாடுகளுக்குக் குறைந்த கட்டணத்தில் மூன்று நாள்களில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கலாம். ஒரு பொதி யின் நிறை இரண்டு கிலோவுக்கு மேல் இருத்தல் வேண்டும். 1kg கட்டணம் 1400/=

விசேட விலைக்கழிவு ஐந்து கிலோவுக்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு 1Kg கட்டணம்

லண்டன் 500/=
சுவிஸ்600/=

தொடர்புகளுக்கு:-

**RAINBOW TRAVELS & TOURS**

32 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3237, 0777 328219 (அபிநயா நகைமாடத்துக்கு மேல்)


# குடாநாட்டில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக பாவனையாளர் ஒருங்கிணைப்புக்குழு

யாழ்ப்பாணம், பெப்.12

குடாநாட்டில் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் பாவனையாளர் ஒருங்கிணைப்புக் குழுக்கள் உருவாக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் முன்னெடுக்கப்படுகின்றன.

பாவனையாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்கான தீர்வுகளை மேற்கொள்வதற்கு வசதியாக இந்தக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் கிராம சேவையாளர் பிரிவுரீதியாக இருவர் தெரிவு செய்யப்பட்டு குழுக்கள் அமைக்கப்படும். இக்குழுக்கள் பாவனையாளர்களின் சார்பாகப் பணியாற்றுவர்.

இவ்வாறான குழுவொன்றை அமைப்பது தொடர்பான முதலாவது கூட்டம் உடுவில் பிரதேச செயலகத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (3-202-203)


## வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

## குடத்தனை மணல் விநியோகப் பகுதிக்கான பதவி வெற்றிடங்கள்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| 1.அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் | 01 |
| 2. விநியோகப் பகுதி எழுதுவினைஞர்கள் | 03 |
| 3.அலுவலக எழுதுவினைஞர்கள் | 02 |

ஆட்சேர்ப்புக்கள் ஒப்பந்த அடிப்படையில் நடைபெறும்.

வயது - 18-60 வயதுக்கு இடைப்பட்டவர்கள்
சம்பளம்: நேரில் பேசித் தீர்க்கப்படும்.

கல்வித்தகைமை, அனுபவம் உட்பட சுயவிவரங்களை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் நேர்முகப்பரீட்சைக்கு 13.02.2006 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு மருதங்கேணியில் உள்ள எமது தலைமை அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

-தலைவர்






## உங்கள் சேமிப்புக்கு அதிக ஆதாயம்!

### மேலும் மேலும் அதிகமாகச் சேமிக்கும் அனைவருக்கும்!

கொமர்ஷல் வங்கியின் COMLEAP
உயர்ந்த மீதிக்கு உயர்ந்த வட்டி

- நாளாந்த கணக்கு மீதிக்கு வட்டி கணக்கிடப்பட்டு மதாந்தம் வரவிலிடப்படும்.
- எந்நேரமும் கணக்கிலிருந்து பணத்தை மீளப்பெற முடியும்.
- இலங்கை பூராகவும் அதிகமாக பாவனையில் உள்ள மிகச்சிறந்த ATM வலையமைப்பில் உபயோகிக்கக்கூடிய CAT கார்ட் ஒன்றையும் பெற்றுக்கொள்ள முடியும். நாளாந்த மீள்பெறுகை ரூபா 40,000/- மட்டுமே.
- மாதாந்த கணக்கு கூற்றை உங்களுடைய வீட்டிற்கே, தபால் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.
- கணக்கில் உள்ள மீதிக்கு எதிராக கடன் வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும்.
- காசோலைகளையும் இக்கணக்கில் வைப்பு செய்ய முடியும் (முன் அறிவித்தலுடன் மேற்கொள்ள முடியும்)

இக்கணக்கை எந்தவொரு கொமர்ஷல் வங்கிக் கிளையிலோ, சேவை நிலையங்களிலோ, மினிகொம் நிலையங்களிலோ அல்லது ஆர்பிகோ சேவை நிலையங்களிலோ ஆரம்பிக்க முடியும்.

அதே மாதிரி www.combank.net என்ற இணையத் தளத்தில் விண்ணப்ப படிவத்தை பெற்றுக் கொள்ளவும் முடியும்.

COMLEAP
உயர்ந்த மீதிக்கு உயர்ந்த வட்டி

கொமர்ஷல் வங்கி



## டுபாய்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் பிரசித்திப் பெற்ற நிறுவனத்தில் கீழ்காணும் வேலைவாய்ப்புகள்.

| | தொகை | | சம்பளம். |
|---|---|---|---|
| சாரதிகள் (அலுவலகம்) | 30 | 1000 Dhs | ரூ.28,000/- |
| வெல்டர்ஸ் (Arc/ Mig/ Tig) | 08 | 900 Dhs | ரூ.25,200/- |

(மத்திய கிழக்கு நாடுகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்)

★ ஒப்பந்தக்காலம் 03 வருடங்கள்.-
★ வேலை நேரம் 08 மணிப்படி 06 நாட்கள்.
★ தங்குமிட வசதி இலவசம்.
★ உணவுக் கொடுப்பனவு சம்பளத்தில் உள்ளடக்கப்படும்.
★ சேவைக்கால முடிவின் பின் திரும்பி வருவதற்கான விமான டிக்கட் இலவசம். ★ பயிற்சிக் காலம் 03 மாதம்.
★ மருத்துவம், காப்புறுதி மற்றும் ஏனையவை ஐக்கிய அரபு இராச்சிய தொழிலாளர் சட்டத்திட்டத்திற்கு உட்பட்டது.

GL Media

Post Card அளவு புகைப்படங்கள் 2 உடன் பாஸ்போர்ட் மற்றும் அனுபவ சான்றிதழ்களுடன் கீழ்காணும் விலாசத்திற்கு சமூகமளிக்கவும். (வார நாட்களில் மு.ப. 9.00 -பி.ப. 5.00 வரை சனிக்கிழமை மு.ப. 9.00 - பி.ப. 1.00)

HA ஹேவாஸ் அசோஸியேட்ஸ் (பிரைவட்)லிமிட்
05, பிகரிங்ஸ் ரோட், எட்டியாவத்தை, கொழும்பு 13
(எட்டியாவத்தை சந்தி அருகில்)
License. No : 750 App: NO: AL/ 750/ Advt/ 03/ 06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆபத்து விலகும்வரை காத்திருப்பது அவசியம்

பேராசிரியர் இ.குமாரவடிவேல்
விஞ்ஞான பீடாதிபதி
(யாழ். பல்கலைக்கழகம்)




கடந்த வாரக் கட்டுரையில் சுனாமியின் உருவாக்கம் பற்றியும் அது ஆழ்கடலில் எவ்வாறு நகரும் என்பது பற்றியும் பார்த்தோம். இக்கட்டுரையில் கடலோரத்தை அண்மித்தவுடன் சுனாமி எவ்வாறு பேரலையாக உருவெடுத்துப் பேரழிவை ஏற்படுத்துகின்றது என்பதைப் பற்றி அறிந்துகொள் வோம்.

**சுனாமி கரையை அண்மிக்கும்போது கொள்ளும் பயங்கரக் கோலம்!**

சுனாமி கடலின் ஆழமான பகுதிகளிலிருந்து ஆழம் குறைந்த கரையை நோக்கி வரும்போது நீரின் ஆழம், கரையின் வடிவம் போன்றவை சுனாமியின் தோற்றத்தையும், நடத்தையையும் பாதிக்கும். சாதாரண (சமுத்திர) நீர் அலைகள் போன்று சுனாமியும் கரையை அண்மிக்கும் போது பல காரணங்களால் தனது சக்தியின் ஒரு பகுதியை இழக்கிறது. கரையில் சக்தி தெறிப்படைதல், கடற்படுக்கையில் ஏற்படும் உராய்வு போன்ற காரணங்களால் சக்தி இழப்பீடுகள் ஏற்படுகின்றன. இவ்வாறான இழப்புகளுக்கு மத்தியிலும் கடலோரங்களை மிகவும் வலுவுடன் தாக்கும் சக்தியை சுனாமி கொண்டிருக்கும்.

சென்றவாரக் கட்டுரையில் சுனாமியின் வேகம் கடலின் ஆழத்தில் தங்கியிருக்குமெனக் கண்டோம். ஆகவே, கரையை நோக்கிவரும் சுனாமியின் வேகம் குறையும். ஆயினும் குறிப்பிட்டவொரு பரப்பினூடு குறிப்பிட்ட நேரத்தில் சுனாமியால்




காவிச்செல்லப்படும் சக்தி (இது அலையின் சக்திப்பாயம் (Energy Flux) என அழைக்கப்படும்) ஏறத்தாழ மாறாததாகவேயிருக்கும். அலையொன்றின் சக்திப்பாயம் (Energy Flux), அலை வேகத்திலும், அலை உயரத்திலும் தங்கியிருக்கும். வேகம் குறையும் போது உயரம் அதிகரிக்கும். அலையொன்றின் சக்திப்பாயம் ஏறத்தாழ மாறிலியாக அமைவதால் ஆழம் குறைந்த நீர்ப்பகுதியில் சுனாமியின் வேகம் குறையக் குறைய அதன் உயரம் அதிகரிக்கும். (படம் 72,73,74,75). அதாவது இயக்கப் பண்பு சக்தி குறைவடைய அழுத்தசக்தி அதிகரிக்கிறது. இதனாலேயே கரையை அண்மிக்கும்போது சுனாமி இராட்சத அலைகளாகத் தென்படுகின்றன. சுனாமியின் வேகம் மணிக்கு ஏறத்தாழ 500 - 800 மைல் (800 - 1000 கி.மீ.)இலிருந்து மணிக்கு ஏறத்தாழ 30 - 50 மைல் (50 - 80 கி.மீ) ஆக வீழ்ச்சியடைய சுனாமியின் சாதாரண கடல் மட்டத்திலிருந்தான அலை உயரம் ஏறத்தாழ ஒன்றரை முதல் மூன்று அடி (அரை மீற்றர் முதல் ஒரு மீற்றர்) இலிருந்து ஏறத்தாழ 10 அடி முதல் 50 அடி (மூன்று மீற்றர் முதல் பதினைந்து மீற்றர்) வரை பொதுவாக உயரும். கடலோர அமைப்பைப் பொறுத்து உயரம் நூறு அடியை (30 மீற்றர்) யும் விஞ்சலாம்.

அலையொன்றின் அலை உயரம் அதிகரிக்கும்போது அதன் அலைநீளம் குறையும். இதனால் ஓரத்தை அண்மித்த கடலில் கடல்மட்டம் பெருமளவில் உயர்ந்தும் தாழ்ந்தும் காணப்படும். அதாவது வேகத்துடன் உயர்வதும் தாழ்வதுமாகவுள்ள சாதாரண வற்றுப் பெருக்கு அலைகள் (tidal waves) போல் - ஆனால் இராட்சத பருமனுடன் - தோற்றமளிக்கும்.




சுனாமி கடலோரத்திலிருந்து ஏறத்தாழ ஒரு மைல் (1.6 கி.மீ.) தூரம் உட்சென்று சேதத்தை விளைவிக்கக்கூடியது (படம் 76). அத்துடன் கடல் நீர் கடலை நோக்கி வெகு தூரம் உள் வாங்குதலும் நடை பெறும் (படம் 77).



**சுனாமி வகைகள்**

சுனாமி இரு வகைப்படும்:


1. தொலைதூர சுனாமி (Distant tsunami)
2. அவ்விடத்திற்குரிய சுனாமி (Local tsunami)

சுனாமி உருவாகிய இடத்திலிருந்து சுனாமி நகரும் திசையில் எவ்வளவு தொலைவில் கடலோரம் அமைந்துள்ளதென்பதன் அடிப்படையில் சுனாமியை இருவகையாக வகைப்படுத்தலாம்.

சுனாமி கரையொன்றை அண்மிக்குமுன் உற்பத்தி தானத்திலிருந்து ஏறத்தாழ 600 மைல் (1000 km) தூரத்திற்கு மேல் பயணம் செய்யுமாயின் அது தொலைதூர சுனாமி எனப்படும். இவை பொதுவாக பசுபிக் சமுத்திரத்தில் தோன்றுகின்றன. இவை இச்சமுத்திரத்தில் பல மணி நேரம் (சில சமயம்) ஒருநாள் வரை பயணம் செய்தே கரையையடைகின்றன. இவ்வாறு இச் சுனாமி மாறாவேகத்தில் கூடியதூரம் பயணிப் பதால் அவை தாக்க கூடிய பிரதேசங் களி லுள்ள மக்களைப் பாது காப்பான வேறிடங்க ளுக்கு அழைத்துச் செல்லக் கூடிய தாக இருக்கும்.

உற்பத்தித் தானத்திலிருந்து ஏறத்தாழ 60 மைல் தொலைவுக்குள் உள்ள கரையோரங்களைத் தாக்கும் சுனாமி அவ்விடத்திற்குரிய சுனாமி எனப்படும். இவை பொதுவாக கூடுதல் ஆபத்தானவை. ஏனெனில் இவை மிகக் குறுகிய நேரத்தில் தாக்குவதால் மக்களை எச்சரிப்பதற்கான கால அவகாசம் போதுமானதாக அமைவதில்லை.

1960ஆ[illegible] மே மாதம் 22ஆம் திகதி பி.ப. [illegible] பசிபிக் சமுத்திர[illegible] தென் அமெரிக்க நாடான சிலி (Chile) நாட்டையண்டிய சமுத்திரத்தில் றிச்சர் அளவில் 9.5 பருமனுடைய இதுவரை காலமும் பதிவான அதிகூடிய சக்தி வாய்ந்த நிலவதிர்வு ஏற்பட்டது. அது உருவாக்கிய சுனாமியின் முதற் தாக்கம் சிலி நாட்டின் கடலோரங்களைப் பதினைந்து நிமிடத்தால் தாக்கிப் பதம்பார்த்தது. இரண்டாவது தாக்கம் எழுபது நிமிடங்களின் பின் இடம்பெற்றது. இச்சுனாமி 'வாய் தீவை மறுநாள் முற்பகல் 9.57இற்கு தாக்கும் என 'வாயில் அமைந்துள்ள பசுபிக் சுனாமி எச்சரிக்கை நிலையம் (acific Tsunami Warning Centre – PTWC), எச்சரிக்கை செய்யதிருந்தது. சரியாக 9.58க்கு 'வாய் கரையோரங்களைச் சுனாமி தாக்கியது. போதிய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் வேடிக்கை பார்க்கச் சென்ற அறுபத்பொருவர் கடலுடன் சங்கமமாகினர். மேலும் பல மணி நேரத்தின் பின் சுனாமி பசிபிக் சமுத்திரத்தின் மறுகரையிலுள்ள ஜப்பானைச் சென்றடைந்து அங்கும் 185 பேரைக் காவுகொண்டது. இச்சுனாமி சிலிநாட்டு கரையோரத்தைப் பொறுத்த வரை அவ்விடத்திற்குரிய சுனாமி (Local tsunami). 'வாயுக்கும் ஜப்பானுக்கும் தொலை தூர சுனாமி (Distant tsunami).




**சுனாமியால் ஏற்படும் பாதிப்புக்கள்**




சுனாமியால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றி இங்கு கூறவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் டிசெம்பர் 26, 2004 அன்று நம்நாடு பெற்ற அனுபவத்தை நாம் நன்கு அறிந்துள்ளோம். டிசெம்பர் 2004 அனர்த்தத்தின் முன்னும் பின்னும் செயற்கைக் கோளொன்றினால் எடுத்து அனுப்பப்பட்ட படங்கள் 79,80 மூலம் சேதங்களை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

சுனாமி ஒரு குறிப்பிட்ட புள்ளியில் உருவாகுவதில்லை. புவிப்பாறைத்தட்டுகள் மோதிய அல்லது ஒன்றை அழுத்தி மற்றையது மேலெழுந்த கோட்டிற்குச் செங்குத்தான திசையிலேயே சுனாமி நகரும். 2004 டிசம்பர் 26 இல் சுமாத்ராவுக்கருகே ஏற்பட்ட நில அதிர்வால் பாதிக்கப்பட்ட 1200 கி.மீ. நீளமான குறைகோடு வடக்கு-தெற்காக அமைந்திருந்தது. அதனால் சுனாமியின் மிகப்பலம் பொருந்திய திசை கிழக்கு-மேற்காக அமைந்தது (படம் 80).




இதனாலேயே வங்காள விரிகுடாவின் வட முனையிலமைந்துள்ள வங்காளதேசம் ([illegible]) தாழ்வான பிரதேசத்தையு[illegible] ஒப்பீட்டளவில் நிலநடுக்க மேன்மையத்திற்குச் (Epicentre) சமீபமாக அமைந்த நாடு என்றபோதிலும், அங்கு பெரியளவில் சேதம் ஏற்படவில்லை.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி ஆழ் சமுத்திரத்தில் சுனாமி குறிப்பிடத்தக்க வேகக்குறைப்பின்றி பல்லாயிரம் மைல் தொலைவிற்கு நகருமாதலின், சுனாமியின் ஆரம்பவிடத்திலிருந்து வெகு தொலைவில் இருக்கும் கடலோரங்களும் சுனாமியால் பாதிப்புக்குள்ளாகலாம். (சுனாமி வகைகள் என்ற தலைப்பின் கீழ் சிசிலியில் உருவான சுனாமியை உதாரணம் காட்டி இது பற்றி ஏற்கனவே கூறியிருந்தோம்). 2004 டிசெம்பர் சுனாமியின்போது சுமாத்திரா




விலிருந்து 5000 மைல்களுக்கு அப்பாலுள்ள சோமாலியா நாட்டில் ஏற்பட்ட தாக்கம் சமீபத்திலிருந்த வங்காளதேசத்தில் ஏற்பட்ட தாக்கத்தைவிட மிக அதிகம். வங்காளதேசத்தில் இரு உயிரிழப்பகளும் சோமாலியாவில் 298 உயிரிழப்புகளும் எற்பட்டது. சோமாலியா இச்சுனாமியின் பலம் பொருந்திய திசையிலே தடுப்பாகச் செயற்படக் கூடிய நிலப்பரப்பேதுமின்றி அமைந்திருந்ததே இதற்கான காரணம்.

சுனாமியுருவான இடத்திற்கும் தமக்குமிடையே நிலப்பரப்பையுடைய கடலோரங்கள் பொதுவாகப் பாதுகாப்பானவை. இருப்பினும் சிலசமயம் சுனாமியானது அந்நிலப் பரப்பில் கோணல் (Diffraction) அடையக் கூடும். இக்கோணல் காரணமாகவே இந்தியாவில் மேற்கு கரையிலமைந்த கேரள மாநிலமும் இலங்கையின் மேற்குக் கரையும் குறிப்பிடத்தக்களவு சேதத்திற்குள்ளாகின.

சுனாமி பல அலைகளைக்கொண்டதோர் தொடராகவே கரையை வந்து மோதும. சுனாமியின் அடுத்தடுத்த அதியுயர் புள்ளிகள் (Crests) கடலோரத்தை வந்து சேருவதற்கிடையேயான இடைவேளை பத்து முதல் தொண்ணூறு நிமிடங்கள் வரையானதாக இருக்கலாம். அத்தொடரில் எவ்வலை பெரியதாக இருக்குமென்பதை அறுதியிட்டு எதிர்வுகூற முடியாது. 1946 ஆம் ஆண்டு அமெரிக்க மாநிலமான அலாஸ்காவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் விளைவாக உருவான சுனாமியின் முதலாவது அலையே பெரிதாக இருந்தது. ஆனால் அலாஸ்காவில் 1964ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தின் விளைவாக உருவான சுனாமியின் ஐந்தாவது அலையே மிகப்பெரிதாக இருந்தது. அங்கு முற்கூட்டியே எச்சரிக்கை விடுக்கப்பட்டு மக்கள் பாதுகாப்பான உயர்ந்த நிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்ததால், அவர்கள் சுனாமி தனது பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருந்தபோது பாதுகாப்பாக உயர்ந்த பிரதேசங் களில் காத்திருந்தனர். முதல் நான்கு சுனாமியையும் அவற்றின் பருமனையும் பார்த்த மக்கள் மேற்கொண்டு பெரிய சுனாமி வரமாட்டாது என்ற எண்ணத்தில் தமது சொத்ளதுக்களுக்கு என்ன நடந்ததோ என்பதை அறியவேண்டுமென்ற ஆவல் மேலீட்டால் பொறுமை இழந்து பாது காப்பான – உயரமான – இடங்களிலி ருந்து இறங்கித் தமது இடங்களை நோக் கிச் சென்றனர். அவர்களையெல்லாம் திடீரென வந்த ஐந்தாவது பேரலை கபளீகரம் செய்து கொண்டது. ஆகவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆபத்து நீங்கிவிட்டதாக அறிவிக்கப்படும்வரை பொறுமை காத்தல் வேண்டும்.

சுனாமி ஏற்படுத்தக்கூடிய சேதத்தின் அளவு அது சென்றடையும் கடலோரத்தின் அமைப்பிலும் தங்கியிருக்கும். செங் குத்தான அல்லது விரைவாக உயர்ந்து செல்லும் நிலப்பரப்பை அண்டிய கடலோ ரங்களைவிட தட்டையான கடலோரங்களே அதிகளவு ஆபத்துக்கு உட்படும். துறை முகங்கள், விரிகுடாக்கள் போன்ற விடங் களில், சுனாமியின் சக்தி குவியச் செய்யப் படுவதால் அலைகளின் உயரம் மிக அதிகமாகக் காணப்படும். இதனாலேயே ஜப்பானியர் இவற்றைத் துறைமுக அலைகள் என அழைக்கின்றனர். (வளரும்)


யுத்தத்தின் வெடி ஓசைகளும் குண்டுத்தாக்குதல்களும் மனிதனையும் உலகளாவிய ரீதியில் பயத்தில் ஆழ்த்திய காலம் மெல்லமெல்ல மாறிவருகிறது எனலாம். எனினும் இயற்கையும், இயற்கையின் கோரத் தாண்டவங்களும் இன்று உலகை ஆட்டிவைக்கின்றன. மனிதனால் மனிதன் கொல்லப்பட்ட காலம் மாறி இயற்கையே தன் குழந்தைகளை பலியெடுக்கும் நிலைமை தலைதூக்கியுள்ளது.

இத்தகைய இயற்கையின் மூர்க்கத்தினால் உறங்கியுள்ள எரிமலைகளும் உயிர்ப்புப் பெறுகின்றன. இதன் காரணமாக எரிமலைகள் மீளுயிர்ப்பு பெற்று வெடிக்கின்றன; பலியெடுக்கின்றன. அவ்வேளைகளில் எல்லாம் மனிதன் மரணவலி உணர்கின்றான்.

இந்தச் சிறப்புக் கட்டுரைத் தொடரின் முதல் ஏழு பாகங்கள் ஏற்கனவே உதயனில் வெளியாகி இருந்தன. இங்கு பதினோராவது பாகம் பிரசுரமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 . 09 . 1984 | 28 . 12 . 2005 |

## யோகராசா கஜேந்திரன்
## (லக்ஷன்)

நாற்பத்தேழு நாள் முடிந்து முக்குளித்தது இதயம்
முத்திரைச்சந்தியில் முடிந்தது உன் மூச்சு
கட்டிளம் காளையின் கனல் வீச்சுப்போச்சு
அந்நியன் சன்னத்தால் அழிந்தது உன் மேனி
எண்ணிய எண்ணமெல்லாம் மண்ணில் போனாலும்
புண்ணியா உன் பூவுள்ளத்தை மறவாது என்றும் எம் உள்ளம்.

அன்னாரின் வீட்டுக்கிரியைகள் இன்று(12.02.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

19, உப்புகுளம் வீதி,
கொழும்புத்துறை,யாழ்ப்பாணம். (46619)

**குடும்பத்தினர்.**


# பிறவுண்ஸ் காட்சியறை
# BROWN & CO LTD

**SHARP - ELBA - CORNEL - SUMEET**
SHARP CORPORATION OSAKA JAPAN

யாழ்.நகரில் மிகவும் பிரபல்யமான பிறவுன்& கம்பனி தற்பொழுது வீட்டுப்பாவனைப் பொருள்களை விஷேட விலைக் கழிவில் வழங்குகின்றது.





* பொருட்களின்-தரம், நம்பகத்தன்மை
* அனைத்து பொருள்களுக்கும் உத்தரவாதம்
* A / C பொருத்தல் கட்டணம் (FITTING) இலவசம்
* போட்டோ கொப்பியர் இலவச விநியோக சேவை
* விற்பனைக்குப் பிந்திய சேவை




போன்றவற்றினால் இப்பொழுது யாழ்நகரில் இலத்திரனியல் பொருள் களை விற்பனை செய்வதில் முன்னனி வகிக்கிறது.






* அரச அலுவலகங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு 12,18 மாத தவணை அடிப்படையில் வங்கியூடாகப் பொருள்கள் வழங்கப்படும். (10இற்கு மேற்பட்ட பணியாளர்கள் பொருள்கள் எடுப்பார்களாயின் மாத்திரம்)







இச்சேவைகளை நீங்களும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய முகவரி:

**பிறவுண்ஸ் காட்சியறை**
**89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே; 021 222 5150**



# மகாலட்சுமி றியல் எஸ்டேட்

கிளை இல. 1
கே.கே.எஸ்.வீதி,வல்வெட்டித்துறை.

கிளை இல. 2, துவாரகா, கொடிகாமம் வீதி.
(அரசடி சந்தி அருகில் நெல்லியடி, கரவெட்டி.

✡ எங்கள் நிறுவனம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. பதிவு இல. வட/வ/வி.ப./ 478
எங்கள் நிறுவனத்தில் 40 வருட அனுபவமிக்க பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் ஆலோசனைகளோடு நிர்மாண வேலைகள் நடைபெறுகின்றன.

✡ நீங்கள் விரும்பிய வடிவங்களில் (டிசைன்களில்) உங்கள் வீடுகளை குறிப்பிட்ட தவணையில் நவீன மயமாக, வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை, மின்சார உபகரணங்கள் இணைக்கப்பட்டு கட்டி முடித்துத்தரப்படும்.

✡ காணிகள், வீடுகள், வாங்கல், விற்றல் மற்றும் திருத்த வேலைகளும் எமது நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

எமது நிறுவனத்தில் பதிவு செய்தவர்களும், புதிதாக பதிவு செய்யவிரும்புபவர்களும் கீழ்வரும் தொழிலாளர்கள் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பதாக நேரில் வந்து எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

நெல்லியடியில், வல்வெட்டித்துறையில் போன் விற்க விரும்புபவர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| மேலாளர்கள் | (Supervisors) |
| மேஸ்திரிகள் | (Masons) |
| மரத்தளபாடம் செய்பவர்கள் | (Carpenters) |
| மின்சாரவேலையாள்கள் | (Electricians) |
| குழாய் பொருத்துநர்கள் | (Plumbers) |

✡ கீழ்வரும் கட்டடப் பொருள்களை எமது நிறுவனத்திற்கு வழங்கக் கூடியவர்கள் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பு எமது நிறுவனத்தில் பதிவு செய்யவும்.
1) மணல் 2) அத்திபாரக்கல் 3)2'' சல்லிக்கல் 4)1'' சல்லிக்கல் 5)3/4'' சல்லிக்கல்

✡ உரிமையாளர்கள்

| | |
|---|---|
| 0776153776 | A.T.பேரின்பநாதன் - பொறியியலாளர் |
| 0773288712 | V.A.தங்கமயில் - நில அளவையாளர் |
| 0773583880 | N.சிவபாலி |
| 0776066889 | K.மணிவண்ணன் |
| 0602213157 | A.சிவஞானம் |

✡ தொ.பே. இலக்கம்:-
077-9053994, 077-3583880, 060 2213157

✡ தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள இயலாதவர்கள் கடிதமூலம் எமது கந்தோர்க்கிளைகளில் தொடர்பு கொள்ளலாம்.

கொம்பியூட்டர், ரைப்பிங் அனுபவமிக்க வேலையாளர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்(பருத்தித்துறை, உடுப்பிட்டி, தொண்டைமானாறு, நெல்லியடி) அருகில் உள்ளவர்கள்.

**நிர்வாகம் மகாலட்சுமி றியல் எஸ்டேட்.**

(46612)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது மக்களுக்காக உரிமைக்குரல் எழுப்பும் இயக்கங்களை சர்வதேசம் அங்கீகரிக்கும் வாய்ப்பு

## உலக வலம்

மேனா

உலகின் பல பாகங்களிலும் தமது மக்களுக்காக உரிமைக்குரல் எழுப்பிவரும் இயக்கங்கள் பலவற்றுக்கும் அவை தீவிரவாத அமைப்புகள் என்று கூறப்பட்டாலும் அந்தந்த நாடுகளிலும் சர்வதேசமட்டத்திலும் அங்கீகாரம் கிடைக்கின்ற ஒரு போக்கு அவதானிக்கக் கூடியதாய் இருக்கின்றது.

இந்த இயக்கங்களின் நியாயபூர்வமான தன்மையை அந்த நாடுகள் உணர்ந்துகொள்ளத் தொடங்கியிருப்பது ஒரு புறமிருந்தாலும் தொடர்ந்தும் அவ்வியக்கங்களை புறந்தள்ளி ஓரங்கட்ட முடியாது என்ற நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டிருப்பதையும் காண முடிகின்றது.

பலஸ்தீனத்தில் ஹமாஸ் அமைப்பு அந்நாட்டின் அதிகாரசபைக்கான தேர்தலில் மக்களின் பேராதரவைப் பெற்று வெற்றி பெற்றிருக்கின்றது. தீவிரவாதிகள் - பயங்கரவாதிகள் என்றெல்லாம் அவர்களை வெறுப்போடுநோக்கி மறுதலித்த அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் கண்பிதுங்கி நிற்கின்றன.

வன்முறையைக் கைவிடவேண்டும். ஆயுதத்தைக்கீழே போட்டால்தான் அங்கீகாரம் என்றெல்லாம் அச்சுறுத்திக்கொண்டிருந்த நாடுகளும் இஸ்ரேலும் இனிசெய்யப்போவதென்ன?

பலஸ்தீன மக்களால் அங்கீகரிக்கப்பட்டுவிட்ட நிலையில் ஹமாஸை இவர்கள் ஏற்றுக்கொள்ளப்போகிறார்களா, இல்லையா? எதிர்வரும் காலந்தான் பதில் சொல்லவேண்டும்.

ஏற்கனவே இவர்களுக்கு முந்திக்கொண்டு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் ஹமாஸை அங்கீகரிப்பதற்கான ஒரு நடவடிக்கையை எடுத்திருப்பது பலரை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

# ஹமாஸை பேச்சுக்கு அழைத்திருக்கிறார் ரஷ்ய அதிபர்



தெஹ்ரானில் டென்மார்க் தேசியக் கொடியை தூதரகத்துக்கு முன் ஆர்ப்பாட்டக்காரர்கள் எரிக்கும் காட்சி

ஹமாஸ் தலைவர்களை ஆலோசனை நடத்த வரும்படி அவர் அழைத்திருப்பதாக செய்திகள் வந்துள்ளன. பலஸ்தீன மக்கள் அவர்களைத் தெரிவு செய்துள்ளார்கள். அதனால் அம் மக்களின் தீர்ப்பை நாம் கௌரவிக்க வேண்டும் என்று புட்டின் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் நாட்டு அரசுக்கும் அங்குள்ள முஸ்லிம் பிரிவினைவாத தீவிரவாதிகளுக்குமிடையில் மலேசியாவில் நடந்துள்ள பேச்சுகளில் அவர்களின் மூதாதையர் நிலங்கள் தொடர்பாக ஓர் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் மார்ச் மாதம் இருதரப்புகளுக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்றும் அதன்பின் முறையான பேச்சு ஆரம்பமாகும் என்று கூட்டறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அஸாம் தீவிரவாத இயக்கத்துக்கும் இந்திய அரசுக்குமிடையிலான நேரடிப் பேச்சுகள் விரைவில் ஆரம்பமாகவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

27வருட அஸாம் பிரச்சினைக்கு தீர்வு காணும் விதத்தில் இந்திய அதிகாரிகளுக்கும் அஸாம் ஐக்கிய விடுதலை இயக்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் அண்மையில் புதுடில்லியில் பேச்சுகள் இடம்பெற்றன.

அஸாம் தீவிரவாத அமைப்பின் சில கோரிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்த இந்திய அரச அதிகாரிகள் ஒப்புதல் அளித்துள்ளனர்.

முறையான பேச்சுகளுக்கு வழிகோலும் நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளில் கவனஞ் செலுத்த இருதரப்பும் ஒப்புக்கொண்டுள்ளன.

**கருத்துரிமையும் பொறுப்புணர்வும்**

பேச்சு, எழுத்து மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பவை ஜனநாயகத்தின் - மக்கள் ஆட்சியின் அடிநாதமாக இன்று வலியுறுத்தப்படும் கோட்பாடுகள்.

பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் கருத்துகளும் இவைகளுக்குள் அடங்குபவையே. அதனால்தான் ஜனநாயகத்தின் காவல் நாய் என்று பத்திரிகைத்துறையைக் கூறுகிறார்கள்.

இவை எல்லாம் சரிதான், ஆனால், இந்தச் சுதந்திரங்களுக்கு எல்லை அல்லது வரையறை என்று ஒன்று கிடையாதா?

உண்டு : காவல் நாய் சிலநேரங்களில்கள்வர்களைவிடுத்து நல்லவர்களை - நண் பர்களை, உறவினர்களைக் கூட கடித்து விடக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். அதனால் சில பல நேரங்களில் அந்தக் காவல் நாயைக் கட்டிப் போட வேண்டியேற்படுகின்றது.

இந்த உதாரணம் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு பொருத்தமா என்ற கேள்வி எழலாம். ஆனால் மேற்கு நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் பத்திரிகைச் சுதந்திரம் என்ற பெயரில் பத்திரிகைகள் தமது வரம்பு மீறிய செயற்பாடுகளால் உலகம் முழுவதிலுமுள்ள இஸ்லாமிய மக்களின் உணர்ச்சிகளைத்தூண்டி கொதிப்படைய செய்துவிட்டது மட்டுமன்றி வன்முறைகளையும் தூண்டிவிட்டுள்ளன என்பதை எவர் மறுப்பார்.

ஒரு மொழியை, கலாசாரத்தை அல்லது மக்கள் நடைமுறைகளை விமர்சிப்பது பெரும்பாலும் அதற்குரிய மக்களின் மனங்களைப் புண்படச் செய்வதாகவே அமையும் - அதிலும் ஒரு மக்கள் சமுதாயத்தின் சமயத்தில் கை வைப்பதென்பது அந்த மக்களின் உள் உணர்வுகளைப் புண்படுத்தும் என்பதை மேற்கத்தியம் -ஐரோப்பிய சமுதாயத்தினர் இன்னமும் புரிந்து கொண்டதாகவே இல்லை.

வாள்கொண்டும், துப்பாக்கி கொண்டும் தமது அதிகாரங்களை, தமது கலாசாரங்களை ஏன் சமய நம்பிக்கைகளையும் கூட கீழைத் தேயங்களில், பலவந்தமாகத் திணிக்க முற்பட்ட ஐரோப்பிய சக்திகள் உண்டு- அவைகளை எதிர்த்து நின்று தமது நம்பிக்கைகளை இன்றும்கூட நிலைநிறுத்திக் கொண்டவர்கள் இந்த நாடுகளில் வாழும் சுதேசிகளான உள்ளூர் மக்கள். அதிகாரத்தினால் முடியாதுபோனதை வேறு விதமாகப் புகுத்தும் மனப்பான்மை மேற்கு நாடுகளில் அற்றுப்போய்விடவில்லை.

தோற்றுப்போன மனப்பான்மையை - அங்கலாய்ப்பை, ஆத்திரத்தையெல்லாம் அவ்வப்போது வெவ்வேறு விதமாக அவர்கள் வெளியிட்டுவருகிறார்கள்.

சமீப காலத்தில் இன்று சமய உருவங்களை காலணிகளிலும்,கழிவறை சலவைக்கல் பதிவுகளிலும், பெண்களின் நீச்சல், உள் ஆடைகளிலும் பொறித்து தமது இயலாமையை வெளிப்படுத்திக் கொண்டவர்கள் மேற்குநாட்டினர்தான் - தமது கலை உணர்வுகளை வெளிக்காட்டிக் கொள்வதற்கு இவை தவிர வேறு பொருள் கிடைக்கவில்லை அவர்களுக்கு-

எதுவானாலும் எதிர்ப்புக்கிளம்பியவுடனேயே சம்பந்தப்பட்டவர்கள் அவைகளின் உற்பத்தியை கைவிட்டதுடன் மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்கள். அத்துடன் அந்த விவகாரம் முற்றுப்பெற்றது. ஆனால் இப்பொழுது எழுந்துள்ள நிலைமை வேறுவிதமானது.

பத்திரிகைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்ற வகையில் இரட்டைக்கருத்துள்ள கேலிச்சித்தரங்களை சில ஐரோப்பிய பத்திரிகைகள் வெளியிட்டது மட்டுமில்லை. அவைகளை மீண்டும் மீண்டும் பிரசுரம் செய்து தமது கருத்துச் சுதந்திர உரிமையை நிலைநாட்டிக்கொள் வதாகக் காட்டிக்கொண்டமைதான்.

இதன் விளைவு இன்று உலகம் முழுவதிலுமுள்ள இஸ்லாமியர்கள் கொதித்தெழுந்துள்ளார்கள் - சில நாடுகளால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைந்து வன்முறையில் கொண்டு போய்விட்டுள்ளன. சமயம் என்பது மனிதனின் உணர்ச்சியோடு பின்னிப்பிணைந்து கிடப்பது.

நபிகள் நாயகம் (சல்) அவர்களின் உரு வம் என்று எதுவும் [illegible] லாம் தடுக்கின்றது. அப்படியிருக்க முகமது நபிகள் நாயகம் (சல்) அவர்களின் உருவம் என்று ஒன்றைக்கீறி அதன் தலைப்பாகை வெடிகுண்டு இருப்பது போல் காட்டி டென்மார்க் பத்திரிகை கேலிச்சித்திரம் வெளியிட்டிருந்தது. இது இஸ்லாமியரின் மனங்களைப் புண்படுத்தும் செயல் என்பதை அவர்கள் அறியாமல் இருந்திருக்க முடியாது. ஒன்றல்ல, இரண்டல்ல பன்னி ரண்டு கேலிச்சித்திரங்கள் வெளியானதாகச் செய்திகள் கூறுகின்றன. இஸ்லாமிய உலகில் எதிர்ப்புக் கிளம்பியதை அறிந்த பின்னரும் வேறு பத்திரிகைகள் அவற்றை மறுபிரசுரம் செய்துள்ளன.

பத்திரிகைகள் தமக்குள்ள உரிமையை வற்புறுத்துகின்றன. அதனால் ஏற்படும் விளைவுகள் சம்பந்தப்பட்ட அரசுகளை பாதிக்கின்றன.

இதனால் மேற்கத்திய நாடுகளின் அரசுகள் இக்கட்டான ஒரு நிலைக்குள் தள்ளப்பட்டுள் ளன.

இச்சந்தர்ப்பத்தை இஸ்லாமிய தீவிரவாதிகள் மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான,தமது நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொண்டு விடுவார்கள் என்று அவை அஞ்சுகின்றன.

பிரசுரிப்பது பத்திரிகைகளின் உரிமையாக இருக்கலாம். பிரசுரிக்காமல் இருப்பது அவைகளின் பொறுப்பு என்று அந்நாட்டுத் தலைவர்கள் கருதுகிறார்கள்.

கட்டடங்களைத் தகர்ப்பதிலும் தீயிடுவதிலும் இஸ்லாமியர்கள் ஈடுபடுவதனால் இதனை இந்நாடுகள் பயன்படுத்திக் கொண்டு தீவிரவாதிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்த முயலக்கூடும். ஏனென்றால் ஆர்ப்பாட்டங்களை அவர்களே தூண்டிவிடுவதாகவும் அவர்கள் கருத இடமுண்டாகும்.

இதனால் ஆர்ப்பாட்ட எதிர்ப்பு நடத்துவ தற்கு நியாயமான காரணமிருக்கிறது என்று கருதும் இஸ்லாமியருக்கும், தீயிடுவதிலும் தாக்குதல் நடத்துவதிலும் ஈடுபடும் இஸ்லாமியருக்குமிடையில் வேறுபாட்டை நிர்ணயித்துக் கொள்ள வேண்டிய நிலையில் அந்நாடுகள் உள்ளன.

இதுவரை மேற்கத்திய நாடுகளின் அதி காரப் பூர்வ கருத்துகள் பெரும்பாலும் ஒரே மாதிரியே இந்துள்ளன.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் சீன் மெக் கோர்மக் வெளியிட்டுள்ள கருத்தில் இஸ்லாத்துக்கு எதிரான உருவங்கள் கிறிஸ்தவத்துக்கு, செமிட்டிஸத்துக்கு எதிரான உருவங்கள் மற்றும் வேறு எந்த சமயத்துக்கு எதிரான உருவங்களைப் போலவே ஏற்றுக்கொள்ள முடியாதவை. அதேசமயம் தனிப்பட்ட நபர்கள் தாம் கொண்டுள்ள சுதந்திரமான கருத்துகளை வெளியிடும் உரிமையையும் ஆதரிக்கின்றோம் என்று கூறியுள்ளார்.



கொரெட்டா கிங் அம்மையாருக்கு அமெரிக்க தலைவர்கள் அஞ்சலி

பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் ஜெக்ஸ்ரா தமது கருத்தில்,"கருத்துச் சுதந்திரமானது பொறுப்போடு வெளியிடப்பட வேண்டும் அவதூறில் ஈடுபடும் அளவுக்குப் போகக் கூடாது" என்று குறிப்பிட்டுள்ளனர்.

பிரெஞ்சு வெளிநாட்டு அமைச்சர் பிலிப்ஸ் டவுஸ்ட் பிளேஸி "கருத்து வெளிப்பாட்டுக்கு உரிமை உண்டு என்பது உண்மைதான், ஆனால் அவ்வாறு செய்கிறவர்களின் பொறுப்புணர்ச்சியையும் அதுவலியுறுத்துகிறது என்றார்.

* * *

**சர்வதேச படுகொலைகளின் நினைவுச் சின்னம்**

சர்வதேச படுகொலைகளின் நினைவுதினம் அண்மையில் ஐரோப்பா முழுவதும் அனுட்டிக்கப்பட்டது. போலந்தில் ஆஸ்ட்விச் நகரிலுள்ள நாஸிகளின் படுகொலை முகாம் மீட்கப்பட்டு 61 வருடங்களாவதை இந் நிகழ்வுகள் குறிப்பிடுவதாய் இருந்தன. இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது நாஸிகளால் 6மில்லியன் யூதர்கள் இந்த முகாமில் வைத்து கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

தென்போலந்திலுள்ள இந்த முகாமில் இடம்பெற்ற நிகழ்வில் போலிஷ் பிரதமர் காஸிமீர்ஸ் மார்சின் கீவிக்ஸ் தலைமை வகித்தார். போலந்தில் வாழும் யூத சமூகத்தவர்களும் முகாமில் உயிர் தப்பி இருப்பவர்களும் கலந்து கொண்டனர்.

நாஸி ஆஸ்ட்விச் முகாம் தான் ஐரோப்பாவிலுள்ள மிகப்பெரிய இடுகாடு, இங்கே கல்லறைகள் இல்லை மேலும் இங்கே என்ன நடந்தது என்பதை நினைவு கூர்வதாகவும் இந்த முகாம் இருந்து வருகின்றது. ஆக்கிரமிப்பும் வெறுப்புணர்ச்சிகளும் அதிகரித்துள்ள இன்றைய உலகுக்கும் இது ஒரு நினைவூட்டும் சின்னமாகவுள்ளது என்று போலிஷ் பிரதமர் கூறினார்.

1940 ஆம் ஆண்டுக்கும் 1945 ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆஸ்ட்விச் - பேர்க்கனாவ் முகாம்களில் ஜேர்மனியிலும், வேறு நாஸிகளின் ஆக்கிரமிப்பில் இருந்த நாடுகளையும் சேர்ந்த மில்லியன் கணக்கான மக்கள் பெரும்பாலும் யூதர்கள் இங்கே விஷவாயுக்கு பலியாக்கப்பட்டார்கள் என்று வரலாறு கூறுகின்றது. போலந்து முகாமில் நடந்த படுகொலைகள் வெறும் புரளிக்கதையென்றும் ஈரானிய அதிபர் மக்மூத் அகமதின் எஜாட் அண்மையில் கூறியிருந்தார்.

நாஸிகளால் நடத்தப்பட்ட இந்த படுகொலைச் சம்பவத்தை மறுப்பவர்களை ஐ.நா செயலாளர் நாயகம் கொபி அனான் கண்டித்திருக்கிறார். நாஸி படுகொலையின் நினைவு நாளாக ஜனவரி 27 ஆம் திகதியை ஐ.நா பொதுச் சபை கடந்த நவம்பரில் அறிவித்திருந்தது.

* * *

**மார்ட்டின் லூதரின் மனைவி மரணம்**

அமெரிக்க சிவில் உரிமை போராளி மார்ட்டின் லூதர் கிங் ஜீனியரின் பாரியார் கொரெட்டா கிங்கின் இறுதிக்கிரியைகளில் அமெரிக்காவில் பதவியில் இருந்துள்ள மூன்று முன்னாள் அதிபர்கள் உட்பட நான்கு அதிபர்கள் கலந்து கொண்டு இரங்கல் தெரிவித்துள்ளார்கள்.

1968 ஆம் ஆண்டு துப்பாக்கிச் சூட்டில் மரணமான சம உரிமைக்காகப்போராடி வந்த சிவில் உரிமை போராளியான வண.மார்ட்டின் லூதர் கிங் ஜீனியரின் மனைவி அண்மையில் காலமானார். தன் கணவரின் இலட்சியங்கள் ஈடேறுவதற்காக அவர் தன்னை அர்ப்பணித்து போராடி வந்தார் என்று பலரும் பாராட்டிப் பேசினார்கள்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ், முன்னாள் அதி பர்கள் ஜிம்மிகார்ட்டர், பில் கிளின்டன், ஜோர்ஜ் எச். டபிள்யு புஷ் மற்றும் அவர்களின் துணைவிமாரும் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.அட்லன்டாவில் நியுபேர்த் மிஸனரி பாட்டிஸ் ஆலயத்தில் திருமதி கொரெட்டா ஸ்கொட் கிங்கின் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

அதிபர் புஷ் அங்கு இரங்கலுரை நிகழ்த்துகையில், எமது தேசத்தை முழுமையாக்குவதற்காக உழைத்த ஓர் அம்மையாருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நான்வந்திருக்கிறேன் என்று கூறினார். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது இறுதிப் போட்டியில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றுமா இலங்கை?

இலங்கை அணியிடம் மண்டியிட்டது உலகச் சம்பியனான ஆஸ்திரேலியா.

மூன்று நாடுகள் மூன்று பங்குபற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஆஸ்திரேலியாவில் இடம் பெற்றுவருகிறது. மூன்று இறுதிப் போட்டிகள் கொண்ட இப்போட்டியின் முதல் ஆட்டம் நேற்றுமுன்தினம் அடெலெய்ட்டில் இடம்பெற்றது.

முதல் ஆட்டங்களில் தட்டுத் தடுமாறிய இலங்கை அணி ஒருவாறு இறுதிப் போட்டிக்குள் நுழைந்து முதல் இறுதியாட்டத்திலேயே உலகச் சம்பியனுக்கு அதிர்ச்சி மருந்து கொடுத்துள்ளது.



பகல், இரவு ஆட்டமாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. முன்வரிசை துடுப்பாட்ட வீரர்களான ஜெயசூர்யா, சங்ககார, அத்தப்பத்து ஆகியோர் நிதானமாகவும் அதே நேரம் அதிரடியாகவும் விளையாடிய போதும் மத்திய வரிசை விக்கெட்டுகள் சீரான வரிசையில் வீழ்த்தப்பட்டன.

இதனால், இலங்கை அணி 250 ஓட்டங்களுக்குள் சுருளும் என்றே அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் பின்வரிசை வீரர்களாகக் களமிறங்கிய டில்ஷான், கப்புக்கெதர ஆகியோரது அதிரடியான ஆட்டத்தினால் 274 என்ற இலக்கை நிர்ணயித்தது இலங்கை அணி.

அந்த அணி சார்பாக அத்தப்பத்து 83 ஓட்டங்களையும் குமார் சங்ககார 53 ஓட்டங்களையும், கப்பு கெதர 38 ஓட்டங்களையும், டில்கான் 26 ஓட்டங்களையும் சனத் ஜெயசூரிய 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பிறக்கன் 3 விக்கெட்டுகளையும் கிளார்க் 2 விக்கெட்டுகளையும், சைமன்ஸ், ஹாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

பதிலுக்கு 275 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய ஆஸி அணி இலங்கை அணியின் களத்தடுப்பு வேகத்திலும் பந்து வீச்சிலும் 252 ஓட்டங்களுக்கு 49.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 22 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.


அவ்வணி சார்பாக கிளார்க் 80 ஓட்டங்களையும் கடிச் 56 ஓட்டங்களையும் பிரட்லீ 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் முத்தையா முரளிதரன் 3 விக்கெட்டுகளையும் , குலசேகர, பண்டார ஆகிய இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் ஆஸ்திரேலிய அணியைச் சேர்ந்த 5 முன்னணி வீரர்கள் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் நான்கு வீரர்களை 'ரன் அவுட்' செய்து கலக்கிய டில்ஷான் இப்போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்விரு அணிகளும் மோதும் இரண்டாவது இறுதியாட்டம் இன்று ஆஸ்திரேலியாவின் சிட்னி மைதானத்தில் நடைபெறுகிறது. இதில் இலங்கை அணி வெற்றி பெற்றால் கிண்ணத்தை தன் வசமாக்கிக் கொள்ளும் அதே நேரம் மூன்றாவது போட்டி நடைபெறாது இரத்துச் செய்யப்படும்.

# முரளி மீதான குற்றச்சாட்டு: போத்தா, அக்தர் மீதும் தொடர்கிறது



ஒருநாள் போட்டித் தொடர் என்றாலும் சரி, டெஸ்ட் தொடர் என்றாலும் சரி பந்து வீச்சாளர்கள் எதிரணி வீரர்களின் விக்கெட்டுக்களை மளமள வென சாய்த்தால் அவர்களுக்கு எதிராக பல்வேறு குற்றாச்சாட்டுக்கள் வெளிவருவது கிரிக்கெட் வரலாற்றில் சகஜமான ஒன்றாகி விட்டது.

பந்து வீச்சாளர் ஒருவர் தனது உச்சத் திறமையை வெளிக்காட்டி எதிரணி விக்கெட்டுகளை வீழ்த்தும்போது விதிகளுக்கு முரணாக பந்து வீசுகிறார்; பந்தை வீசி எறிகிறார் என அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படும்.

அந்தக் குற்றச்சாட்டுக்களை கிளப்புவதில் - பரப்புவதில் முன்னணியில் திகழ்பவர்கள் ஆஸ்திரேலியர்கள். இவர்களுடைய குற்றச்சாட்டுக்களுக்கு முதலில் பலிக்கடாவானவர் - தாக்கத்துக்குள்ளானவர் - இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா - முரளிதரன்.

சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் பட்டியலில் முன்னணியில் திகழ்பவர். இவர் ஆஸ்திரேலியா அணியுடனான போட்டிகளில் அதிகமாக விக்கெட்டுகளை வீழ்த்தியவர்.

இதனால் இவர் பந்தை எறிகிறார் என்றுஆஸி. வீரர்களாலும், அந்த நாட்டு விமர்சகர்கள் மற்றும் ரசிகர்களாலும் பல்வேறு வகையான விமர்சனங்களுக்கு ஆளாகியிருந்தார்.

இதனால், ஆஸ்திரேலிய ஆய்வு மையத்திலேயே சோதனைகளை மேற்கொண்டு தனது பந்து வீச்சுமுறை சரியானதே என நிரூபித்துக் காட்டினார் முரளிதரன். அதனால் தற்போது ஓரளவு சர்ச்சைகளிலிருந்து விடுபட்டுள்ளார்.

அதுபோலவே இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் மீதும் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது. அது பெரிதாக எடுபடவில்லை. ஆனால் தற்போது இந்தக் குற்றச்சாட்டில் சிக்கியுள்ளவர்கள். தென்னாபிரிக்க வீரர் சுழற்பந்து வீச்சாளர் ஜோகன் போத்தா, பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் ரவல்பிண்டி சொனகப் அக்தார் போன்றோர்.

இவர்களில் தென்னாபிரிக்க வீரர் ஜோகன் போத்தா கடந்த மாதம் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இவருடைய பந்து வீச்சு எறியும் வகையில் இருப்பதாக ஆஸ்திரேலியத் தரப்பால் ஐ.சி.சியிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனை அடுத்து அவருடைய பந்து வீச்சு முறையை ஆராய்ந்த சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் போத்தாவின் பந்துவீச்சு ஐ.சி.சியின் விதிமுறைகளுக்கு முரணாகவுள்ளது. அவருடைய அசைவுகள் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமாகவுள்ளது. அதனால், அவருக்கு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாட தடை விதித்துள்ளது. இதனால் அவரது கிரிக்கெட் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது.

இருந்தபோதும் இவர் ஒரு இளம் வீரராகக் காணப்படுவதனால் தன்னுடைய பந்துவீச்சு முறையை திருத்தி மீண்டும் சரியான முறையில் பந்து வீசுவதை நிரூபிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் சர்வதேசப் போட்டிகளில் விளையாட அனுமதிக்கப்படும் என்று ஐ.சி.சி அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு அவருக்கு ஓரளவு ஆறுதலைக் கொடுக்கலாம்.

இவர் இவ்வாறு என்றால் மிகவும் அனுபவசாலியான அக்தரின் நிலை மோசமாகவுள்ளது. கிரிக்கெட்டில் புகழ்பெற்றவரும், ஐ.சி.சி பந்து வீச்சு மறு ஆய்வுக் குழுவில் அங்கம் வகிப்பவருமான சுனில் கவாஸ்கர் உட்பட இவர் மீது பந்தை எறிவதாக புகார் எழுப்பியுள்ளனர்.



சமீபத்தில் பாகிஸ்தானில் இடம்பெற்ற இந்திய அணியுடனான டெஸ்ட் போட்டியில் அக்தரின் பந்துவீச்சில் சந்தேகம் எழுந்தது. இவர் பந்தை எறிவதாக இந்திய அணிப் பயிற்றுவிப்பாளர் சப்பல் புகார் தெரிவித்தார். இதற்கு அக்தர் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தார். இருந்தபோதும் இந்திய அணி அமுக்கி வாசித்ததால் அந்தப் பிரச்சினை பூதாகரமாக வெளிக்கிளம்பவில்லை.

இருந்தபோதும் ஒருநாள் போட்டித் தொடரில் அக்தர் தொடர்பான சர்ச்சை வந்துவிடக் கூடாது என்ற நோக்கோடு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவரது பந்து வீச்சை இரகசியமாக ஆய்வு செய்யத் திட்டமிட்டுள்ளது. அதேநேரம் டெஸ்ட் தொடரில் அக்தரின் பந்துவீச்சு பற்றி ஆய்வு செய்ய கிரிக்கெட் நிபுணர்களிடம் ஒப்படைத்துள்ளது.

இவ்வாறு பந்து வீச்சாளர்கள் தொடர்பான சர்ச்சைகள் [illegible] உள்ளது. எதிர்காலத்தில் இதில் யார் சிக்கப்போகிறார்களோ தெரியாது.

# ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் ஆஸியின் ஆதிக்கம் தொடர்கிறது



ஒரு நாள் கிரிக்கெட் தரவரிசையில் ஆஸ்திரேலியாவின் ஆதிக்கம் தொடர்கின்றது. பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டம் ஆகிய இரண்டிலும் அவ்வணி வீரர்களே முன்னணியில் உள்ளனர்.

இத் தரப்படுத்தல் அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் சபை கடந்த புதன்கிழமை வெளியிட்டுள்ளது. அதில் 135 புள்ளிகளைப் பெற்று ஆஸ்திரேலிய அணி முதன்நிலை வகிக்கிறது. இந்தியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் வென்ற பாகிஸ்தான் அணி 118 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும் உள்ளது.

துடுப்பாட்டத் தரவரிசையில் 7ஆவது இடத்தில் இருந்த குமார் சங்ககார மூன்று இடங்கள் முன்னேறி 4ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். பந்து வீச்சில் முறையே மூன்றாம் 4ஆம் இடங்களைப் பெற்றிருந்த முத்தையா முரளிதரன், சமிந்த வாஸ் ஆகியோர் இரு இடங்கள் பின்தள்ளப்பட்டுள்ளனர்.



தரப்படுத்தலில் முதல் 10 இடங்களைப் பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

ஆஸ்திரேலியா (135 புள்ளிகள்) முதலாமிடம், பாகிஸ்தான் (118 புள்ளிகள்) இரண் டாமிடம், தென்னாபிரிக்கா (116புள்ளிகள்) மூன்றாமிடம், நியூசிலாந்து (112 புள்ளிகள்) நாலாமிடம், இங்கிலாந்து (108 புள்ளிகள்) ஐந்தாமிடம், இந்தியா (108புள்ளிகள்) ஆறாவது இடம், இலங்கை (107 புள்ளிகள்) ஏழாமிடம், மேற் கிந்தியத் தீவுகள் 8 ஆம் இடம், சிம்பாவே 9 ஆம் இடம், பங்களா தேஷ் 10ஆம் இடம்.

### துடுப்பாட்ட வரிசை

கில் கிறிஸ்ட் (ஆஸ்திரேலியா) முதலாமிடம், ரிக்கி பொன்டிங் (ஆஸ்திரேலியா) இரண்டாமிடம், கிரம் -ஸ்மித் (தென்னாபிரிக்கா) மூன்றாமிடம், குமார் சங்ககார (இலங்கை) 4ஆம் இடம், முகமதுயூசுப் (பாகிஸ்தான்), கிறிஸ் கெய்ல (நியுசிலாந்து) இருவரும் 5ஆம் இடம், அன்ரு சைமன்ஸ் (ஆஸ்திரேலியா)7ஆம் இடம், மைக் ஹஸே (ஆஸ் திரேலியா) 8ஆம் இடம், மைக்கல கிளார்க் (ஆஸ்திரேலியா) 9ஆம் இடம், இன்சுமாம் உல் -ஹக் (பாகிஸ்தான்) 10 ஆம் இடம்.

துடுப்பாட்ட வரிசையில் இந்திய அணியின் முன்னணி வீரர்கள் எவரும் இடம்பெறவில்லை. குறிப்பாக 10ஆவது இடத்தில் இருந்த அணித்தலைவர் ராகுல் ராவிட் 11 ஆம் இடத்திற்கும், சச்சின் டெண்டுல்கர் 21ஆவது இடத்திற்கும். அதிரடி வீரர் வீரேந்தர் சேவாக் 23ஆவது இடத்திற்கும் பின்தள்ளப்பட்டுள்ளனர்.

**பந்து வீச்சு வரிசையில் முதல் பத்து இடங்களைப் பெறும் வீரர்கள் முறையே ...**

பிரட்லீ (ஆஸ்திரேலியா), ஷோன் பொலக் (தென்னாபிரிக்கா), கிளன மெக்ராத் (ஆஸ்திரேலியா), நாவேந் உல் - ஹசன் (பாகிஸ்தான்), முரளிதரன் (இலங்கை), சமிந்தவாஸ் (இலங்கை), டனியல் வெட்டோரி (நியூசிலாந்து) ஷேன்பொண்ட் (நியுசிலாந்து) இர்பன் பதான் (இந்தியா) ஹர்பஜன் சிங் (இந்தியா).

சிறந்த சகலதுறை ஆட்க்கரார் வரிசையில் இங்கிலாந்து வீரர் பிளின்ரொப் முதலாமிடத்தைப் பிடித்துள்ளார். தென்னா பிரிக்க வீரர் ஷேன் பொலக் இரண்டாமிடத்தையும் ஆஸ்திரேலிய வீரர் அன்ரு சைமாண்ட்ஸ் மூன்றாமிடத்தையும் பாகிஸ்தான் வீரர் சோகைப் மாலிக் நான்காம் இடத்தையும், இந்திய வீரர் இர்பன் பதான் ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.




# கார்ப்பந்தயத்தில் இந்திய வீரர் சாதனை!



கோவையில் இடம் பெற்ற இந்திய - இலங்கை வீரர்களுக்கான கார்ப்பந்தயத்தில்இந்திய வீரர்கள் முதலிடம் பெற்றுள்ளனர்.

கோவையிலுள்ள ஹரி மோட்டார் ஸ்பீ டுவே மையத்தில் இந்தியா மற்றும் இலங்கை வீரர்கள் பங்கேற்ற கார்ப்பந்தயம் நடைபெற்றது. இப்போட்டியில் இலங்கையில் இருந்து 17பேரும், இந்தியாவில் இருந்து எட்டுப்பேரும் பங்குபற்றினர்.

முதல் ரேஸில் மொத்தம் 16 வீரர்கள் போட்டியிட்டனர். போட்டியின் ஆரம்பம் முதலே இந்திய வீரர்களான அமய வலவாகரும் ஆதித்யா பட்டேலுக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. ஆனால் திடீரென ஆதித்யா வெற்றிபெற்றார். அதன் மூலம் அச்சுற்றில் முதலிடத்தைப் பிடித்துக்கொண்டார். 2ஆம், 3ஆம் இடங்களை இலங்கை வீரர்களான தேஜன், ரோமானி ஆகியோர் கைப்பற்றினர்.

முதல் ரேசில் தோல்வியைத் தழுவிக் கொண்ட அமய வலவாகர் 2ஆவது ரேசில் கடும் நெருக்கடி கொடுத்தார். இவர் இதில் எப்படியும் வெற்றிபெற்று விட வேண்டுமே என்ற துடிப்புடன் போட்டியிட்டார். ஆதித்யா படேலும் கடும் நெருக்கடி கொடுத்தார். இறுதியில் அமயாவலவாகர் முதலிடமும், ஆதித்யா 2ஆவது இடமும் பெற்றனர். இலங்கை வீரர் சாஹில் ஷேலார் 3ஆம் இடத்தைப் பெற்றார்.

## உலகக் கிண்ணத் துணுக்கு...

உலகக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒரு பார்வை:-

- 1998 பிரான்ஸில் நடந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் முதல் கோலை அடித்தவர்யார்?

  **சீசர் சாம்பியோ (பிரேஸில்)**

- உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பிறேஸில் எத்தனை தடவை கிண்ணம் வென்றுள்ளது?

  **ஐந்து தடவை**

- 2005இல் டபிள்யு டி.ஏ.சம்பியன் ஷிப்போட்டி எங்கே நடந்தது?

  **லாஸ் ஏஞ்சல்ஸ் (அமெரிக்கா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தமா? அது இல்லையா?

# ஜெனீவாப் பேச்சில் எதிர்பார்க்கப்படும் ஒரு சொற்பதில்!

**எச்சரிக்கை**

திரும்பும் பக்கமெல்லாம் எச்சரிக்கை ஒலி எழும்பும் காலம். இராஜதந்திர வழிமுறைகள் திடுப்பென்று படம் விரித்திடும் காலம். எந்தப் பற்றைக்குள் எந்த நாகமோ! எந்தப் பற்றைக்குள் எந்த புடையனோ!! எந்த வயல்களில் யார் விதைத்த கண்ணிவெடிகளோ!!!

இந்து சமுத்திரத்தை இந்தியா தனது முற்றம் என்று சொல்லுகின்றது; அமெரிக்கா அதனைத் தனது பூந்தோட்டம் என்கிறது. சீனா பர்மியத் தீவுகளுக்குள்ளால் தன் தலையை நீட்டி நிற்கின்றது. ஆதலால் என்றும் இளமை குன்றாக் 'கவர்ச்சிக் கன்னி இலங்கை'மீது அனைவருக்கும் ஒரு கண். கொள்கைகள் தத்துவங்கள், கோட்பாடுகள் போன்ற அனைத்து உன்னதங்களுக்கும் வெளியே பச்சை வியாபாரமே. முழுமுதல் அரசியலாய் இருக்கும் ஒரு யுகமிது. இப்பின்னணியில் வைத்தே ஜெனீவாப் பேச்சைப் பார்க்க வேண்டும்.

தொடங்கிய இடத்திலிருந்தே மீண்டும் பேச்சுகள் ஆரம்பமாகின்றன என்பது ஒரு வரலாற்றுச் சோகமாகும். எப்படியாயினும் கண்ணுக்குத் தெரிவதைவிடவும் பேச்சுகள் பதற்றம் தணிந்தவையாய் அமையக்கூடிய வரலாற்று நிபந்தனைகளே அரங்கில் தெரிகின்றன.

பிரசங்கங்கள், கூக்குரல்கள், சொற்தெறிக்கும் வீறாப்புகள், மனவேகங்கள் ஆகிய அனைத்தையும் வரலாற்றன்னை தன்புன்முறுவலால் கேலி செய்யும் யதார்த்தம் கொழும்பு அரசியலில் அரங்கேறி வருகிறது. மேசை இப்போது ஜெனீவாவுக்கு நகர்த்தப்பட்டு விட்டது. ஒஸ்லோவை விடவும் அதிகம் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த இடம் ஜெனீவா. பேச்சுகள் சர்வதேச மயப்படுவதை எதிர்த்த சக்திகள் இப்போது மேலும் ஒருபடி மேற்சென்று அதிமுக்கியத்துவமான சர்வதேச மையத்துக்கு மேசையைத் தள்ளியுள்ளார்கள். இதன் மூலம் ஜெனீவாவில் பேச்சென்பது சர்வதேச சமூகத்திற்குப் பதில் சொல்ல



வேண்டிய கடப்பாட்டை மிகவும் அதிகரித்துள்ளது. ஆதலால் பேச்சு அதிகம் சர்வதேச சமூகத்திற்குப் பொறுப்புச் சொல்லவேண்டியதாகி விட்டது.

**பொன்னாடை விரிப்புடன் சர்வதேச தளத்தில் பேச்சு**


தோளில் கைபோட்டவாறு கொழும்பிலிருந்து கதைத்திருக்கக்கூடிய மேசையை காலால் உதைத்துத் திம்புவுக்குத் தள்ளினர் சிங்கள ஆட்சியாளர். உடைந்த மேசையில் எதிரும் புதிருமாயிருந்து திம்புப் பேச்சுக்கள் நிகழ்ந்தன. பின்பு அந்த மேசை கண்டம் தழுவிய உலாச்சுற்றி இறுதியில் கண்டம் கடந்து இப்போது சர்வதேசத் தளமான ஜெனீவாவில் பொன்னாடை விரிப்புடன் காட்சியளிக்கின்றது.

அந்த மேசையில் [illegible]கள் மிகவும் குறுகலான[illegible] அதாவது யுத்தமா? இல்லையா? இரண்டில் ஒரு பதில். ஆலாபாரணனைகள், அழகு வார்த்தைகள், வாதப் பிரதிவாதங்கள் இவை அனைத்திற்கும் அப்பாலான ஒரு சொல்லுப் பதிலை ஜெனீவாவில்வைத்து வல்லரசுகள் கோருகின்றன.

இங்கு முன்வைக்கப்படும் மேற்படி ஒரு கேள்விக்கு இரு பதில்கள் உண்டு. ஆனால், கேள்வியை முன்வைப்பவர்கள். அக்கேள்வியுடன் சேர்த்து ஒரேயொரு பதிலை மட்டும் முன்வைப்பார்கள். அதாவது கேள்வியும் அவர்களது; பதிலும் அவர்களது. அந்தப் பதில் யுத்தமில்லை என்பது தான். யுத்தம்என்று சொல்வோர் சர்வதேச சமூகத்தின் முன் எதிரியாகி விடுவர். இதுதான் வரலாற்று நிர்ப்பந்தம். ஆதலால் ஜனாதிபதி ராஜபக்ஷ யுத்தம் வேண்டுமென்று உச்சரிக்க முடியாது.

**சர்வதேச மதிப்பைப் பெறுவதற்கான ஒரு களமே ஜெனீவாப் பேச்சு**

ஆதலால் ஜெனீவாப் பேச்சு என்பது சர்வதேச நன்மதிப்பை யார் கூடக் குறையப் பெறுவது என்பதற்கு ஒரு களமேயாகும். இரத்தம் கொட்டி யுத்தம் நிகழ்ந்த களத்திற்குப் பதிலாக சிரிப்பைக் கொட்டி




யுத்தம் நிகழப்போகும் களமது. சிரிப்பு, பார்வை, தோளசைப்புகள், கைகுலுக்கல்கள் எல்லாம் பீரங்கிகளாய் செயற்படும் களமது.

இந்தியாவின் கதவுகள் விடுதலைப் புலிகளுக்கு அடைபட்ட பின்னணியில் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறுவதற்கான ஓர் ஒற்றையடிப் பாதையாகப் பேச்சுகள் அமைந்தன. கடந்த நான்கு ஆண்டுகளில் இது சார்ந்து கணிசமான முன்னேற்றம் விடுதலைப் புலிகள் தரப்பிற்கு ஏற்பட்டுள்ளது. உண்மைகள் எப்போதும் ஒப்பீட்டு ரீதியானவைகளே தவிர முழு நீளமானவை அல்ல. இது விடயத்தில் ஒப்பீட்டு ரீதியான வெற்றிகள் பலவற்றை புலிகள் அடைந்துள்ளனர்.

பேச்சு எனும் பாதைக்கு ஒரு தர்க்க பூர்வ தலைவிதி இருக்கிறது. நிகழ்ந்து கொண்டிருக்கும் பேச்சுகள் ஓர் எல்லைக் கப்பால் நச்சுக் குவளையே.

## அரசுக்குப் பேச்சு மேசை ஒரு நாடக மேடை

அது இரத்தத்துடன் கலந்து உடலுள் கூடவே குடியிருந்து உடலைக் கொன்று விடும். இரத்தம் சிந்தும் யுத்தகளத்தில் தலைசரியும் விதம் தெரியும். ஆனால், சிரிப்பை சிந்தும் யுத்தகளத்தில் உடல் சரியும் நிலை தெரியாது.

இலங்கைத் தீவின் அரசியலில் யுத்தமே அதன் இறுதித் தலைவிதி என்பது ஒரு குழந்தைக்கும் தெரியும். ஏனெனில், சிங்கள அரசஇயந்திரம் எத்தகைய அந்நிய எதிரிகளிடமும் அடிபணிந்து தமிழரை ஒடுக்குவதையே இறுதி இலக்காய் கொண்டுள்ளது. அவர்களது அகராதியில் இப்போதைய பேச்சுகள் என்பன அந்நிய சக்திகளை அரவணைப்பதற்கான ஒரு மார்க்கமேயாகும். பேச்சுக்கான ராஜபக்ஷ அரசின் ஆரவாரம் இதற்கான ஒரு குறிகாட்டியேயாகும்.

**பயிற்சிப்பட்டறை ஒரு விசித்திர நாடகம்**

சுமாராக ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டு கால அரச நிறுவனப் பாரம்பரியத்தைக் கொண்டவர்கள் சிங்கள ஆட்சியாளர்கள். ஒரு பேச்சுக்காகப் பகிரங்கப் படுத்தப்பட்ட மிகவும் எடுப்புச் சாய்ப்பான ஒரு பட்டறை நடத்துவது சற்றும் எதிர்பார்த்திருக்க முடியாத ஒரு விசித்திர நாடகமாகும். சர்வதேச சமூகத்தின் முன் அரங்கேற்றும் ஒரு தெருக்கூத்தே இது. அதாவது, பேச்சில் தாம் அதிகம் சீரிய பொறுப்புள்ள சமாதான விரும்பிகள் என்ற எண்ணப்பாங்கை சர்வதேச சமூகத்தின்முன் காட்ட முனைவதன் வெளிப்பாடே இப்பட்டறை. அதாவது, இதுவும் ஓர் இராஜதந்திர சிலம்பம் தான்; இராஜதந்திர நிலை எடுப்புத்தான், அதாவது ஜெனீவா நாடகம் இறுதி மேடைக்கு வரமுன்பு அது கொழும்பில் அரங்கேறிவிட்டது. ஆதலால் நாடகத்தின் கதையை இனி நாம் தெளிவாக உரைக்கலாம். அதன்காட்சிகள் கண்ணில் விரிகின்றன.

சண்டை நிறுத்தத்தை அமுல் படுத்துவோம். இப்படி ஒளிவட்டத்துடன் கூடிய ஒரு தர்ம வாக்கியம் வெளிவரும். அதனை ஈடுகட்ட வல்ல நிதானமுள்ள வார்த்தைகளாய் புலிகளின் வார்த்தைகளும் அமையும். அரங்கில் சண்டை நிறுத்தம் எனும் கருத்து முதன்மை பெறும். அப்போது அதனை எப்படி அமுல்படுத்துவது என்ற கேள்விக்கு விளக்கவுரை அளிக்க வேண்டிய பெரும் பொறுப்பு நோர்வே அமைச்சரும் பேச்சு ஏற்பாட்டாளரும் பேச்சுக்கான சர்வதேச பிரதிநிதியுமான எரிக் சொல்ஹெய்மைச் சார்ந்ததாக அமையும். உண்மையில் சொல்ஹெய்ம்மை பேச்சு மேசையில் ஒரு சர்வதேசப் பிரதிநிதியாகவே கருத வேண்டும்.

**எரியும் வீட்டில் கொள்ளி பிடுங்கப் பார்க்கும் சர்வதேசம்**

தமிழீழ மக்கள் அதிகம் பாதிப்புற்ற, துயருற்ற மக்களாவர். அளவால் சிறிய இந்த மக்கள் கூட்டம் தன் அளவை விடவும் பாரிய சுமைகளையும் துயரங்களையும் சுமந்து நிற்கின்றது. ஈவிரக்கமின்றி ஒடுக்கப்படும் அப்பாவி மக்களிவர்கள். உலக அரசுகள் இவர்களை, இவர்களது நியாய பூர்வமான உரிமைகளுக்குள்ளாலும் துயரங்களுக்



குள்ளாலும் பார்ப்பதைவிடவும் 'எரியும் வீட்டில் கொள்ளி பிடுங்கவே பார்க்கிறார்கள்'. எல்லாவிதத் தர்மபோதனைகளும் ஜனநாயகங்களும்

மு.திருநாவுக்கரசு
அரசியல் ஆய்வாளர்

உரிமைகளும் இவர்கள் முன்னாள் பிணவாடை வீசுவதேயே இம்மக்கள் பார்க்கிறார்கள்.

எல்லாவற்றிக்கும் அப்பால் இத் தமிழீழ மக்களிடம் ஓர் ஆறுதலுண்டு. அதாவது, தம் தரப்பில் ஜெனீவா அரங்கில் அமர்ந்திருப்போர் கால்நூற்றாண்டிற்கும் குறையாத பேச்சில் அனுபவமுள்ள கலாநிதி அன்ரன் பாலசிங்கம் முதல் மற்றும் அனுபவசாலிகளையும் கொண்ட அணி என்பது. மனிதாபிமானகண் கொண்டு நோக்கினால் ஜெனீவாப் பேச்சு என்பது ஒரு விவாத அரங்கமல்ல என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு.சு.ப.தமிழ்ச்செல்வனின் வியாக்கியானம் மிகவும் காத்திரமானதும், பொறுப்பு வாய்ந்ததும் என்பது தான் இங்கு அதிகம் சுட்டிக்காட்டப்படக் கூடியதாகும். ★

## சர்வதேசமோ எரியும் வீட்டில் கொள்ளி பிடுங்கப் பார்க்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட இலங்கை சங்கீத சபை நடத்தும்
### சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 159 ஆவது
## ஆராதனை விழா - 2006

காலம்: 2006.02.12 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8..30 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை

இடம்: யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை (யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்)

தலைவர்: **திரு.வே.தி.செல்வரத்தினம்**
(யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும் வட. இலங்கை சங்கீத சபைத் தலைவரும்)

இசைக் கலைஞர்கள், ஆர்வலர்கள், தேர்விற்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரையும் வருகை தரும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**நிகழ்ச்சிகள்**

1. காலை 8.30 மணிக்கு :- மங்கள விளக்கேற்றலும் இறைவணக்கமும்
2. மங்கள இசை:- ஈழ நல்லூர் பி.ரவீந்திரன் குழுவினர் வழக்கம்பரை ஆர்.சிவகுமார் குழுவினர்
3. சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் பூசையும் வழிபாடும்
4. தலைமையுரை
5. பஞ்சரத்தின கீர்த்தனாஞ்சலி (சகல கலைஞர்களும்)
6. பேச்சு:- "சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் இசைத் தொண்டு"
   திரு.எல்.திலகநாயகம்போல்
   (இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர்)
7. பக்கவாத்தியங்கள் சகிதம் இசைக்கலைஞர்களின் இசைக் கச்சேரி நடைபெறும்.

**அ.தற்பரானந்தன்,** செயலாளர், வ.இ.ச.சபை.

**வே.தி.செல்வரத்தினம்,** வ.இ.ச.சபைத் தலைவரும், வலயக் கல்விப் பணிப்பாளரும்.

(சி.47819) (39.26.11)

## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்



**பொன்னம்பலம் தில்லைநாதன்**
(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

மண்ணில் 16.01.1945 விண்ணில் 12.02.1995

பாசத்தைப் பொழிந்து
உதிரத்தை உரமாக்கிய
தந்தையே! மறக்க முடிவதில்லை
உம் நினைவலைகள்.

கல்வயல்,
சாவகச்சேரி. (46809) (39.26.11) **-குடும்பத்தினர்.**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 05 - 1930



மறைவு 28 - 01 - 2002

**திருமதி தம்பிஐயா நாகம்மா**
(பரராசசிங்கம்)

ஆண்டுகள் நான்கு சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம்மை விட்டுப் பிரியாது.

இணுவில் மேற்கு,
இணுவில். (46836)(26.11) **-குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**குமாரசாமி சண்முகலிங்கம்**
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி சண்முகலிங்கம் அவர்கள் நேற்று (11-02-2006) சனிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கனகலட்சுமியின் அன்புக் கணவரும் உமாசங்கர், கோபுசங்கர், ரவிசங்கர், உமாரதி (பிரதேச செயலகம், கோப்பாய்), சிவசங்கர் (நீர்ப்பாசனத் திணைக்களம், திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாவதி, நளினி, சிவாஜினி, சிவபாலசேகரன் (நில அளவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனித்தா, ஜனித்தன், பிரசன்னா, நாகலட்சுமி, நிரோஷிகா, ஹரேந்திரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12-02-2006) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மங்கை இல்லம்'
சந்தை வீதி, உடுப்பிட்டி. (46832)(26-11)

தகவல்: **மனைவி, பிள்ளைகள்.**

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் க.சதீஸ் அவர்களின் அன்புத் தந்தை

**செல்லையா கணேசலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரதேச செயலக நலன்புரிச்சங்கம், நல்லூர்.

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும். (சி/47829)(26-11)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஒய்வுபெற்ற ஆசிரியையும், உப அதிபருமான திருமதி சரஸ்வதி முருகையா அவர்களின் அன்புக் கணவரும் பழைய மாணவருமான

**இராமலிங்கம் முருகையா**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவிப்பதுடன், ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சங்கம்,**
யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.
(46828)(39.26.11)

## குடாநாட்டில் 5 இடங்களில் கிராமிய சுகாதார நிலையங்கள்

தென்மராட்சி, பெப்.12

சுகாதாரக் கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 'வேல்ட்விசன்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் யாழ். மாவட்டத்தில் ஐந்து கிராமிய சுகாதார நிலையங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

தும்பளை கிழக்கு, குடத்தனை, கற்கோவளம், ஊரெழுமேற்கு, நீர்வேலி தெற்கு ஆகிய இடங்களில் இந்த சுகாதார நிலையங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை யாழ். 'யூநொப்ஸ்' அலுவலகம் மேற்கொண்டுவருகிறது. (எ-122)

## ஒரே சூலில் 5 குட்டிகளை ஈன்ற ஆடு

வடமராட்சிப் பகுதியில் ஆடு ஒன்று ஒரே சூலில் 5 குட்டிகளை ஈன்றுள்ளது.

புலோலி தெற்கு, கிணற்றடி வைரவர் கோயிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் கிருஷ்ணமூர்த்தி என்பவருக்குச் சொந்தமான ஆடு இவ்வாறு 5 குட்டிகளை ஈன்றுள்ளது.


மூன்றாவது தடவையாகக் குட்டிகளை ஈன்ற போதே இந்த ஆடு 5 குட்டிகளை ஈன்றது. 5 குட்டிகளும் திடகாத்திரமாக வுள்ளன எனக் கூறப்பட்டது. (எ-173)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காரைநகர் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் அரச, அரசசார் பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர். (எ-73)

## ஓராண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பில் 20-07-1987

ஆண்டவன் பறிப்பில் 24-01-2005

## அமரர் சோமசுந்தரம் அருண்பிரசாத்
(சனா)

திதி: பூரணை 12.02.2006

வசந்தம் தேடிப் பறந்தவனே
வசந்தம் வீசும் வேளை நீ எங்கு ஐயா
சென்றுவிட்டாய், போய்வருகிறேன் என
சிரித்துக்கொண்டு நீ சென்றாய், ஆண்டொன்று
அவனியில் ஆகியும் நீ இன்னும் வரவேயில்லையடா
எம் அழுகின்ற விழிகள் கங்கையிடம் மன்றாடுகின்றன
கண்ணீருக்காக, உனைநினைத்து ஓயாது அழ;
காலன் அவன் உனை எமைவிட்டுப் பிரித்தாலும்
பிரியாது ஐயா உன் நினைவுகள், உன்
பிரிவாலே வாடுகின்றோம் நடைபிணமாக
உன் நினைவுகளுடன்...

'யோகவாசா'
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர், உற்றார், உறவினர்.**

(46823) (39.26.11)


## Just Change your Life with AIM(S)



தகவல் தொழில்நுட்ப உலகில் வாழும் எமக்கு கணனியின் தேவையும் அவசியமும் நாளுக்கு நாள் சவாலை ஏற்படுத்துகின்றன. முழுமையான கணனி பயிற்சிநெறியினை முடித்துக் கொண்ட எம்மில் பலருக்கு தங்களது தேவைகளைக் கூட நிவர்த்தி செய்துகொள்ள முடியாது உள்ளது. இவையெல்லாம் எவற்றால்?

1. சரியாக திட்டமிடப்படாத Syllabus
2. செயல்முறைக் கல்வியை முதன்மைப்படுத்தப் படாத பயிற்சிநெறிகள்
3. நீங்கள் பூர்த்தி செய்த கற்கைநெறிகள் துறைசார் வல்லுனருக்கோ அல்லது தொழில்புரியும் துறைக்கேற்ப வடிவமைக்கப்படாமை.

ஆனால் இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டு AIMS இனால் அறிமுகப்படுத்தப்படும் அனைத்து பயிற்சிநெறிகளும் நன்கு திட்டமிடப்பட்டு, உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய Syllabus ஐயும் உள்ளடக்கியுள்ளது. AIMS இன் பயிற்சிநெறிகள் அனைத்தும் வெவ்வேறு துறைசார் வல்லுனர்களால் வெவ்வேறு தேவைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

**This is your chance, Make it be Positive**

**Certificate / Diploma or Advance Diploma Courses**

| | |
|---|---|
| COM Kids (for Kids) | ART and Publication |
| ICT (for Grade 10 stuaents) | Desk Top Publishing |
| MIS | Graphic Designing |
| GIT (for A/L students) | Animation (3D Max) |
| Word Processing | Net Working |
| Spread Sheet Management | Hard Ware |
| DBMS (Oracle) | Web Page Designing (PHP/MySQL) |
| Presentation | Programming (VB.Net, Java, C #) |
| Operating Systems (Windows) | Computer Application |
| Accounting (Tally) | Engineering Drawing (Auto CAD) |
| Linux Desktop Fundamentals | |

விண்ணப்பப் படிவங்களை AIMS இல் பெற்றுக்கொள்ளலாம்.
இன்று விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு 25% கட்டணச்சலுகை வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பயிற்சிநெறிகளை தனியாகவோ அல்லது குழுக்களாகவோ கற்பதற்கும் மற்றும் பயிற்சிநெறி சம்பந்தமான மேலதிக விபரங்களை பெறுவதற்கும் அழையுங்கள்.

0777 667108, 0777 570077, 0777 563144.

AIMS - Jaffna

**Center For FOSS and LAMP**

AIMS

ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
#118 Palaly Road, Thirunelvely, Jaffna, Srilanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## லோறன்ஸ் அலக்ஸ்சாண்டர் (சம்மாட்டி)

*(பிரபல தொழிலதிபர் - உரிமையாளர் - Hotal Imperial, Bampalapittya, Passion Pafric, Main Street, Colombo, Farm Fax Wellawatta, Mundel Resturent Puttalam, Newton Whine Shop, Jaffna, No.1 Bar, k.k.s. Road, Jaffna, A.J.M. Tex, Jaffna.)*



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் 15/4, Vajira Road, Bampalapittya வை வசிப்பிடமாகவும் கொண்ட லோறன்ஸ் அலக்ஸ்சாண்டர் நேற்று முன்தினம் (10.02.2006) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சலமோன் லோறன்ஸ் - பாக்கியம் தம்பதியரின் அருமைப் புதல்வரும் காலஞ்சென்ற அருளப்பு - அல்பிரட்டம்மா தம்பதியரின் மருமகனும் மேரி மெற்ரல்டாவின் (பிறேமா) அன்புக் கணவரும் அலக்ஸ் நியூட்டன் (லண்டன்), நிக்சன், நிருபன், நிசான், லக்சனா ஆகியோரின் அன்புத்தந்தையும் செல்வமாணிக்கம் (யோசேப் - A.J.M. Tex ), மரியதாஸ் (லண்டன்), உத்தமசீலி (பிரான்ஸ்), ஞானதேவி (நீர்கொழும்பு), ஜெயசீலி (இத்தாலி), அமலசீலி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருள்மேரி, லீமா றோஸ், அந்தோனிபர்ணாந்து, காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை மற்றும் ஜோன்ஜோச், ஜெயரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நாளை (13.02.2006) திங்கட்கிழமை மு.ப. 9 மணிக்கு பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பி.ப. 3.30 மணி வரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இரங்கல் திருப்பலியுடன் கனத்தை சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/4, Vajira Road, Bampalapittya
Colombo 04. T.P. 2587908 (46841)(33-15-45)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## செல்வசீலன் அகிலன்



இராமலிங்கம் வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வசீலன் அகிலன் நேற்று (11.02.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்வசீலன் (உரிமையாளர் - அலோமாஸ், சுன்னாகம்) - சாந்தகுமாரி தம்பதியரின் அன்பு மகனும் அலோமா (உடுவில் மகளிர் கல்லூரி - 2004 உயர்தரம்), அஷான் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி - தரம் **11** ) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னத்தம்பி - லூசி, திரு.திருமதி பிரான்சிஸ் - நேசமலர் ஆகியோரின் பேரனும், செல்வநாயகம் (அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர்), காலஞ்சென்ற செல்வக்குமார், செல்வரஞ்சன், திரு.திருமதி கிருஷ்ணமூர்த்தி, அமலேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும், அலோசியஸ் மனோகரன், தயாபரன், கிருபாகரன், செல்வநாயகி, செல்வரஞ்சி ஆகியோரின் மருமகனும் தேவதர்சினி, அனுஷீலா, ராகவேந்தன், கரன், செல்வி, ஆரணியா, ஜிதுஸ்மன், திவித்தா, கோபிதா, அனோஜிகா, அருணியா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், ஜீவராஜா, கிரிதேவ், பிரகாஷ், பிரபா அலிஸ்ரன், அனோஷான், தஷான், அஷானி, தர்சிகா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (12.02.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்வம் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராமலிங்கம் வீதி,* (46840)(15-45-33)
*உடுவில்.*

தகவல்:
சி.செல்வசீலன் (தந்தை).

## கதிரவேலு சிவசக்திவேல்



புங்குடுதீவு, 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இராமநாதபுரம், கல்மடுவை வசிப்பிடமாகவும் தற்போது S.M.கேணியடி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சிவசக்திவேல் 09.02.2006அன்று அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - கனகாம்பிகை (பிரான்ஸ்) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சபாரத்தினம் (பிரிட்டிஷ்) - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் கோசிகன், கோகுலன், பிரகாஷ், மிதுஷன், விவஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் வடிவேலு (பிரான்ஸ்), யோகேஸ்வரி (பிரான்ஸ்), இரத்தினவேல் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் சிங்கராசா (பிரான்ஸ்), உதயதர்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் வாணி சிறி, அமரர் சுகிர்தன், சுபாசினி, அகல்யா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஜீவாசினி, யாழினி, குமுதினி, வசீகரன், ரதிவதனா, கோகுலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்போதய இல்லத்தில் இன்று (12.02.2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொ.பே.இல. 0773164641*
(46827&33&15&45) *0779228783*

தகவல்
மனைவி, பிள்ளைகள்.

## சின்னையா இராசரத்தினம் (சேனாதி)

5ஆம் வட்டாரம், மண்கும்பான் மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராசரத்தினம் அவர்கள் நேற்று (11.02.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மண்கும்பான்,*
*வேலணை.*

தகவல்:
செல்வரத்தினம் (கொத்தலா)
மனோகரன்
} மகன்மார்

(46847&33&15&45)


**Dialog GSM**

**kit** 100/- 400/- 1000/-

டயலொக் **Kit** காட்,
SLT பாஸ்போட் காட்,
SLT இன்ரநெற் காட் மற்றும்
சகலவிதமான தொலைபேசி
அட்டைகளையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் தேவையான
அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 222 7835
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. 222 7310

வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி லூட்ஸ்மேரி பாக்கியநாதன்

இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லூட்ஸ்மேரி பாக்கியநாதன் அவர்கள் நேற்று (11.02.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியநாதனின் அன்பு மனைவியும் சூசை - மதலேனா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் திரு. திருமதி சேவியர் செலஸ்ரீனா, திரு. திருமதி டேவிட் திரேசம்மா, திரு. திருமதி கீதபொன்கலன் இராக்கினி, திரு. திருமதி யேம்ஸ் கத்தரீன், அருட்தந்தை சூசை டேமியன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (12.02.2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெறும்.

இளவாலை.

தகவல்:
அருட்தந்தை எஸ்.டேமியன்
(46846&33&15&45) அ.ம.தி. (சகோதரர்கள்).

## பொன்னையா குருநாதபிள்ளை



(முன்னாள் ஊழியர், சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

மாங்கொல்லை வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு, மஞ்சத்தடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா குருநாதபிள்ளை அவர்கள் நேற்று (11.02.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவலிங்கம், விமலாதேவி, மோகனாதேவி, விக்கினேஸ்வரி, கமலாதேவி, றஞ்சினிதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயரட்ணசிங்கம் (பிரதேச சபை, மானிப்பாய்), தருமராசா, சித்திரவேலாயுதம் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (46844)(33-15-45)

மஞ்சத்தடி, இணுவில். தகவல்: குடும்பத்தினர்.

## சின்னத்துரை நேசதுரை

(முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

தெல்லிப்பழை, தையிலிட்டியைப் பிறப்பிடமாகவும் அல்வாயை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை நேசதுரை நேற்று (11.02.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும் தையிலிட்டி சின்னத்துரை - இலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகனும் சின்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நேசமலர், தர்மசீலன், பரமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரோதயம், ஞானகலாவதி, ஞானேஸ்வரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிறிரஞ்சினி (இத்தாலி), உதயகுமார் (சுவிஸ்) சுயாதா, காலஞ்சென்ற நிஷாலினி ஆகியோரின் சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 11 மணியளவில் கரகம்பன் மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] அல்வாய் கிழக்கு. தகவல்: சகுந்தலாதேவி
[illegible] (மனைவி).


# விடுமுறை அறிவித்தல்

## சுஜீவா ஆயுள்வேத வைத்தியசாலை

சகலவித வாதங்கள், மலட்டுத்தன்மை, முட்டு, எக்சிமா, வயிற்றுப்புண், சிறுநீரகக்கல், இளநரை, ஆண், பெண் இரகசிய வியாதிகள் உட்பட மாற்றமுடியாததெனக் கருதப்பட்ட ஏராளமான நோய்களை நீக்கி குறுகிய காலத்தில் பிரசித்திபெற்ற எமது காரைநகர் கிளையும் இல. 6, கலட்டி அம்மன் கோயில் வீதி எனும் முகவரியிலுள்ள புதிய யாழ். நகர் கிளையும் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும். மூளாய், சுழிபுரம், வட்டுக்கோட்டை போன்ற தூர இடங்களிலிருந்து வரும் மக்கள் இதனைக்கவனத்தில் கொள்ளவும்.

| கிளை | | சிகிச்சை நேரம் | வைத்தியர்கள் |
| --- | --- | --- | --- |
| காரைநகர் } யாழ்நகர் } | → | மாலை 3.00 - 6.00 } தினந்தோறும் | ஞாயிறு தவிர |
| பாலிநகர் | → | தினந்தோறும் | |

(46825)(33-15-45)


# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும்



உதயம்: 23.11.1933 அஸ்தமனம்: 13.01.2006

## அமரர் மாரிமுத்து காங்கேசன் (காசி)

(இளைப்பாறிய புகையிரத ஊழியர்)

13.01.2006 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் அனுபாத அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும் தொலைபேசி ஊடாக ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (12.02.2006) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'தேவி இல்லம்'
நாவலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.
T.P.: 077 6569738 (46838&33&15&45)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள்,மைத்துனர்கள்.

# ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 29-12-1955 விண்ணில் 25-01-2005

## சின்னையா குலேந்திரன்

திதி - பூசம்

தன் நலம் பாராது பிறர் நலம் பேணி வாழ்ந்த கருணை உள்ளம் கொண்டவரே! தைப்பூச நன்நாளில் இறையடி சேர்ந்த உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி!

சி.சிவயோகநாதன்,
இராம கிருஷ்ணவீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.
(46835&33&15&45)

# நெஞ்சை விட்டகலாத 31 ஆம் நாள் நினைவில்

அன்னை மடியில் 04 * 10 * 1910



ஆண்டவன் அடியில் 13 * 01 * 2006

## அமரர் கந்தையா சின்னத்தம்பி

நிலையில்லாப் பூவுலகில்
நிலைத்துவிட்ட உங்கள் நினைவால்
நினைவிழக்க முடியாது - நாம்
நீந்துகின்றோம் கண்ணீரில்
பண்பிலே பாங்கானவராய்
அன்பிலே உயர்ந்தவராய்
ஊர்போற்ற வாழ்ந்த உத்தமரே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
வேண்டுகின்றோம்.

89, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (46821&33&15&45)

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்குச் செல்லும் அரச குழுவில் முஸ்லிம் பிரதிநிதியாக பேரியல் அஷ்ரப்



கொழும்பு,பெப்.12

ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் சமாதானப் பேச்சுக்குச் செல்லும் அரச பிரதிநிதிகள் குழுவில் முஸ்லிம் தரப்புப் பிரதிநிதியாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் இடம்பெறுவார் என்று தெரியவருகிறது.

அரச குழுவில் முஸ்லிம் பிரதிநிதியாக பேரியல் அஷ்ரப்பைச் சேர்த்துக்கொள்வது என்று ஜனாதிபதி திர்மானித்திருக்கிறார் என அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

அரச குழுவில் இடம்பெறும் முஸ்லிம் பிரதிநிதி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும் எனவும் அப்போதே அங்குள்ள மக்களின் பிரச்சினைகளைத் தெளிவாக எடுத்துரைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்தே பேரியல் அஷ்ரப்பை குழுவில் சேர்க்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறிய வந்தது.

அரசாங்கக் குழுவில் முஸ்லிம் பிரதிநிதியாக முன்னர் நியமிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா அந்தப் பொறுப்பிலிருந்து விலகியிருப்பது தெரிந்ததே. (ஐ-12)

## குமரபுரம் படுகொலை நினைவு நாள்

கிளிநொச்சி,பெப்.12

திருகோணமலை, குமரபுரம் படுகொலையின் 10ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று நினைவுகூரப்பட்டது.

1996ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் நாள் திருகோணமலையின் மூதூர் பிரதேசத்தின் குமரபுரம் கிராம மக்கள் சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்டனர். இதன் 10ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் குமரபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று அப்பகுதிக் கிராம மக்களால் நடத்தப்பட்டன. (ஐ-12)

## கொட்டடியில் மாடு திருடியோர் சிக்கினர்

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்ப்பாணம், கொட்டடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்றிரவு மாடுகளைத் திருடிக் கொண்டு செல்ல முற்பட்ட திருடர்கள் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர்.

நேற்று இரவு 11.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

'பனடோல்' வாக்குவதற்காக கடைக்குச் சென்ற சிறுவன் ஒருவன் சந்தேகத்திற்கிடமாக இருவர் நிற்பதை அவதானித்துவிட்டு கொடுத்த தகவலையடுத்தே, பொதுமக்கள் சம்பந்தப்பட்ட திருடர்கள் இருவரையும் மாடுகளுடன் பிடித்துள்ளனர். இவர்கள் நையப்புடைக்கப்பட்டபின்னர் கொட்டடிச் சந்திப் பகுதியில் கட்டிவைக்கப்பட்டனர்.

இப்பகுதியில் அண்மைக்காலமாக மாடுகள் திருடப்படும் சம்வங்கள் அதிகரித்துள்ளன.

பல திருட்டுக்களுடன் இந்த இருவருக்கும் தொடர்பு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (ஐ-12)

## சனசமூக நிலையத்தில் திருட்டு

வடமராட்சி,பெப்.12

அல்வாய், திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் ஓடு பிரிக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த 35 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டி திருடப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ஐ-173)

## அரச தரப்பு பேச்சுக் குழுவில் பொலீஸ்மா அதிபருக்கும் இடம்?

கொழும்பு,பெப்.12

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயான ஜெனீவா பேச்சுக்களில் கடற்படைத் தளபதி மற்றும் பொலீஸ்மா அதிபர் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர் என்று தெரிகிறது.

பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க, சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜோன் குணரத்ன, திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் அஜித் நிவாட் கப்ரால், சட்டத்தரணி கோவின் தயாசிறி ஆகியோர் அக்குழுவில் இடம்பெறவுள்ளனர் என்று அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அதிகாரிகள் குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கும் அதிகாரிகள் தொடர்பான விவரங்கள் அடுத்த சில நாள்களில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளன. (ஐ)

## ஜெனீவா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரும் காயமடைந்துள்ளார். இவர் அனுராதபுரம் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இப்படகில் வெடிப்பொருள்களே கடத்தப்பட்டு வந்துள்ளன என்பதை நிச்சயமாகக் கூறலாம்.

படகு வெடித்துச் சிதறியதும் அது தீப்பிடித்து எரிந்து கடலில் மூழ்கிப் போனது. படகில் இருந்த நால்வரும் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை.

இச்சம்பவம் மட்டுமல்ல கடந்த இரண்டு வாரத்துக்கு முன்னரும் ஒரு மீன்படிப் படகு குண்டுகளை வெடிக்கச் செய்யும் டிட்டெனேட்டர்களை கடத்திவந்ததைக் கடற்படையினர் அவதானித்துள்ளனர். அதனால்தான் இந்தப்படகையும் கடற்படையினர் சோதிக்க முற்பட்டனர். இது நிச்சயமாக சமாதானப் பேச்சுக்களைப் பாதிக்காது.

அரசு, கடற்படையினர், பாதுகாப்புப் படையினர் என அனைத்துத் தரப்பினருமே இந்தச் சமரசப் பேச்சுக்களை ஆதரிக்கின்றார்கள். தற்போது நடத்திருப்பது ஒரு சம்பவம் மாத்திரமே.

- இவ்வாறு இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ-12)

## 119 சுயேச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்றையதினம் நண்பகல் 12 மணிக்குப் பின்னர் கட்டுப்பணம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என பிரதித் தேர்தல் ஆணையாளர் டபிள்யூ. பி.சுகுணசிறி தெரிவித்துள்ளார்.

சுயேச்சை வேட்பாளர் ஒருவர் 250 ரூபாவைக் கட்டுப் பணமாகச் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

## பேசாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதானித்த கடற்படையின் டோறாப் படகு ஒன்று சோதனையிடுவதற்காக அதனை வழிமறிக்க முயன்றது என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

நிறுத்துமாறு உத்தரவிட்டவாறே கடற்படையினர் அந்தப் படகை நெருங்க முயன்ற வேளை படகில் இருந்த நால்வர் அதனை வெடிக்க வைத்தனர் என்றும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவப் பேச்சாளரும் இத்தகவலை உறுதிசெய்துள்ளார்.

படகு வெடித்துச் சிதறிய சம்பவத்தில் கடற்படைச் சிப்பாய் ஒருவருக்குப் பாதிப்பு ஏற்பட்டது என்றும் -

சுயநினைவாற்றலை இழந்த அந்தக் கடற்படைச் சிப்பாய் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படகில் உள்ளூரில் தயாரிக்கும் வெடிகுண்டுகள் மற்றும் வெடிப்பொருள்களைக் கடத்தி வந்திருக்கலாம் என்று படையினர் சந்தேகிக்கின்றனர்.

அதிசக்தி வாய்ந்த குதிரை வலுக் கொண்ட இயந்திரங்கள் படகில் பொருத்தப்பட்டிருந்தன என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

படகில் உயிரிழந்தவர்கள் யார் என்பது பற்றிய விவரம் தெரியவில்லை. இவர்கள் மீனவர்களாக இருக்கலாம் என்று சந்தேகிப்பதாகப் பேசாலை மீனவர்கள் கூறுகின்றனர்.

- இதேவேளை -

தமிழகத்தில் இருந்து மன்னாருக்கு மேற்கொள்ளப்படும்கடத்தலில் தொடர்புள்ள படகாக இது இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்பட்டது. (ஐ-12-190)

## அரச குழுவுக்கான செயலமர்வில் ஹாவார்ட் பேராசிரியர்கள்!

கொழும்பு,பெப்.12

ஜெனீவா பேச்சுவார்த்தையில் பங்கேற்கும் சிறிலங்கா அரசாங்கக் குழுவினருக்கான இரண்டாவது செயலமர்வு ஜனாதிபதி செயலகத்தில் வெள்ளிக்கிழமை தொடங்கியது.

பேச்சுவார்த்தைகளின் ஒழுங்கு விதிகள், எதிர்த்தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்துகையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் பற்றிய போதிய அறிவினை அரசாங்கக் குழுவிற்கு வழங்குவதே இந்த செயலமர்வின் நோக்கமாகும்.

ஹாவார்ட் பல்கலைக்கழகத்தின் விசேட ஆய்வாளர்களான டொம் சிகாப் மற்றும் எலிசபெத் டெக்கியுலோட் இந்தச் செயலமர்வில் கலந்துகொண்டு விளக்கமளித்தனர். (ஐ)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர், தற்போது தனியார் வைத்திய சாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இவரது உடல் நிலை பாதிப்படைந்துள்ள காரணத்தால் இவரிடம் வாக்கு மூலம் பெற முடியாதுள்ளதாக கொழும்புப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று விசாரணைக் குப் பொறுப்பான உதவிப்பொலீஸ் அத்தியட்சகர் என்.கே. இலங்க்கோன் தெரிவித்தார். (ஐ-12)

## புதுவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொளத்தூர் தா.செ.மணி, பொதுச் செயலாளர்களில் ஒருவரான கோவை கு.இராமகிட்டினன் மற்றும் பொதுச் செயலாளர்களில் ஒருவரான தமிழீழ விடுதலைப் போராட்டப் பரப்புரையாளர் விடுதலை க.இராசேந்திரன், அரச பயங்கரவாதத்துக்கு எதிராக நக்சல்பாரி இயக்கத்தில் இணைந்து செயற்பட்டமைக்காக தூக்குத் தண்டனையை எதிர்நோக்கி விடுதலையான முன்னாள் திலீபன் மன்ற நிறுவுநரும் தமிழ் தமிழர் இயக்கத்தின் பொதுச் செயலாளருமான தோழர் தியாகு, மனித உரிமைச் செயற்பாட்டாளர் சுகுமாரன், தமிழர் தேசிய இயக்கத்தின் நிர்வாகி அழகிரி மற்றும் மீனவர், ஒடுக்கப்பட்டோர் அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இலங்கை போர்நிறுத்த ஒப்பந்த சரத்துக்களை மீறியது யார்? என்பதை விவரிக்கும் விடுதலை க.ராசேந்திரனின் விளக்க நூலும் இந்த மாநாட்டில் வெளியிடப்படவுள்ளது. (ஐ)

Just
Change your life
with AIM(S)
Page No. 14

## மரண அறிவித்தல்கள்

### நடராசா குமரேசமூர்த்தி (சூரியன்)

துன்னாலை மத்தியைப் பிற்ப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா குமரேசமூர்த்தி அவர்கள் நேற்று (11.02.2006) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் பொன்னையா - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் வனிதா (ஆசிரியை, கோயிற்குளம் அ.த.க. பாடசாலை,யா/கட்டைவேலி யார்க்கரு விநாய வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் அச்சயனின் அன்புத் தந்தையும் அமரர் விநாயகமூர்த்தி, சுந்தரமூர்த்தி (பொறியியலாளர்), அமரர் இலக்குமிதேவி, பூமாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வேலண்டை மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாமரைக் குளத்தடி,**
**துன்னாலை மத்தி,**
**கரவெட்டி.** (அ-47837)

தகவல்:
**ந.சுந்தரமூர்த்தி**
***(பொறியியலாளர் - சகோதரன்)***

### கபிரியேல் பேரின்பநாயகம்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இந்தியாவில் வசித்தவருமான பேரின்பநாயகம் அவர்கள் 29.01.2006 அன்று காலமானார்

அன்னார் கபிரியேல் - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும் திருச்செல்வம் (அப்புத்துரை) - மொனிக்கம்மா தம்பதியரின் மருமகனும் பபியின் அன்புக் கணவரும் டியாம்சன், சாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்ரர், சந்திரா (ஜேர்மனி), உதயன் (பிரான்ஸ்), மஞ்சு (ஆசிரியை, இளவாலை) ஆகியோரின் சகோதரரும் இமெல்டா (ஆசிரியர், வவுனியா), வற்றீசியா (ஆசிரியை, கொம்ரெக், வவுனியா), சுகந்தி (ஆசிரியை -சல்வேசன் அ.மி.,கைதடி), அலன்கியூமார் (Hallo Trust), அலன்கியூபேட் (கணனிக்கல்லூரி - இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (12.02.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மான் பாடசாலை வீதியில் உள்ள மாமனார் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உடுவில்.** (46652)

தகவல்:
**மாமனார் குடும்பத்தினர்.**

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# கருணாவின் உயிரை பலி கொடுக்குமா அரசு?



**யுத்த நிறுத்த உடன்பாட்டை உரிய முறையில் செயற்படுத்த வேண்டுமாயின் துணைப்படைகளின் செயற்பாடுகளை, குறிப்பாக கருணா குழுவின் செயற்பாடுகளை முடக்கி அவர்களது ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சமாதானப் பேச்சுகளின் போது விடுதலைப் புலிகள் முன்வைப்பர். அது தொடர்பாக அரசு எடுக்கும் தீர்மானத்திலேயே சமாதானப் பேச்சுகளின் எதிர்காலம் தங்கியுள்ளது. ஒருவேளை விடுதலைப் புலிகளின் கோரிக்கையை அரசு ஏற்றால் என்ன நடக்கும் என்பது குறித்து ஆராய்கிறார் கட்டுரையாளர் உபுல் ஜோசப் பெர்னாண்டோ. அக்கட்டுரையின் தமிழகத்தை இங்கு தருகிறோம்.**

பிரபாகரன் கருணாவை இழக்க நேர்ந்த நாள் முதல் இலங்கை அரசின் கருணையுடனேயே இயங்கி வந்திருந்தார் கருணா. தற்போது இலங்கை அரசின் கருணையையும் கருணா இழக்க வேண்டிய சூழ்நிலை தென்படுகிறது. அண்மைக் காலத்தில் கருணா இலங்கை அரசுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளமை போன்றே, இலங்கை அரசும் கருணாவுக்கு எதிராகக் குற்றங் களைச் சுமத்தியுள்ளது.

இலங்கை அரசு தம்மைப் புறந்தள்ளிவிட்டு, விடுதலைப் புலிகளுடன்சமாதானஒப்பந்தமொன்றினைஏற்படுத் திக் கொண்டுள்ளதாகக் கருணா குற்றஞ்சாட்டியுள் ளார்.



விடுதலைப் புலிகளின் தலைவரொருவர் உட் பட விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் கள் சிலரைப் படுகொலை செய்ததன்மூலம் அர சுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதான இணக்கத்தை உடைத்துவிடக் கருணா முயற்சிக்கிறார் என அவர் மீது அரசு குற்றம் சுமத் தியுள்ளது.

### கருணாவின் உயிர்

இவ்விரு குற்றச்சாட்டுக்களிலிருந்தும் ஒரு விடயம் தெளிவாகிறது. ஜெனிவாவில் இடம்பெற வுள்ள சமாதானப் பேச்சுகள் மூலம் விடுதலைப் புலிகளும் அரச தரப்பினரும் ஒன்றிணைந்து கருணா வின் உயிருக்கு உலை வைக்கவுள்ளனர் என்பதே அதுவாகும்.

கருணாவின் உயிருக்கு விலைபேசும் நோக்கி லேயே விடுதலைப் புலிகள் ஜெனிவாவில் அரசு டன் பேச முன்வந்துள்ளனர். கருணா இதனை நன்கறிவார். இதனாலேயே தாம் முந்திக்கொண்டு அரசுமீது முதற் தடவையாக அவர் குற்றம் சாட்ட நேர்ந்தது.

யுத்தமொன்றுக்கு விடுதலைப் புலிகள் செல்வ தைத் தடுக்கவேண்டுமானால், தாம் கருணாவின் உயிரைப் பலிகொடுக்க வேண்டியிருக்கும் என்பதை அரசு அறியாமலில்லை.

விடுதலைப் புலி உறுப்பினர்களைப் படுகொலை செய்வதைக் கண்டித்து அரசும், முதல் முதலாகக் கருணாமீது குற்றம் சுமத்தியமை இந்த நோக்கத்தை நிறைவேற்ற வழி ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கி லாக இருக்கக்கூடும்.

இந்தச் சிக்கலில் இருந்து தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தற்போது கருணா முயற்சிக்கிறார். அரசுக்கும் விடு தலைப் புலிகளுக்கும் இடையே அண்மை யில் உருவான இணக்கப்பாட்டுக்கு ஆத ரவு தெரிவித்து விடுதலைப் புலிகளுடன் மோதிக் கொள்வதில்லை என ஒரு தலைப்பட்சமாக அவர் கருத்து வெளியிட் டுள்ளமை தன்னைக் காப்பாற்றிக்கொள் ளும் நோக்கிலான கருணாவின் செயலாக இருக்கக்கூடும். தன்னை இந்தச் சிக்கலில் இருந்து காப்பாற்றிக்கொள்ள வேறெந்த மார்க்கமும் கிடையாதென்பதையும் அவர் உணர்ந்திருக்கக் கூடும்.

அவ்வாறாயின் கருணாவுக்குத் தற்போது யார் கருணை காட்டப் போகிறார்கள்?

''ரணில் விக்கிரமசிங்கவின் கபடத்தனமான பயங்கர நரி வேலை காரணமாகவே பிரபாகரன் கருணாவை இழக்க நேரிட்டது'' என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங் கம் கடந்த மாவீரர் தினத்தன்று தெரிவித்திருந்தார்.

''ரணில் சமாதானப் பேச்சுகளுக்காக எம்மை பாங்கொக்குக்கு அழைத்துச் சென்று கனவு உலகத் தைக் காட்டி எம்மை அழிக்க எண்ணினார். ரணில் விரித்த இந்த வலையில் கருணா மாட்டிக்கொண் டார். நாம் சமாதானப் பேச்சுகளில் ஈடுபட்ட வேளையில் கருணா 'சொப்பிங்' சென்றார். பாங் கொங் நகர விலைமாதர்களுடன் சுற்றினார்.'' இது கருணாமீது அன்டன் பாலசிங்கம் சுமத்திய குற்றச் சாட்டு.

கடந்த வருடம் நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் தினத்தன்று அன்டன் பாலசிங்கம் இவ்வாறு குற்றம் சாட்டியிருந்தார்.

### ரணிலின் குள்ளநரித்தனம்

2004 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் சமயத்தி லேயே பிரபாகரனுக்கும் கருணாவுக்கும் இடையே யுத்தம் மூண்டது. ரணிலின் தலைமையிலான ஐ.தே. முன்னணி அரசுடன் விடுதலைப் புலிகள் பேச்சுக் களில் ஈடுபட்டுவந்த வேளையிலேயே - 2003 ஆம் ஆண்டிலேயே - பிரபாகரனுக்கும் கருணாவுக்குமி டையே பிரச்சினைகள் நிலவிவந்ததை ரணிலின் அரசு தெரிந்துவைத்திருந்தது.

**முதலில் போர் நிறுத்த உடன் பாட்டை உரிய வகையில் கடைப்பிடிப்பது தொடர் பாகவே பேச்சுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தப் பேச்சுகள் ஆரம்பமாகும் சமயம் போர் நிறுத்த உடன்பாட்டை உரிய வகையில் நடைமுறைப்படுத்துவதாயின் முதலில் கருணா தரப் பினரிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டுமென விடுதலைப் புலிகள் தரப்பு கோரப்போகிறது.**

**மற்றொரு வகையில் கூறுவதானால் கருணாவின் உயிர் தமக்கு வேண்டுமென்ற கோரிக்கை விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்படவுள்ளது. கருணாவின் உயிரைக் கோரியே கதிர்காமரின் உயிர் பறிக்கப்பட்டது.**

அந்தப் பிரச்சினை முற்றி மேடைக்கு வரும் வரை ரணிலின் அரசு காத்திருந்தது.

விடுதலைப் புலிகள் தயாரித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார யோசனை, பேச்சுக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த வேளையிலேயே பிரபா - கருணா பிரச்சினை முற்றி மேடை ஏறியது.

''வடக்கும் கிழக்கும் சேர்ந்ததான ஒரே இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது. கிழக்குக்கெனத் தனி யானதொரு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை உருவாக்கப்படவேண்டும். இதற்குத் தலை வர் பிரபாகரன் இணங்காவிட்டால் நான் எனது தற்போதைய பதவியிலிருந்து விலகி கிழக்குப் பகு தியை எனது தலைமையின்கீழ் கொண்டு வருவேன்.''

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை பேச்சுக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது இவ் வாறு பிரச்சினையைக் கிளப்புவதற்காக கருணா காத்திருந்தார். அவ்விதம் இடம்பெறுமானால் பேச்சு மேசையிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பு இரண்டாகப் பிளவுறுவதை முழு உலகமுமே காணக்கூடியதாயிருக்கும் என எதிர் பார்க்கப்பட்டது.

''எம்மால் கருணாவின் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இயலாது. கருணா இந்தப் பேச்சில் கலந்துகொள்வதினின்றும் வெளியேற்றப்பட வேண்டும். அவர் இனியும் எமது அமைப்பில் அங்கத்துவம் வகிக்கமுடியாது.''

எதிர்பார்த்த விதத்தில் கருணா கிழக்கு மாகா ணத்துக்கெனத் தனியான இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையொன்றைக் கோரியிருந்தால், அன் டன் பாலசிங்கம் இவ்வாறானதொரு முடிவினை முன்வைத்தருப்பார் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

''சரி; நான் இனிமேலும் உங்களது அமைப்பின் உறுப்பினராக இருக்கப்போவதில்லை. நீங்கள் வடபகுதியை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்து கிறீர்கள். கிழக்குப் பகுதியை நானே பிரதிநிதித்து வப்படுத்துகிறேன். கிழக்குப் பகுதியின் தலைவன் என்ற வகையிலேயே நான் இந்தப் பேச்சில் கலந்து கொள்கிறேன்''

அன்டன் பாலசிங்கத்தின் தர்க்கத்துக்குப் பதில ளிக்கும் வகையில், கருணா இவ்விதம் தெரிவிப் பார் என எதிர்பார்க்கப்பட்டது.

''உங்களது விடுதலைப் புலிகள் அமைப்பு இரண் டாகப் பிளவுபட்டுள்ளது என்பது தெளிவாகிறது. நீங்கள் வடக்கையும் கிழக்கையும் பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் என்ற அடிப்படையிலேயே இந்தப் பேச்சு ஒழுங்கு செய்யப்பட்டது. நாம் கிழக் குப் பகுதி முஸ்லிம் மக்களைப் பிரதிநிதிப்படுத்து வதற்காகவே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை இந்தப் பேச்சில் இணைத்துக் கொண்டுள் ளோம். ஆனால், இப்போது நீங்கள் கிழக்குப் பகுதித் தமிழ் மக்களது பிரதிநிதியாக நியமித்த கருணா உங்களது அமைப்பிலிருந்து விலகி கிழக்கு மாகாண மக்களுக்கான தலைமைத்துவத்தைத் தனது கைகளில் எடுத்துக்கொள்கிறார். நாம் அதனை ஏற்றுக்கொள்ளா விடில் கருணா போர்நிறுத்த உடன்பாட்டை மதிக் காது கிழக்கு மாகாணத் தலைமைத்துவத்துக்காக யுத்தமொன்றை ஆரம்பிக்க முயல்வார். அவ்விதம் இடம்பெறாதென உங்களால் உறுதிமொழி வழங்க இயலுமா? ஆகவே, கருணாவையும் இப் பேச்சில் இணைத்துக் கொள்ளவேண்டியுள்ளது''

இத்தகையதொரு கருத்தை அந்தப்பேச்சு மேசை யில் ரணிலின் அரசு முன்வைப்பதற்கும் எதிர்பார்த் திருந்தது.

இத்தகைய இழுபறிகளின் பிரதிபலனாகக் கடைசியில் விடுதலைப் புலிகள் அமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையை அவர்களே கைவிட நேர்ந்திருக்கும்.

இதன் பலனாக பேச்சு மேசையில் கலந்து கொண்ட புதிய தரப்பாகக் கருணாவையும் கருதி கருணாவின் கருத்துகளையும் உள்ளடக்கி, இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாகப் புதிய தொரு யோசனையைத் தயாரிக்க வேண்டிய நிலைமை ரணிலின் அரசுக்கு ஏற்பட்டிருக்கும்.

கருணா பேச்சு மேசையில் இருக்கும்வரை அவ ருக்கு எந்த ஆபத்தையும் விளைவிக்க இயலாதா கையால், கிழக்குப் பகுதியில் கருணாவைப் பலப் படுத்தி அதன்மூலம் கிழக்குப் பகுதியில் புதிய அமைப்பொன்றை உருவாக்கி அதற்குக் கருணாவை தலைமை தாங்க வைக்கச் சந்தர்ப்பம் அப்போது வாய்த்திருந்தது.

இந்த வகையில்தான், செயற்பாடுகள் இடம் பெற வேண்டுமென ரணில் தரப்பில் எதிர்பார்க் கப்பட்டது. ஆனால், எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் சம்பவங்கள் அமையவில்லை.

### பிசுபிசுத்துப்போன எதிர்பார்ப்பு

எதிர்பார்க்கப்பட்டபடி சம்பவங்கள் அமையாத தற்குக் காரணமென்ன?

இந்தக் காலகட்டத்தில் சுதந்திரக்கட்சி ஜே.வி. பியுடன் கூட்டணி ஏற்படுத்திக்கொண்டு ரணிலின் தலைமையிலான அரசைக் கவிழ்த்து, புதிய பொதுத் தேர்தல் ஒன்றுக்காக வழியமைத்துக்கொண்டதன் காரணமாக எதிர்பார்ப்புக்கள் எதுவும் திட்டமிட்ட விதத்தில் நடந்தேறவில்லை. ஆனால், விடுதலைப் புலிகள் அமைப்பு தனது உள்வீட்டுப் பிரச்சினையை வெளியுலகம் தெரிந்துகொள்ளச் சந்தர்ப்பம் அளிக் காத விதத்தில், சமாதானப் பேச்சு மேசைக்குச் செல்ல விடாது, தமது உள்வீட்டுப் பிரச்சினையைத் தமது மட்டத்திலேயே கையாள்வதற்கு வாய்ப்புக் கிட்டியது.

ரணிலின் அரசை வீழ்த்தி, சுதந்திரக்கட்சி ஜே.வி.பி. கூட்டணி 2004 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் புதிய அரசின் முன் கோரிக் கையொன்றினை முன்வைத்தனர். அரச படைகளை முகாங்களுக்குள் முடக்கி, சோதனைச்

(III ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாவின் ...

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாவடிகளை மட்டுப்படுத்தி, கருணாமீது தாம் நடவடிக்கை எடுப்பதற்கு இடமளிக்குமாறு விடுக்கப்பட்டதே அந்தக் கோரிக்கையாகும்.

பொ.ஐ.முன்னணி அரசு விடுதலைப் புலிகளின் அந்தக் கோரிக்கையை ஏற்றுச் சாதகமாக நடந்து கொண்டது. அதன் பயனாக அரச படைகள் தமது முகாம்களுக்குள் முடங்கி ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த நிலையில் பிரபாகரன் கருணாவை ஓட ஓட விரட்டத் தலைப்பட்டார்.

கடைசியில் கருணா உயிர்தப்பிப் பிழைப்பதற்கு ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சஹீர் மௌலானா உதவ முன்வந்தார். பிரபாகரன் தரப்பு எவ்வாறாயினும் கருணாவுக்கு உயிராபத்தை விளைவிக்க முயன்றபோதிலும் கருணாவை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றும் நோக்கில் அவரைக் கொழும்புக்கு அழைத்துச் சென்றவர் இந்த மௌலானாவேயாவார்.

அந்தவேளையில், சுதந்திரக்கட்சி மற்றும் ஜே.வி.பி கூட்டணி அரசு பிரபாகரனின் கருத்துக்கு எந்த அளவு மரியாதை கொடுத்தது என்று கூற வேண்டுமானால், கருணாவைப் படுகொலை செய்யும் பிரபாகரனின் முயற்சிக்கு இடமளித்து கண், காதுகளைப் பொத்திக்கொண்டு மௌனம் காத்தது எனக் கூறலாம்.

இந்த நிலையில் கருணா கொழும்புக்கு வந்து சேர்ந்து விட்டபோதிலும் எந்த வேளையிலும் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலையே காணப்பட்டது.

### கதிர்காமரின் அரசியல்

அந்தவேளையில், கருணாவுக்கு ஆபத்பாந்தவராக உதவ முன்வந்தவர் வேறு யாருமல்லர். விஷத்தை விஷத்தாலேயே முறியடிக்கவேண்டுமென்ற விதத்தில் தமிழர் ஒருவராலேயே தமிழ் விடுதலைப் புலிகளது பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டவேண்டுமென்று நம்பிய - அத்தகைய நோக்கில் செயற்பட்டு வந்த தமிழரான ஐ.ம.சு.கூட்டணி அரசின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரே அவராவார்.

சமாதான நடவடிக்கைகளை வெற்றியடையச் செய்வதற்காக கருணைவைப் பலிகொடுக்காது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி - கருணாவைப் பயன்படுத்தி - விடுதலைப் புலிகளை நலிவடையச் செய்ய முடியுமென அந்த வேளையில் கதிர்காமர் கருதியிருக்கக் கூடும்.

அந்தவேளையிலிருந்து கருணா விடுதலைப் புலிகள் உறுப்பினர்களைப் படுகொலை செய்யவும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களை இலக்கு வைக்கவும் ஆரம்பித்தார்.

கருணாவின் இந்தப் போக்கைப் பிரபாகரனால் சகித்துக் கொள்ள இயலவில்லை. கருணா தரப்பிடமிருந்து ஆயுதங்களைக் களையும்வரை சமாதானப் பேச்சுகளில் விடுதலைப் புலிகள் பங்குபற்றப் போவதில்லை எனத் தெரிவித்து பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகாவை அச்சுறுத்தினார்.

கருணாவுடன் தாமோ அல்லது அரசோ எந்த விதத் தொடர்பையும் கொண்டிருக்கவில்லை எனக் காட்டிக் கொள்ள சந்திரிகா பெரும் பிரயத்தனம் மேற்கொண்டார். அந்தவேளையில் இராணுவத் தளபதியாக விருந்த லயனல் பலகல்லவுக்கும் கருணாவுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகப் பிரபாகரன் குற்றம் சாட்டினார். அந்தக் குற்றச் சாட்டினின்றும் ஜனாதிபதி சந்திரிகாவும் அரசும் தப்பித்துக் கொள்வதற்காக கடைசியில் இராணுவத் தளபதி பலகல்ல தனது பதவியைத் துறக்க வேண்டி நேர்ந்தது.


கருணாவுடன் தமக்கோ அரசுக்கோ எந்தவிதத் தொடர்பும் கிடையாது எனக் காட்டுவதற்கு சந்திரிகா மேற்கொண்ட முயற்சிகளால் கருணாவுக்கு அபயமளித்துக் காத்து வந்த கதிர்காமர் சிரமம் அடைய நேர்ந்தது. அத்தகைய சிரமத்தைப் போக்கிக் கொள்ளும் நோக்கில் கதிர்காமர் ஜே.வி.பியை பிரச்சினையில் இணைத்துக் கொள்ளத் திட்டமிட்டார். அந்தவகையில் ஜே.வி.பி., கருணா குழு, ஈ.பி.டி.பி அமைப்பு மற்றும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரி ஆகிய தரப்புகளை ஒன்றிணைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் புதிய கூட்டு முன்னணியொன்றை உருவாக்க கதிர்காமர் முயற்சி மேற்கொண்டார்.

கருணாவுக்குப் பாதுகாப்பளித்தது இந்தப் புதிய கூட்டு முன்னணியே. சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்காக கருணா தரப்பினரின் ஆயுதங்களைகளைய வேண்டுமெனச் சந்திரிகாவுக்கு அழுத்தம் கொடுத்த சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபாலாவைப் புலி எனக் குறிசுட்டு அவரை ஓரங்கட்ட கதிர்காமருக்கு உதவியதும் இந்தப் புதிய கூட்டு முன்னணியே.

சமாதான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக கருணாவைப் பலியிடக் கூடாது என்ற நிலைப்பாட்டைக்கொண்டிருந்ததால், சந்திரிகாவையும் அவரது சமாதானத் தூதர்களையும் ஓரம்கட்டி கதிர்காமருக்குப் பாதுகாப்பளித்ததும் இந்தப் புதிய கூட்டு முன்னணியே. அதேபோன்று விடுதலைப் புலிகள் விரும்பும் விதத்திலன்றி, அரசு விரும்பும் விதத்திலேயே சமாதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற கதிர்காமரின் நிலைப்பாட்டுக்கு சந்திரிகாவையும் கொண்டுவரக் கதிர்காமருக்கு உதவியதும் இந்தப் புதிய கூட்டு முன்னணியே. ஐரோப்பிய நாடொன்றில் சமாதானப் பேச்சுக்களை நடத்த இயலாதெனவும் பேச்சு தொடர்பாகப் புலிகள் முன்வைத்த நிபந்தனைகளுக்கு இணங்காது, இறுதித்தீர்வொன்று குறித்தே பேச்சுகள் இடம்பெற வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்குச் சந்திரிகாவைக்கொண்டு வருவதற்குக் கதிர்காமருக்கு உதவியதும் இந்தப் புதிய கூட்டு முன்னணியே.

### கருணா விடயத்தில் ஜே.வி.பியின் பங்கு

இத்தகைய கூட்டு முன்னணியொன்றை உருவாக்கிய கதிர்கமாரின் இந்த நிலைப்பாட்டை சந்திரிகா மூலமாகவும் நாட்டின் பொதுமக்கள் மூலமாகவும் பலப்படுத்தி உதவ ஜே.வி.பி. பெரும் பங்காற்றியது. கதிர்காமரின் நிலைப்பாட்டிக்கு மாறாக எவ்விதமாவது விடுதலைப்புலிகளுடன் பேச்சுகளை ஆரம்பித்தாக வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்குச் சந்திரிகாவை இட்டுச் சென்ற, அந்த வேளையில் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபாலாவுக்கு புலி முத்திரை குத்தியதன்



மூலம் கதிர்காமருக்குப் பாதுகாப்பளித்ததும் ஜே.வி.பியினரே.

இவ்விதம் ஜே.வி.பி, கருணா, ஈ.பி.டி.பி மற்றும் ஆனந்தசங்கரி ஆகிய தரப்புகளின் ஆதரவுடன் செயற்பட்ட கதிர்காமர் கடைசியில் படுகொலையுற நேர்ந்தது.

சமாதானப் பேச்சுகளை முன்னெடுக்க கருணாவைப் பலிகொடுக்க விரும்பாத் கதிர்காமர் கடைசியின் தானே படுகொலையுற நேர்ந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி., கருணா தரப்பு மற்றும் ஈ.பி.டி.பி தரப்பு ஆகியன மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தமை, சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகக் கதிர்காமர் கடைப்பிடித்த அணுகுமுறையையே மஹிந்த ராஜபக்ஷவும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே ஆகும்.

கடைசியில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவானார். இன்று ஜயந்த தனபால ஜனாதிபதியால் சமாதான ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். அன்று முதல் ஜயந்த தனபால கொண்டிருந்த "எந்த விதத்திலாவது சமாதானப் பேச்சுகள் மேற்கொள்ளப்பட்டாக வேண்டும்" என்ற நிலைப்பாட்டுக்கு ஏற்ப மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு தயாராகியுள்ளது.

இதன்படி முதலில் போர் நிறுத்த உடன்பாட்டை உரிய வகையில் கடைப்பிடிப்பது தொடர்பாகவே பேச்சுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தப் பேச்சுகள் ஆரம்பமாகும் சமயம் போர் நிறுத்த உடன்பாட்டை உரிய வகையில் நடைமுறைப்படுத்துவதாயின் முதலில் கருணா தரப்பினரிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டுமென விடுதலைப் புலிகள் தரப்பு கோரப்போகிறது.

மற்றொரு வகையில் கூறுவதானால் கருணாவின் உயிர் தமக்கு வேண்டுமென்ற கோரிக்கை விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டவுள்ளது. கருணாவின் உயிரைக் கோரியே கதிர்காமரின் உயிர் பறிக்கப்பட்டது.

அரசினால் கருணாவின் உயிர் பலி கொடுக்கப்படுமா? கதிர்காமர் போல் திடமானவர்களைக் கொண்டிருந்த இந்த அரசு தற்போது இதயமற்றது போல் செயற்படுமா எனத் தற்போது எதுவும் கூறமுடியாது. ✱

**தமிழில்: வீயெஸ்ரி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரும் பெண்களும்



இலங்கை இனப்பிரச்சினையானது பெண்களுக்கு இழைத்துள்ள கொடுமைகளும், இழப்புகளும் ஏராளமாகும். எனினும் இன்று வரை இனப்பிரச்சனை விடயத்திலும் ஏனைய விடயங்களைப் போலவே பெண்கள் குறித்த அவதானங்களோ, முன்னுரிமைகளோ வழங்கப் படவில்லை என்பதே குற்றச்சாட்டாக இருக்கிறது.

சுமார் 60 வருடங்களுக்கு மேலான இனப்பிரச்சனை 80களில் போராக வெடித்த பின்னர் பெண்களின் மீதான அடக்கு முறைகளும் அவர்கள் மீது வலிந்து திணிக்கப்பட்ட இழப்புகளும் தீவிரம் பெற்றன. வடகிழக்கில் யுத்தம் உக்கிரம் பெறுவதற்கு முன்பிருந்தே ஆரம்பித்த படுகொலைகள் இன்றுவரையாகும் போது ஆயிரக்கணக்கில் கணவனை இழந்த பெண்களை உருவாக்கி விட்டுள்ளது.இப்பெண்களில் பெரும்பாலானவர்கள் 30 வயதிற்கும் குறைந்த வயதினரே என்பதை தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

– ஜீ. யோகப்பிரியா

யுத்தத்தின் போதும், யுத்த சூழலிலும் நேரடியாக பெண்கள் உயிரிழக்கின்ற இழப்பிற்கு மேலாக இந்த யுத்த சூழலில் கொல்லப்படுகின்ற ஒவ்வொரு ஆணின் பின்னாலும் தாயாகவோ, தாரமாகவோ, சகோதரியாகவோ ஆயிரக் கணக்கான பெண்களின் கண்ணீரே நிறைந்து நிற்கிறது. வடகிழக்கை போலவே தெற்கிலும் படைவீரர்களின் மனைவியரும், உறவினரும் இதேவனகயிலான துயர அனுபவத்தையே கொண்டுள்ளனர். யுத்தத்தில் கொல்லப்படுகின்றமைக்கு சமனான துயரத்தை கொண்டதாக காணாமல் போனவர்கள் தொடர்பிலான விடயம் காணப்படுகிறது. வடகிழக்கில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோரில் பெண்களும் கணிசமான அளவில் உள்ளடங்குவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதேபோல காணாமல் போன ஆயிரக்கணக்கான ஆண்களின் வரவுக்காக காத்திருக்கின்ற ஆயிரக்கணக்கான பெண்களில் 20 வருடங்களுக்கு மேலாக காத்திருக்கின்ற பெண்களும் அடங்குவது இந்த இனப்பிரச்சனையின் ஒரு துயர விளைவாகும். முப்படைகளில் இருந்தும் காணாமல் போனவர்களில் இழப்பினை சுமந்து கொண்டிருக்கின்ற தெற்கு பெண்களுக்கும் இன்றுவரை இது தொடர்பில் பதில் வழங்கப்படவில்லை.

போரின் இன்னுமொரு மிக மோசமான அடக்குமுறையாக பாலியல் ரீதியான வன்முறை பெண்கள் மீது பிரயோகிக்கப்படுவது இன்றுவரை தொடர்கிறது. இது தொடர்பில் இராணுவத்தினருக்கும், இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழுக்களுக்கும் எதிராக ஏராளமான குற்றச்சாட்டுகளை ஊடகங்களும், மனித உரிமை அமைப்புகளும் வெளிப்படுத்தி உள்ளன.

மேலும் பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகால சட்டம் போன்றவற்றை பாவித்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான பெண்கள் சிறைகளில் விடுதலையுமின்றி, விசாரணையுமின்றி வாழ நேரிட்டது. இவ்வாறு சிறையிருந்த பல பெண்களுக்கு தமது குழந்தைகளை சிறையிலேயே பிரசவித்து, சிறையிலேயே வளர்க்க வேண்டியேற்பட்டதாக செய்திகள் வெளிப்படுத்தியிருந்தன. எனவே தான் பெண்கள் போர் குறித்த தீர்மானங்கள் தம்மால் மேற்கொள்ளப்படாத நிலையில் போரின் இழப்புகளை சுமக்கும் நிர்ப்பந்தத்திற்கு எதிராக அன்று முதல் தமது எதிர்ப்பினை தெரிவித்து வருகிறார்கள். வடகிழக்கைச் சேர்ந்த பெண்களின் அமைப்புகளைப் போலவே தெற்கைச் சேர்ந்த பெண்கள் அமைப்புகளும் தமது இழப்புகளுக்கு நியாயத்தை வழங்கக் கோரியும் அதேபோல போரையும், வன்முறைகளையும் நிறுத்தக் கோரியும் தனித்தும், இணைந்தும் போராடி உள்ளன.

அந்தவகையில் தற்போதும் மிக நெருக்கடியான வன்முறையான சூழலுக்கு எதிராகவும், சமாதானத்தை நிலைநிறுத்தும்படி வேண்டியும் பல பெண்கள் அமைப்புகள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றன. இவர்களின் எதிர்பார்ப்பு எல்லாம் இன்னுமொரு முறை கடந்த காலங்களை போல யுத்த அழிவு ஏற்படக்கூடாது என்பதே. எனவே இவர்களின் மனப்பூர்வமான இந்த வேண்டுகோளை தட்டிக்கழிப்பது மனிதாபிமானம் கொண்டவர்களால் இயலாத விடயமாகும்.

## தங்கத்தாம்பாளத்தில் சமாதானம்

அவர்கள்
போராட வேண்டாம் என்கிறார்கள்
வீதியில் இறங்க வேண்டாமாம்
கோஷம் போட வேண்டாமாம்
மூச்சும் காட்ட வேண்டாமாம் - எதிர்
பேச்சும் வேண்டாம் என்கிறார்கள்

என் மக்களை கொலை செய்யும் போதும்
இதைத் தான் சொன்னார்கள்
எதிர்ப்பவர்களின் உயிர்
உதிர்க்கப்படும் என்றார்கள்

என் கையில் இருக்கும்
இந்த துப்பாக்கியை
அவர்களுக்கு பிடிக்கவில்லையாம்
இது மோசமான பிசாசாம்
இது மனிதர்களை கொலை செய்யுமாம்
இதை அவர்களிடம்
ஒப்படைத்து விடட்டுமாம்

அவர்கள் கையில் மட்டுமே
துப்பாக்கி இருக்க முடியுமாம்
அவர்கள் எனது எல்லா எதிர்ப்பையும்
கைவிட சொல்லுகிறார்கள்

அப்படி செய்தால்
அழகான தங்கத்தாம்பாளத்தில் வைத்து
சமாதானத்தை தருவார்களாம்

அவர்கள் மேலும் சொன்னார்கள்
இப்படித்தான் பலஸ்தீனத்திலும்,
வியட்னாமிலும், சோமாலியாவிலும்,
ஆப்கானிலும், ஈராக்கிலும், காஷ்மீரிலும்
தங்கத்தாம்பாளத்தில் வைத்துத்தான்
சமாதானத்தை கொடுத்தார்களாம்.

–என். ஜீவேந்திரன்

## இவ்வார விழிப்பில்...

- மனிதத்துவத்தின் குரல்
- பெண்களும் போரும்
- சமாதான தூதரின் தெற்கு விஜயம்
- தெற்கின் கண்ணீர்
- ஆலங்கேணி கிண்ணியா மக்களும் எதிர்பார்ப்பும்

## வாசகர் கவனத்திற்கு...

**கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.**

அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல் முகவரி :- villippu@yatv.net

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை - 17

1. தனியாகவும், வேறொருவருடன் கூட்டாகவும், ஆதனத்தைச் சொந்தமாகவும் வைத்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.
2. எவரினதும் ஆதனம் ஒரு தலைப்பட்ட மனப்போக்கான வகையில் பறிக்கப்படுதல் ஆகாது.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

## சமாதான நிகழ்வு

# மாவனல்லையில் இரத்ததான நிகழ்வு

மாவனல்லையில் 2001ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி உருவான பெரும் சிங்கள, முஸ்லிம் கலவரத்திற்கு பின்னால் கடை ஒன்றில் ஏற்பட்ட ஒரு தகராறே காரணமாக அமைந்தது. இப்பின்னணியில் உருவான அக்கலவரம் மாவனல்லையின் வியாபார நிலையங்கள், மத ஸ்தாபனங்கள், வீடுகள், வாகனங்கள் என்று அனைத்தையும் எரித்து சாம்பலாக்கியது. எதிர்பாராத விதமாக அரங்கேறிய இந்த இனக்கலவரம், மாவனல்லை மக்களிடத்தில் புரிந்துணர்வின் தேவையை உணர்த்தியது.



அந்த வகையில் இதனை உணர்ந்த மாவனல்லை மக்கள் புரிந்துணர்வை கட்டியெழுப்பும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இம்முயற்சிகள் மாவனல்லையின் அனைத்து இனங்களையும் மீண்டும் ஒன்றிணைப்பதற்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளது.

அவ்வாறான ஒரு முயற்சியாக மாவனல்லை பரஸ்பர புரிந்துணர்விற்கான ஒன்றியம் மற்றும் பௌத்த மாணவர் எழுச்சியமைப்பு என்பன ஒன்றிணைந்து இரத்ததான நிகழ்வொன்றை மாவனல்லை ரோயல் மண்டபத்தில் ஒழுங்கு செய்திருந்தன. ஜனவரி 22ஆம் திகதி இடம்பெற்ற இந்த இரத்ததான நிகழ்வில் 300க்கும் மேற்பட்ட சிங்கள, முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டு தமது இரத்தத்தினை தானம் செய்தமையானது சமாதானமாக எதிர்காலத்தில் இணைந்து செயற்பட வேண்டும் என்று அம்மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதை வெளிப் படுத்தியுள்ளது. மனிதர்கள் இனம், மதம், மொழிகளால் வேறுபட்டாலும் அவர்கள் அனைவரும் சகோதரர்களே. அந்தவகையில் இனங்களுக்கிடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கும் வீணான சந்தேகங்களை இல்லாமல் செய்வதற்கும் இது போன்று ஒன்றிணைந்து பழகும் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுமானால் அது புதிய ஐக்கியத்திற்கு வழிவகுக்கும் என்பதே இதில் கலந்து கொண்டவர்களது நம்பிக்கையாக இருக்கிறது.

கடந்த கால தவறுகளை இன்னும் பல முரண்பாடுகளைத்தோற்றுவிக்கும் அடிப்படைகளாகக் கொள்ளப்பட்டதே இலங்கையின் இனப்பிரச்சினை இவ்வளவு நீண்டு செல்வதற்கான காரணம். மாறாக அத்தவறுகளில் இருந்து படிப்பினை பெற்று சமூகம் முன்னேற்றம் காணவேண்டும் என்பதே காலத்தின் தேவையாகும்.

– ஏ. உசாமா

## கருத்தாடல் களம்

### இராணுவம் அரச கட்டுப்பாட்டில் இல்லையா?

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊழியர்கள் கடத்தப்பட்ட செயலானது இந்த அரசாங்கத்தின் சமாதான விரோதப்போக்கையே எடுத்துக் காட்டுகிறது. ஜெனீவாவில் பேச்சு நடத்தவும், சகல வன்முறைகளை நிறுத்தவும் அரசாங்கம் உடன்பட்டு 24 மணிநேரம் செல்வதற்கிடையே விடுதலைப் புலிகள் அமைப்பு உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். இப்போது வெலிக்கந்தை இராணுவச் சோதனைச் சாவடி அருகே தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊழியர்கள் கடத்தப் பட்டுள்ளனர். இதன் மூலம் அரசாங்கத்தின் சமாதான விரோதப்போக்கு வெளிப்பட்டுள்ளது. அத்தோடு ஜனாதிபதி சமாதானம் பற்றி உதட்டளவில் பேசினாலும் இராணுவம் தனது வழமையான வன்முறைப்போக்கையே கையாளுகிறது. கருணா குழு என்ற பெயரில் தமது கொடூரங்களை நிறைவேற்றுகிறது. உண்மையில் அரசாங்கத்திற்கு இதில் தொடர்பில்லை யென்றால் நாங்கள் கேட்கின்ற கேள்வி இராணுவம் அரச கட்டுப்பாட்டில் இல்லையா என்பதுதான்

எம். சுப்பிரமணியம்
கொழும்பு

### புலிகள் வேடிக்கை பார்க்கிறார்கள்

வன்முறைகளை ஆரம்பித்தது புலிகளே. கருணா பிரச்சினை புலிகளது உள்வீட்டு பிரச்சனை. தமது உள்வீட்டு பிரச்சனையை தீர்க்க முடியாத நிலையில் இராணுவத்தின் மீது பழி போடுவது சரியல்ல. உண்மையிலேயே புலிகள் அமைப்பு விடுதலையையே இலட்சியமாகக் கொண்டதென்றால் எவ்வாறு அதன் பிரதான தளபதியாக இருந்த கருணா போன்றவர்களால் தமிழருக்கெதிராக துரோகத்தையும், கொலைகளையும் செய்ய முடிகிறது? புலிகள் ஒன்றும் புனிதர்கள் அல்ல. அதிகாரம் அவர்கள் கையில் செல்லும் போது அவர்களுக்கும் இராணுவத்திற்கும் வித்தியாசம் ஏதும் இருக்கப்போவதில்லை. உண்மையில் வன்முறைகளை, மோதல்களை உருவாக்கிவிட்டு புலிகள் வேடிக்கை பார்க்கிறார்கள் என்பதே எனது கருத்து.

ஆர். ஜெயானந்தமூர்த்தி
திருகோணமலை




விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கும், ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு 7.30 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்
12.02.2006

# இஸ்லாமிய உலகை கலக்குக் கலக்குகிறது ஒரு கார்ட்டூன்!

டென்மார்க்கிலிருந்து வெளியாகும் 'யூலன்ட் போஸ்டன்' (Jyllands - Posten ) இஸ்லாத்தைத் தோற்றுவித்த முகமது அவர்களைப் பற்றிய கேலிச்சித்திரங்களை வெளியிட்டது பெரும் கலவரங்களுக்கும் கொந்தளிப்புகளுக்கும் அடி கோலி விட்டிருக்கின்றது.

இது டென்மார்க்கில், அதிகம் விற்பனையாகும் பத்திரிகையாகும். இந்த கேலிச்சித்திரங்கள் விவகாரம் தொடங்கிய விஷயமே வித்தியாசமானது. Kaare Bluitgen என்பவர் முகமது பற்றி எழுதிய புத்தகத்திற்கு படம் வரைய எந்த ஓவியரும் முன்வரவில்லை. பொதுவாகவே டெனிஷ் ஓவியர்கள் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் தாக்குதலுக்கு பயந்து இஸ்லாம் பற்றிய தங்களது படைப்புகளை வெளியிடுவதில்லை என்று கேள்விப்பட்ட பின்னர் 'யூலன்ட் - போஸ்டன்' பத்திரிகை எந்த அளவுக்கு டென்மார்க்கில் கருத்துச் சுதந்திரம் இருக்கிறது என்பதை அறிவதற்காக, எடுத்துக் காட்டுவதற்காகவே இத்தகைய கார்ட்டூன்களை பிரசுரிக்க முன்வந்து அறிவிப்பையும் வெளியிட்டது.

இதைத் தொடர்ந்து 12 சித்திரங்களை வெளியிட்டது. இச்சித் திரங்கள் வெளியானது செப்ரெம்பரில். இந்தச் சித்திரங்களில் முகம்மது கையில் கத்தியுடனும் இருபக்கமும் பர்தா அணிந்த இளம்பெண்களுடனும் இருக்கும் சித்திரமும், மற்றொன்றில் முகம்மது அவர்களின் தலைப் பாகையில் வெடிகுண்டு இருப்பதாகவும், மேலுமொன்றில் சுவர்க்கத்தில் முகமது ஜிகாதிகளை நோக்கி ஓடிவந்தபடி ''நிறுத்துங்கள் நிறுத்துங்கள் கன்னிப் பெண்கள் தீர்ந்துவிட்டனர்'' என்று சத்தம் போடும் படியும் இருக்கும் சித்திரங்கள் டென்மார்க்கின் முஸ்லிம்களை கோபம் கொள்ளச் செய்தன. டென்மார்க் சனத்தொகையில் மூன்று சதவிகிதம் முஸ்லிம்கள்.

பாகிஸ்தானின் அடிப்படைவாத அமைப்புகளின் தலைவர்கள் டென்மார்க்கிற்கு சென்றபோது இவ்விஷயத்தை அங்குள்ள முஸ்லிம் அமைப்புகள் அவர்களிடமும், காஷ்மீர் தீவிரவாத அமைப்புகளுடனும் தொடர்புடையவர்களிடமும் தெரிவித்துள்ளனர். ஏனைய முஸ்லிம் நாடுகளுக்கும் தமது பிரதிநிதிகளை அனுப்பி 'யூலன்ட் - போஸ்டன்' விவகாரத்தை சர்வதேச மயமாக்கின. டென்க்மார்க்கின் பிரபல இமாமும் - டென்மார்க் முஸ்லிம் அமைப்பான Islamisk Trossamfund இன் தலைவருமான அகமது அபூலாபான் நாங்கள் இதை சர்வதேசமயமாக்கியே தீருவோம் என்று அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து ஒக்ரோபரில் 12ஆம் திகதி பதினோரு முஸ்லிம் நாடுகளின் தூதர்கள் டென்மார்க்கின் பிரதமரை சந்தித்து தமது கண்டனங்களை வெளிப்படுத்த முயன்றனர். ஆனால், டென்மார்க்கின் பிரதமர், தமது நாடு கருத்துச் சுதந்திரத்தில் தலையிடாது என்று தெரிவித்து இப்பிரச்சினை குறித்து முஸ்லிம் நாடுகளின் தூதர்களுடன் பேச மறுத்து விட்டார்.

ஒக்ரோபர் 21ஆம் திகதியிட்ட இது சம்பந்தமான அவரது கடிதத்தில் அந்த தூதர்களிடம் பின்வருமாறு தெரிவித்தார். "Freedom of speech is the very foundation of danish democracy. Feedom of speech is far reaching and the Danish government has no means of influencing the press" மேலும் தமது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் படி இந்தப் பிரச்சினையில் நீதிமன்றங்கள் மட்டுமே விசாரித்து கருத்து, நடவடிக்கை எடுப்பது குறித்து தெரிவிக்க முடியும் என்றும் கூறினார்.

உள்நாட்டுப் பிரச்சினையை ஏனைய முஸ்லிம் நாடுகளின் தீவிரவாத குழுக்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்ற டென்மார்க் முஸ்லிம்களை போன்ற முஸ்லிம் அமைப்புகளை அந்நாட்டு அரசியல்வாதிகள் 'உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் துரோகிகள்' என வர்ணித்தனர். இதைத் தொடர்ந்து டென்மார்க்கின் முஸ்லிம் அமைப்புகள் (பதினொரு அமைப்புகள்) 'யூலண்ட் - போஸ்டனுக்' கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தன.

நவம்பரில் டென்மார்க் Politiken ஏற்பாடு செய்த கருத்தரங்குகளில் கலந்து கொண்ட துருக்கி நாட்டு பிரதமர் Recep Erdogan நாளிதழின் இத்தகைய கார்ட்டூன்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்காத டென்மார்க் அரசை கண்டித்துள்ளார். இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பான OIC இதை ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கு (United Nations) கொண்டு சென்றது. இதைத் தொடர்ந்து டிசெம்பரில் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையர் மத சுதந்திரம் மற்றும் நிறவெறி குறித்த நிபுணர்கள் அடங்கிய ஐ நாவின் இருநபர் குழு இவ்விஷயத்தை ஆய்வு செய்து தமது அறிக்கையை சமர்பிக்கும் என்று உறுதி அளித்தார்.



மெதுவாக பிரச்சினை புகைய ஆரம்பித்த நேரத்தில் நோர்வேயின் 'Magazinet' பத்திரிகையும் இவற்றை மீள்பிரசுரம் செய்யவே, உலகெங்கும் உள்ள முஸ்லிம் அடிப்படைவாதிகளும், அடிப்படைவாத இஸ்லாமிய அரசுகளும் கொதித்தெழுந்துள்ளனர். (அப்பத்திரிகையின் ஆசிரியர் Vebjrn Selbekk இற்கு கொலை மிரட்டல்கள் வந்ததைத் தொடர்ந்து அவர்களது இணையத்தளத்தில் வெளியிட்டிருந்த கார்ட்டூன்களை நீக்கிவிட்டார் அவர்.) நோர்வேயின் மற்றொரு பத்திரிகையான Dagbladet தமது ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் இதை மீள்பிரசுரம் செய்தது(இப்பத்திரிகை இன்றுவரை தனது இணையத் தளத்தில் அச்சித்திரங்களை வைத்துள்ளது.) OIC யின் பிரிவான Islamic Educational Scientific and Cultural Organisation (ISESCO) இன் பொதுச் செயலாளர் அப்துல் அஜீஸ் உதுமான் அல்-த்வைஜ்ரி டென்மார்க் மன்னிப்பு கேட்கும் வரை ஓ.ஐ.சியின் உறுப்பு நாடுகளை பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஒதுக்கி வைக்கும்படி வேண்டுகோள் விடுத்தார்.

சவுதியில் தொடங்கி அரபு நாடுகள் அனைத்திலும் பொதுமக்கள் டென்மார்க்கின் பொருள்களை பகிஷ்கரிக்க ஆரம்பித்தனர்.

டென்மார்க்கின் மொத்த ஏற்றுமதியில் ஒரு சிறிய சதவிகிதமே இஸ்லாமிய நாடுகள் வாங்கினாலும் இப் பிரச்சினை காரணமாக டென்மார்கிற்கு கிடைக்கும் பாதகமான பிரசாரம் இஸ்லாமிய நாடுகளில் வசிக்கும் டென்மார்க் குடிமக்கள் குறித்த கவலை போன்றவற்றின் காரணமாக 'யூலண்ட் - போஸ்டனின்' ஆசிரியர் Carsten Juste இது சம்பந்தமாக ஏன் இவ்வாறு செய்ய நேர்ந்தது என்பதை தற்போது விளக்கி, பெரும்பான்மை முஸ்லிம்களை இந்த விஷயம் பாதித்ததால் தனது மன்னிப்பை தெரிவிக்கிறோம் என்று கூறியுள்ளார்.




ஆனால் டென்மார்க்கின் பிரதமரான Fogh Rasmussen இப் பிரச்சினையில் மன்னிப்பு கேட்க மாட்டோம். கருத்துச் சுதந்திரத்தில் நாங்கள் தலையிடமாட்டோம் என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார். சமீபத்தில் 'அல் - அராபியா' தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலும் இதை மறுபடியும் கூறியுள்ளார். டென்மார்க்கில் நடந்த கருத்துக் கணிப்பில் பெரும்பான்மைப் பொதுமக்கள் அவருக்கு சார்பாகவே உள்ளனர். இது அடிப்படைவாத முஸ்லிம்களை இன்னமும் கோபத்தில் ஆழ்த்தியுள்ளன.

இதை எழுதுகின்ற நிலையில் பெய்ரூட்டில் ஒரு கும்பல் டென்மார்க் தூதரகத்தை அடித்து உடைத்து உள்ளே நுழைந்து தீவைத்துள்ளது. சிரியாவில் உள்ள டென்மார்க் மற்றும் நோர்வே தூதரகங்களுக்குள் ஒரு முஸ்லிம் கும்பல் புகுந்து அவற்றை எரித்துள்ளது. சவூதி, சிரியா போன்ற அரசுகள் டென்மார்க்கிற்கான தங்களது தூதரை திரும்ப அழைத்துக் கொண்டுள்ளன. டென்மார்க்கின் இரண்டாவது மிகப் பெரிய நிறுவனமான 'அர்லாஃபுட்ஸ்' தனது சவூதியிலுள்ள தொழிற்சாலையை மூடிவிட்டது. இந்தோனேசியாவில் உள்ள டென்மார்க் தூதரகம் தாக்கப்பட்டுள்ளது. லிபியா தனது டென்மார்க் தூதரகத்தை இழுத்து மூடிவிட்டது. பல நாடுகளில் டென்மார்க் கொடிகள் எரிக்கப்பட்டு அவற்றை முஸ்லிம்கள் மிதிக்கும் காட்சி பத்திரிகையில் பகிரங்கமாக வெளியிடப்பட்டுள்ளன.

டென்மார்க், நோர்வே, பிரான்ஸ் போன்ற நாடுகளின் தூதரகங்களைத் தாக்குவதும் பொதுமக்களைக் கொல்வதும் இஸ்லாமிய போதனைகளின் படி சரியே என பல தீவிரவாத முஸ்லிம் குழுக்கள் பாலஸ்தீனத்திலும் ஏனைய முஸ்லிம் நாடுகளிலும் அறிவித்துள்ளன. பாலஸ் தீனத்திலுள்ள டென்மார்க் குடிமக்களை வெளியே செல்லுமாறு 'பதா' அமைப்பு அறிவித்துள்ளது. பாலஸ்தீனத்திலுள்ள காசாவில் 'அல்-அக்ஸா' படை அங்குள்ள ஐரோப்பியக் கூட்டமைப்பின் அலுவலகத்தைக் கைப்பற்றி மிரட்டியது. பாகிஸ்தானில் உள்ள ஜமாத் இ- இஸ்லாமியின் அதிகார பூர்வமான நாளேடான 'ஜஸரத்'தில் இந்த கார்ட்டூன்களை வரைந்தவரது தலைக்கு விலை வைத்து அறிவிப்புகள் வெளியாகியுள்ளன இந்த 12 காட்டூன்களையும் ஒருவரே வரைந்ததாக இதை வெளியிட்டுள்ள Shabab - E - Milli என்ற இந்த ஜாமாத்-இ-இஸ்லாமின் இளைஞர் அணி கருதுகிறது. பாகிஸ்தான் நாடாளுமன்றமும் இதைக் கண்டித்து ஏக மனதாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

இதைத் தொடர்ந்து கருத்துச் சுதந்திரத்தை காப்போம் என்ற கோஷத்துடன் பல ஐரோப்பிய, அமெரிக்க, நியூசிலாந்து பத்திரிகைகள் இந்த கார்டூன்களை வெளியிட்டுள்ளன. இணையத்திலும் இந்த கார்டூன்கள் பல இணையத் தளங்களில் வெளியாகியுள்ளன.

இதைத்தொடர்ந்து இந்த கலவரங்களை பெரும் வெற்றியாக

**நேசகுமார்**

இஸ்லாமிய அடிப்படை வாதிகள் நோக்குகின்றனர். டென்மார்க்கின் 'அபூலபான்' பெப்ரவரி 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிகழ்த்திய உரையில் ஆணவமான ''நான் டென்மார்க்கைப் பார்த்து பரிதாபப்படுகிறேன், வேலையிழந்த டென்மார்க் குடிகளை நினைத்து பரிதாபப்படுகிறேன்......'' என்று பேசியுள்ளார். அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஏனைய முஸ்லிமல்லா நாடுகளின் மீதான வெறுப்பை தூண்டும் ஒரு விஷயமாக இந்த விஷயத்தை இஸ்லாமிஸ்டுகள் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

அடிப்படைவாதிகளின் தூண்டுதலால், நிதானமிழந்து கலவரங்களில் ஈடுபடும் இஸ்லாமியர்கள் இது குறித்து சிந்திக்கவேண்டும். தொடர்ந்து இஸ்லாமிய சமூகத்திற்கும் ஏனையோருக்குமான இடைவெளி இதுபோன்ற விஷயங்களால் பெருகி வருகின்றது. இந்து மதம்,கிறிஸ்தவம் போன்றவை தங்களது சமூகங்களில் இருக்கும் பழமை வாதிகளின் கருத்துகளை ஒதுக்கி வைத்துவிட்டு கருத்துச் சுதந்திரத்திற்கும் மத சுதந்திரத் திற்கும் வழிவகுத்து வருகின்ற நிலையில் 1400 வருடங்களுக்கு முன்பிருந்த மனோநிலையிலேயே இஸ்லாமிய சமூகம் இருப்பது குறித்த ஒரு சுய - பரிசோதனையை இஸ்லாமிய சகோதர - சகோதரியர் மேற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை முகாமைத்துவத்தில் ஜப்பானிய '5 எஸ்' திட்டம்

## நிறுவன முகாமைத்துவம் சில ஆலோசனைகள் 02

நடராஜா அனந்தராஜ் எம்.ஏ.

பாடசாலைகள் உட்பட அரசாங்க நிறுவனங்களில் வினைத்திறன் மந்தகதி அடைந்திருப்பது பற்றிய குற்றச்சாட்டுகள் பரவலாகக் கூறப்படுகின்றன.
ஒரு நிறுவனத்தின் வினைத்திறன் அதன் பணியாளர்களின் திருப்தியில்தான் தங்கி உள்ளது. பணியாளர்களுக்கு மகிழ்ச்சிகரமான - திருப்திகரமான - சூழலை உருவாக்கிக் கொடுப்பது அந்த நிறுவனத்தை முகாமை செய்வோரின் முதற்பணி.
இன்று அரச துறையில் அருகி வருகின்ற சிறப்பான முகாமைத்துவத்தை தூக்கி நிறுத்தக் கூடிய ஆலோசனைகளை உள்ளடக்கியது இந்தக் கட்டுரை.
கல்வி நிர்வாகத்தில் சேவை மூப்பும் பட்டறிவும் நிறைந்தவர் கட்டுரையாளர். அவர் கூறும் ஆலோசனைகள் சூரியகாந்தியில் கடந்த வாரம் முதல் தொடராக வெளிவருகின்றன.

**ஒரு** முறையற்றதும் ஒழுங்கற்றதுமான நிர்வாகக் கட்டமைப்பை மாற்றி, பணியாளர்களின் மனப்பான்மையை உயர்த்தி வினைத்திறனுடன் பணியாற்றி உற்பத்தித்திறனை அதிகரிக்கும் ஒரு வழி முறையாகவே ஜப்பானிய நிபுணர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட '5-எஸ்' (5-S) முகாமைத்துவ முறையான 'நிறுவனம் நடத்தும் நுட்பங்கள்' (House Keeping Techniques) என்ற செயல் ஒழுங்கில் குறிப்பிடப்பட்ட ஐந்து விடயங்களையும் ஒவ்வொரு முகாமையாளரும் பாடசாலை அதிபரும் குடும்பத் தலைவியும் தலைவனும் பணியாளர்களும் பின்பற்றி நடைமுறைப்படுத்துவன் மூலம் பல சிக்கல்களுக்குத் (Problems) தீர்வு காணமுடியும்.
விரயங்களைக் குறைத்து வினைத்திறன் உயர்த்துதல் (Reducing The Wastage and Increasing The Efficiency) என்ற நோக்கத்தைக் கொண்ட '5- எஸ்' முறையானது பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டவையாக உள்ளது.

1. முயற்சி விரயத்தைக் குறைத்தல்
2. நேர விரயத்தைக் குறைத்தல்
3. பணவிரயத்தைக் குறைத்தல்
4. உற்பத்தித் திறனை உயர்த்துதல்
5. தரத்தைப் பேணுதல்
6. குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்து முடித்தல்
7. வேலை செய்யும் இடத்தில் ஊழியர்களுக்கான பாதுகாப்பை வழங்குதல்
8. ஒழுக்கம் உயர்வாக இருத்தல்

இந்த இலக்கை அடையும் வகையில் 5-எஸ் முறையைக் கடைப் பிடித்து வருவது என்பது இலகுவான ஒரு முகாமைத்துவ முறையாகும்.

'5-எஸ்' என்பது 5 சிறிய ஜப்பானியச் சொற்களைக் குறிக்கும். அவையாவன:

1. செய்றி (Seiri - Sort/Select)
2. செய்ரோன் (Seiton - Systamatic)
3. செய்சோ (Seiso - Cleanliness / Sweep)
4. செய்கெற்சோ (Seiketso - Standardization)
5. செய்சுகி (Shitsuke - Self decipline)

இந்த நான்கு வகையான கட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் படிமுறைகள் மிக இலகுவானவையாகவும் எல்லோராலும் செய்யப்படக் கூடியனவாகவும் இருப்பதால், பாடசாலை முகாமைத்துவக் கட்டமைப்பில் இவற்றை நடைமுறைப்படுத்துவது அதிபர்களுக்கு வேலையை இலகுவாக்குவதுடன், விளைதிறனையும் அதிகரித்துக் கொள்ளலாம்

**கட்டம் - 1 - Seiri**

**தேவையற்றவற்றை நீக்குதல்**

ஓர் இலக்கை அடைந்து கொள்வதற்குத் தேவையானவற்றை மட்டும் தெரிவு செய்து (Sort - Select) ஏனையவற்றை அப்புறப்படுத்துதல்

ஒரு விடயத்தைத் தெரிந்து அதனைத் தெளிவாக விளங்கிக் கொண்ட பின் அதன் அடிப்படையில் தேவையானவற்றைத் தெரிவு செய்து, அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவற் றைச் சலகருக்கும் தெரியப்படுத்துதல் என்ற படிமுறைகளினூடாக இச் செயற்பாடு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

'Seiri' என்ற இம் முதலாம் கட்டத்தைச் சற்று விரிவாகவும் எளிமையாகவும் குறிப்பிடுவதாயின் -

* தற்போதைக்கு எந்தத் தேவைக்கும் பயன்படாத பொருள்களையோ கருவிகளையோ, கோவைகளையோ தெரிவு செய்து அவற்றின் முக்கியத்துவம், முக்கியத்துவமற்ற தன்மை என்பவற்றை விளங்கிக் கொண்ட பின் அவற்றை வேறாக ஓர் இடத்தில் சேர்த்து வைத்தல் அல்லது கோவைப்படுத்துதல் பின்னர் அவற்றை நேரம் கிடைக்கும் போது அப்புறப்படுத்துதல்.

* தற்போதைய தேவைகளுக்குச் சில பொருள்கள் அவசியமற்றதாகக் காணப்பட்டாலும் சில வேளைகளில் பின்னர் தேவைப்படலாம் என்று கருதும் பொருள்களை அல்லது கோவைகளை வேறாக்கி வைத்தல்.

* ஒவ்வொருவரிடமும் இருக்கும் காசுப்பை (பேர்ஸ்), தினக்குறிப்பு, அலுவலகப் பை என்பவற்றை கூர்ந்து அவதானித்தால் அவற்றில் பல தேவையற்ற கடதாசிகள், கடிதங்கள்,பற்றுச்சீட்டுக்கள் மற்றும் குறிப்புக்கள் போன்றவை இருக்கலாம். அவற்றைச் சரியான முறையில் இனங்கண்டு அப்புறப்படுத்துதல் வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளைச் செய்வதற்கு அதிகளவில் நேரத்தைச் செலவழிக்க வேண்டி வராது.

* எப்பொழுதும் எமக்குத் தேவையானவற்றை மட்டும் இலகுவாகக் கையாளக்கூடிய வகையில் எமக்கு அருகில் வைத்திருத்தல்

உ+ம் : அடிக்கடி தேவைப்படும் தகவல்களைக் கொண்ட கோவைகளை அதிகம் தனக்கு அருகில் வைத்திருத்தல் வேண்டும்.

* எம்மைச் சூழவுள்ள ஒவ்வொரு பொருள்களையும் ஒழுங்காக வகைப்படுத்தி அடுக்கி வைத்தல்

உதாரணமாக அலுவலகம் ஒன்றினுள் இருக்கும் அலுமாரிகள், அலுவலக மேசை, லாச்சிகள் என்பவற்றை ஒரு தடவை அவதானித்தால் அதற்குள் அவற்றினுள் 20 வீதமான பொருள்கள், கோவைகள், தாள்கள், சில கடிதங்கள், சுற்றிக்கைகள் போன்ற தேவையற்றவையாக இருக்கும்.

அவ்வகையான பொருள்கள் மற்றும் கோவைகளை அகற்றி, மிகுதியாக எஞ்சியுள்ள பொருள்களை ஒழுங்குமுறையில் அடுக்கிப் பயன்படுத்துவதற்கேற்ற முறையில் வைத்தல்.

* எப்பொழுதும் தேவையானவற்றையும் தேவையில்லாதவற்றையும் வேறாக்கியே வைத்திருத்தல் வேண்டும். இதனை நாள்தோறும் செய்ய முடியாவிட்டாலும் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையோ அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு தடவையோ செய்து வருவதால், அலுவலகத்தில் உள்ள ஒவ்வொரு பொருள்களையும் இலகுவில் அடையாளம் காணவும், கையாளவும் முடியும். இவற்றாலும் அதிகளவான நேர விரயத்தையும் மன அழுத்தத்தையும் குறைக்க முடியும்.

* விற்றுப் பணமாக்க முடியாத அல்லது காலாவதியான அல்லது பழுதடையக் கூடிய அல்லது இயக்கம் குறைந்த பொருள்கள் எல்லாவற்றையும் அப்புறப்படுத்த வேண்டும்.

(வளரும்)

# காலம் முழுவதும் காதல் வாழும்!

**பெ**ப்ரவரி 14 உங்களின் திருநாள். நீங்கள் இங்கிருந்து விண்ணுக்குப் பறக்கும் புனிதநாள்... பார்வைகள் பரிமாறப்பட்டு எழுந்துள்ள பாஷைகளின் சங்கமத்தில் உதித்த காதலின் பிரதிநிதிகளே! உங்களை உலகம் பார்க்கும் இந்த நாளில் சிட்டாய் காதல் வானில் சிறகடியுங்கள்...

காதல் ... இது உள்ளங்களின் ஏதோ ஒரு ஈர்ப்பில், எங்கிருந்தோ வந்த முன், பின் அறியாத இருவர் சங்கமிக்கும் இனிய நிகழ்வு.

காதலின் மகத்துவங்கள் இன்று நேற்று உணரப்பட்டதல்ல. மனித இனம் என்று உதித்ததோ அன்றே அறியப்பட்டது.

தன் காதலிக்காக ஷாஜகான் தாஜ்மஹாலைக் கட்டினான். இரு உயிர்கள் ஒருயிராய் மணவறையில் இணையவில்லையே என்ற காரணத்திற்காக கல்லறையைத் தழுவினார்களே அம்பிகாவதி அமராவதி. இந்தக் காவியங்கள் எல்லாம் எதைச் சொல்கின்றன.

இந்தப் பூமியில் - காதலர்களை மனிதர்கள் வாழ - வைக்கமாட்டார்கள் என்பதைத்தான்.

காதலர்களைக் கண்டாலே பிடிக்காத சமூகம் இன்றைக்கும் இருக்கத்தான் செய்கிறது.

காதலர்களே! சமூகத்தின் பார்வைகள் ஏன் உங்கள் மீது தப்பாய் விழுகிறது என்று ஒரு தடவையேனும் சிந்தித்துப் பார்த்தீர்களா?

நீங்களும் ஒரு காரணம் என்பதை மறந்து விடாதீர்கள். 'என்ன எங்கள் மீது பழிவிழுகிறது' என்று நீங்கள் ஆழமாய் சிந்திப்பது எமக்கும் புரிகிறது.

உங்களில் உயிருக்குயிராய் மனதார காதலிப்பவர்களும் இருக்கிறார்கள்.

'வாழ்ந்தால் உன்னோடு இல்லையே மண்ணோடு' என்று கூறி காதலுக்காய் உயிரை விடுபவர்களும் உங்கள் மத்தியில் அரிதாகவேனும் உள்ளார்கள்.

நினைத்ததை அடைய முடியவில்லையே? சரி அவள்(ன்) நினைவிலே வாழ்ந்து விட்டுச்சாவோம் என்றபடி காலத்தைக் கனவுகளுடன் நகர்த்துபவர்களும் உள்ளார்கள்.

இத்தனைக்கும் மத்தியில் காதல் என்பது பொழுது போக்குப் பொருளாக அதனைப் பாலியல் ரீதியாகக் குறுகியகாலம் பாவித்துவிட்டு கைகழுவி விடுபவர்களும் உள்ளார்கள்.

சினிமாத் தியேட்டர்களுடனும் சிற்றுண்டிச் சாலையுடனும் காதலுக்கு 'டாட்டா' சொல்பவர்களும் உள்ளார்கள்.

இதுதான்... இதுதான் ... சமூகம் உங்கள் காதலை கைஎடுத்து வணங்காமல் கல்லெடுத்து எறிகிறது.

'காதல்' என்பது எவ்வளவு புனிதமானது தெரியுமா?

இது இந்த உலகத்தில் யாரைத்தான்



விட்டு வைத்தது? எல்லோரது இதயங்களிலும் எங்கோ ஒரு கரையில் 'காதல்' முட்டி மோதித்தான் உள்ளது.

அந்தக் காதலை ஏன் களங்கப்படுத்துகிறீர்கள். காதல் என்னும் பாதை வழியே சென்று அதன் புனிதத்தினை அழுக்காக்குகிறீர்கள்?

காதலியுங்கள்! அது ஒரு மகா குற்றமல்ல! அதை மகா குற்றம் என்று [illegible] இந்த

சமூகத்தில் வாழத் தகுதியற்ற மகாபாவிகள்!

இரு உள்ளங்களும் எண்ணங்களால் ஒன்றுபட்டதென்றால் இனியென்ன மணவாழ்வில் இணைந்து உங்கள் காதலை வாழ வையுங்கள். அதை விடுத்து சம்பிரதாயங்களுக்காகவும் சமூகத்துக்காகவும் உங்கள் காதலுக்கு ஆப்பு வைக்காதீர்கள்!

தெய்வீகக் காதலைப் பிரித்து அவர்கள் உள்ளத்தின் வேதனையில் குளிர்காயும் கூட்டமே! ஒன்றை மட்டும் நீங்கள் நன்றாய் உணரவேண்டும்.

இந்த உலகத்தின் உயிரூட்டியே காதல் தான். அதற்கு உருவம் கொடுப்பவர்கள் இந்தக் காதலர்கள்.

எத்தனையோ காதலர்களைப் பிரித்தீர்களே! முடிந்ததா காதலின் சகாப்தம்? இல்லையே ஒவ்வொரு காதல் ஜோடிகளின் பிரிவிலும் காதலின் ஆத்மா உயிர் பெற்றுள்ளதைத்தான் காவியத்திலும் வரலாற்றிலும் படித்திருக்கிறோம்.

சாதி, மதம், இனம் என்ற சாயம்பூசி உண்மைக் காதலை உயிரோடு சாய்க்காதீர்கள்.

உள்ளத்தால் ஒன்றுபட்டு இதயங்களின் பரிணாமத்தால் புரிந்து கொண்டு தம் ஆயுள் வரைக்கும் தாம் சேர்ந்து வாழ வேண்டும் என நினைக்கும் காதலர்களைப் பிரிக்காதீர்கள்!

இது 'காதலர்களின் பூஞ்சோலை' இங்கு மலரும் காதல் பூக்கள் பறிப்பதற்கும் - பிரிப்பதற்கும் அல்ல. அவைகள் என்றும் வாடாத பூக்களாய் மணம் வீசுவதற்கு மட்டுமே.

மனிதர்களே காதலைக் கண்டால் நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், 'இது மனிதர்கள் அறிந்து கொள்ள இது ஒன்றும் மனிதக் காதல் அல்ல! அதையும் தாண்டிய புனிதக் காதல்'

இளமை இடறுப்பட்டு வருவதல்ல காதல். இதயங்கள் இடம்மாறப்பட்டு வருவதுதான் காதல்.

எனவே, காதலர்களே! இந்தப் பிரபஞ்சத்தின் புதிய அத்தியாயங்களைப் புதிதாய் தோற்றுவிக்கும் மனிதர்களே நீங்கள்தான்!

ஆகவே, காதலியுங்கள்!

ஊசியின் துளையினுள் ஒட்டகத்தை நுழைக்கும் இந்தக் காதல் மண்ணில் காற்று, சூரியன் ஏன் இந்த பிரபஞ்சம் இருக்கும் வரை வாழும் வலிமை கொண்டது.

எஸ். கவிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்களைப் பண்படுத்தி குடும்பத்தை வளப்படுத்துவோம்

"என்னுடைய அண்ணனின் மகள் பெரியவளாகி விட்டாள். தண்ணீர் வார்ப்புக்கு வந்து சொல்லி விட்டுப் போகிறார்கள். போக அவருக்கு லீவில்லையாம். ஏதாவது நகை நட்டுச் செய்து போடுவ தெண்டால் இப்ப வசதியில்லை யெண்டிட்டார்." பக்கத்து வீட்டு நர்மதா கண்கள் கலங்க இப்படி வந்து கூறியபோது ஆறுதல் கூறுவது அத்தியாவசியமாக இருந்தது.

ஆறுதல் கூற ஆரம்பித்தபோதோ அவளுடைய மனக்குமுறல் பொங்கி



வடிகால் தேடியது. அவளுடைய கணவனின் மருமகள் - அதாவது அவரின் அக்காவின் மகள் - பருவடைந்த போது தாய்மாமன் தங்கச்சங்கலி போடவேண்டுமென்று வாங்கிப் போட்டார்களாம். அவர்களின் வீட்டிற்கு சடங்கு நடப்பதற்கு முதல் நாளே போய் நின்று சடங்கு சம்பிரதாயமெல்லாம் நிறைவேற்றி வந்தார்களாம். தனது அண்ணனின் மகளுக்கும் அப்படிச் செய்வதுதானே முறை என்பது நர்மதாவின் வாதம்.

இது நர்மதா வீட்டில் மட்டும் நடக்கும் பிரச்சினையல்ல பல வீடுகளில் இத்தகைய பிரச்சினைகளிருப்பதை நாம் பார்க்கலாம்.

பெரும்பாலான வீடுகளில் நிதித்துறை கணவரின் கைகளிலிருப்பதால் மனைவிமார் கையாலாகாதவர்களாகி விடுகிறார்கள்.

இந்தப் பிரச்சினை வேறு உருவிலும் பரிணமிப்பதுண்டு. தன் உறவுக்கு உதவுவதை மனைவி விரும்பமாட்டாள் எனக் கருதும் கணவன் அவளுக்குத் தெரியாமலே அதைச் செய்கிறான். அதை மனைவி அறியும் போது வீடு ரணகளந்தான்.

கணவன் மனைவியின் உறவினரையும், மனைவி கணவனின் சொந்தங்களையும் அன்பு செலுத்தி உறவு கொண்டாடினால் இந்தப் பிரச்சினைகள் எழுமாட்டா. மற்றொன்றையும் நாம் சிந்திக்கவேண்டும். இந்தப் பாகுபாடு காட்டும் தன்மை மற்றவர்களைப் பாதிப்பதை விட அதிகமாக எம்மிடையே கணவனுக்கும் மனைவிக்குமிடையே தான் விரிசலை ஏற்படுத்துகிறது. தேவையற்ற வாக்குவாதம் சண்டை, கோபம், வேதனை என்பனவற்றிக்கெல்லாம் காரணமாவதை விட சிலவேளைகளில் இருவரையும் நிரந்தரமாகப் பிரித்தும் விடுகிறது. இவற்றைத் தவிர்க்க எமது மனங்களைப் பண்படுத்திக் கொள்வது நல்லதல்லவா?



வேலைக்குப் போவதைவிட வீட்டிலிருந்து குடும்பத்தைத் கவனிப்பது நல்லது என்று கருதியவர்கள் கூட நர்மதாவைப் போன்ற நிலையேற்படும்போது 'நாமும் வேலைக்குப் போய் சம்பாதித்திருந்தால் நாம் விரும்புவனவற்றை நிறைவேற்றலாமே" என்று ஏங்க நேர்கிறது.

வீட்டிலிருந்தாலும் ஒரு பெண் எவ்வளவு வேலைகளைச் செய்கின்றாள். அவளுடைய நியாயமான விருப்பங்களைத் தான் நிறைவேற்ற வேண்டு மென்பதை ஒரு கணவன் உணர்ந்து கொள்ளவேண்டும். தனது சின்னச் சின்ன ஆசைகளைக் கூட நிறைவேற்ற முடியாத நிலை, கணவனிடம் பணத்திற்குக் கையேந்தி நிற்பதால் பெண்ணுக்கு ஏற்படுகிறது.

அந்தப் பெண் தனக்குக் கிடைக்கும் நேரத்தில் வீட்டிலிருந்தே செய்யக்கூடிய தொழில்களைச் செய்து பணம் சம்பாதிப்பாளானால் இத்தகைய நிலை ஏற்படாது. வீட்டிலிருந்தே பணமீட்டக்கூடிய எத்தனையோ தொழில்கள் உள்ளன.

யார் பணத்தைச் சம்பாதித்தாலும் கணவனும் மனைவியும் மனமொத்து ஒரு காரியத்தைச் செய்யும் போது தான் மகிழ்வும் நிம்மதியும் குடும்பத்திலிருக்கும். எனவே, அதற்கேற்றவாறு இருவரும் தம் மனங்களைப் பண்படுத்த வேண்டியது மிகமிக அவசியமாகும்.

ஈஸ்வரி

---

## பெண்களே!
## அழகுடன் ஆரோக்கியத்தை பெற சில குறிப்புகள்

* தினமும் அதிகாலையில் எழுநது எந்த வித டென்ஷனும் இல்லாமல் 20 நிமிடம் உடற்பயிற்சி செய்யுங்கள்.
* தனியாக இருந்து உணவு உண்ணுங்கள். அப்படி செய்தால் நீங்கள் சாப்பிடும் உணவின் அளவு குறையும். அதனால் ஆரோக்கியம் கிடைக்கும்.
* தக்காளி, கரட், வெள்ளரி போன்றவற்றை பச்சையாக உண்ணுங்கள்.
* இனிப்பு உணவை முடிந்த அளவு குறையுங்கள்.
* அதிக நேரம் உட்கார்ந்து வேலை பார்க்காதீர்கள். ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை சிறிது தூரம் நடந்து விட்டு வேலை பார்க்கவும்.
* இரவு சாப்பிட்டு விட்டு சிறிது நேரம் நடந்தால் சோர்வு, அஜீரணம், உறக்கமின்மை போன்றவை நீங்கிவிடும்.

*- ஜீவனா.ஜீ*

---



## சந்தியாவின் கடிதங்கள்

**பிரியமுள்ள பிரியாவிற்கு,**

இன்று நம் பெண்களில் முக்கால் பங்கிற்கு மேல் வேலை செய்து சம்பாதிப்பவர்களாகவே உள்ளனர். வரவேற்கக்கூடிய மகிழ்வான ஒரு விடயமே இது.

ஆண்களுக்குச் சமனாக சகல துறைகளிலும் உள்நுழைந்து சம்பாதிக்கும் மனத்திடமும் ஆர்வமும் நம் பெண்களிடம் உள்ளது. ஆனால், எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகச் சம்பாதிக்கின்றோமோ அதைவிடப் பல மடங்கு செலவழிப்பதிலும் நாம் முன்னிற்கின்றோம்.

நாம் உழைக்கும் பணத்தைச் செலவழிப்பதற்கு நமக்கு யாருமே சொல்லித் தர வேண்டியதில்லை. நாம் சம்பாதிக்கின்றோம். நாம் தானே செலவழிக்கவேண்டும் என்ற எண்ணம் நமக்குள் ஊடுருவுகின்றது.

அடிக்கடி நொறுக்குத் தீனிகளை உபயோகிக்கும் பழக்கத்தை நாமாகவே வலிந்து ஏற்படுத்துகின்றோம். இன்னுமொரு விடயம் தெரியுமா? நம் சகோதரிகள் நாம் உழைக்கும் பணத்தை வீணடிக்கக் கூடாது என்ற சிந்தனையில் மலிவான பொருள்களைத் (உடை, செருப்பு உட்பட) தேடித்தேடி வாங்குகின்றோம்.

ஆனால், சொற்ப நாள்களுக்குள்ளேயே அந்த மலிவு விலைப்பொருள்கள் சேதமடைந்து விடும். மீண்டும் அதே மலிவு விலைப் பொருள்களைத் தேடித்தேடி வாங்குகின்றோம். இதனால் நமது சம்பாத்தியம் சிறிது சிறிதாகக் கரைந்து கொண்டிருப்பதை அறிவதில்லை.

நாம் சம்பாதிக்கும் பணம் வீணாகச் செலவழிய நாமே காரணமாகலாமா?

எனவே, விலை அதிகமானாலும் தரமான பொருள்களைத் தேடி வாங்குவோம். அவை நீண்ட நாள்களுக்கு உழைக்கும். நமக்கும் ஓர் எடுப்பான தோற்றத்தைத் தரும். அதைவிட அடிக்கடி வாங்கும் தொல்லையைக் குறைத்து நமக்கும் செலவை மிச்சப்படுத்தும். வேலைக்குச் செல்லும் பெண்கள் தமது சமையல் தேவைக்காகப் தொகையாகப் பொருள்களை வாங்கிக் குவிப்பார்கள். பழுதடையக்கூடிய பொருள்களையும் அளவு கணக்கின்றி வாங்குவார்கள். இதனால் அதிகமான பொருள்கள் வீணடிக்கப்படுகின்றன.

நேரத்தை மிச்சப்படுத்துவதற்காக அவர்கள் செய்யும் செயல் நேரத்தை மிச்சப்படுத்தி அவர்களின் பொருளாதாரத்தை வீணடிக்கின்றது.

எனவே, சமையலுக்கு வேண்டி பழுதடையக்கூடிய - பொருள்களை அன்றாடம் வாங்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அன்றாடம் வேலைத் தளத்திலிருந்து வீடு திரும்பும் போது அடுத்த நாளைய சமையலுக்கான பொருள்களை வாங்கிச் செல்வதால் விரயத்தைத் தவிர்க்கலாம். நண்பிகளுடன் கடைத்தெருவிற்குற் செல்லும்போது அவர்கள் வாங்கும் பொருள்கள் நம்மையும் ஈர்க்கின்றன. இதனால் நமக்கு அந்தப் பொருள் உடன் தேவைப் படாவிட்டாலும் வாங்கி விடுகின்றோம். இதனால் நமது சம்பாத்தியம் வீணாகின்றது.

எனவே, எதற்கும் ஆசைப்படும் மனமுடையவர்கள் அடிக்கடி கடைத் தெருவுக்குச் செல்வதைத் தவிர்த்து விடுங்கள்.

எவ்வளவுதான் நாம் சம்பாதித்தாலும் நமக்கென்றொரு சேமிப்பு இல்லாவிட்டால் சம்பாதித்தவையெல்லாம் வீணாகும். எனவே, நம் மாதாந்த ஊதியத்தில் குறைந்த பட்சம் 10 வீதமாவது மாதாந்தம் சேமித்து வரவேண்டும்.

அதைவிட அவசரத் தேவைகளுக்குக் கைகொடுக்கவேண்டும் என்பதற்காக மேலும் ஓர் 10 வீதத்தைத் தனியாகச் சேமித்து வரவேண்டும். இவ்வாறு நாம் செய்து வருவது நம் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதுடன் வாழ்வையும் அர்த்தமுள்ளதாக்கும்.

**பிரியமுடன் சந்தியா**

---

கூந்தல் வளர்வது என்பது வயது, இனம், மரபணுவை பொறுத்து வேறுபாட்டுடன் இருக்கும் .

'கீராட்டின் என் புரோட்டினால்' முடி வளர்கிறது. அதிக காய்ச்சல் கடும் நோய் தாக்குதல் தைராய்டு பிரச்சினை இரும்புச் சத்து குறைபாடு, சில வகை மருந்துகள் ஹார்மோன் குறைபாடு அதிக மன அழுத்தம் பெண்களுக்கு பிரசவத்திற்கு பின்னர் உண்டாகும் கோளாறுகள் போன்ற சூழ்நிலைகளில்



## கூந்தலின் அழகு பெண்களுக்குத் தனியழகு

முடி வேகமாக உதிரும் என்பது ஆயுர்வேத நிபுணர்களின் கருத்து.

இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் மருந்துகளும் கான்சர்,தோல் நோய், கருத்தடை மாத்திரைகள் போன்றவற்றை பயன்படுத்தும் போதும் முடி உதிரும். தலை சாயம் பூசுவதாலும் முடி கொட்டும். ஆயுர்வேதத்தில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்யும் சிகிச்சை மூலம் முடி உதிர்வது தடுக்கப்படுகிறது.

போதுமான சத்துணவு இல்லாவிட்டாலும் விட்டமின், ஏ.பி.சி, இரும்புச் சத்து போதுமான அளவு உணவில் சேருகிறதா என்பதை பார்த்துக் கொள்ளவும்.

இதனால் கண்டிப்பாக முடி வளரும். இதை தவிர ஒவ்வொருவருக்கும் ஏற்றவாறு சாப்பிடும் உணவும் முடி வளர உதவும். இதற்கு என்று தலைமுடிக்கு உணவுவகைகள் உள்ளது. நாடி பிடித்து பார்க்கும் பொழுது அவர்களுக்கு உடம்பில் எந்தச் சத்து குறைவாக உள்ளதோ அதை சரி செய்யக் கூடிய மருந்துகள் சாப்பிட்டு வந்தால் முடி வளரும்.


**பொடுகுத் தொல்லையிலிருந்து...**

காய்ந்த வெள்ளை தோல் துகள்கள் விழுவது பொடுகு எனப்படும். பலவகை பொடுகு தொல்லை உண்டு. உணவு அலர்ஜி, அதிக அளவு வியர்த்தல், அற்கோல் சோப்புகளை பயன்படுத்துதல். மனது அழுத்தம் ஆகியவையும் பொடுகு பிரச்சினைக்கு காரணம்.

எப்பொழுதும் தலையை இயற்கையாக உலரவிட வேண்டும். தலைமுடிக்கான மருந்துகளுடன் சேர்த்து நல்ல சரிவிகித உணவு, மன அழுத்தத்தை குறைக்கும் மசாஜ் போன்றவை பொடுகு பிரச்சினையை போக்கும்.

பால் உணவுப் பொருள்கள், கொழுப்பு நிறைந்த உணவுப் பொருள்கள், கடல் உணவுப்பொருள்கள், அதிக சர்க்கரை என்பன பொடுகிற்கு முக்கிய எதிரி. இதற்கு மூலிகை எண்ணெய், மருந்து போன்றவற்றை சிபார்சுடன் பயன்படுத்த வேண்டும்.

---




பெண்களின்...
புன்னகையையும்
புருவ விழியையும்
மென்மையையும்
நம்பி விடாதே...

அது...
தற்காலிகமானது
உண்மைகள்
அடிமனதில்
ஆழப்புதைந்து
ஊர்கின்றன
அவை
வெடிக்கையில்
அவள் உள்ளம்

புரியும்...

அடக்கு முறைகள்
அதிகரிக்கையில்
ஆர்ப்பரித்து,
அர்த்தமாக்கும்
அங்குதான்
"அவளை"க்
காண முடியும்

- தர்மினி பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் முதலாவது புரட்சிச் சதி தோல்வியடைந்தது ஏன்?

**1962** ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதியன்று நள்ளிரவுக்குப் பின்னர் பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளின் குழு ஒன்று புரட்சிச் சதியொன்றின் மூலம் அப்போதைய அரசைக் கவிழ்க்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக அன்று மாலை சுமார் 7 மணியளவில் நிதியமைச்சர் பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவுக்குத் தெரியவந்தது.

அக்காலகட்டத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி வகித்த ஸ்ரான்லி சேனநாயக்கவே அத்தகவலை வழங்கியிருந்தார். அப்போது அரசு சார்பு நாடாளுமன்ற உறுப்பினரொருவராக இருந்த அவரது மாமனாரான பீ.டி.எஸ்.குலரத்னாவையும் தம்மோடு அழைத்துச் சென்றே ஸ்ரான்லி சேனநாயக்க, அமைச்சர் பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவிடம் இத்தகவலைத் தெரிவித்திருந்தார் எனப் பின்னர், இச்சதி தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே இடம்பெற்ற விவாதமொன்றின் போது தகவல்கள் வெளியாயின.

தமக்குக் கிடைத்த தகவலையடுத்து உடனடியாகச் செயற்பட்ட அமைச்சர் பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, பொலிஸ் மா அதிபர் எம்.டபிள்யூ.என்.அபேகோன் மற்றும் பொலிஸ் குற்றவிசாரணைப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.ஏ.திஸநாயக்க ஆகியோரைத் தமது இல்லத்துக்கு வரவழைத்து இத்தகவலைத் தாமதமின்றி அலரி மாளிகைக்குச் சென்று பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவிடம் தெரிவிக்குமாறு அறிவுறுத்திய பின்னர் மேலும் தகவல்களை அறியும் முயற்சியைத் தமது இல்லத்திலிருந்து மேற்கொண்டுள்ளார்.

சதித்திட்டம் பற்றிய தகவல் பிரதமரிடம் தெரிவிக்கப்பட்ட அடுத்தநிமிடமே பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க அலரிமாளிகைக்கு வரவழைக்கப்பட்டார். அடுத்தகட்ட நடவடிக்கையாக அந்தப் புரட்சிச் சதி தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் விசேட விசாரணைப் பிரிவொன்று அலரி மாளிகையில் உருவாக்கப்பட்டது.

விசாரணைப் பிரிவின் துரித செயற்பாடுகளையடுத்து அன்று நள்ளிரவுக்குப் பின்னர் புரட்சிச் சதியொன்றின் மூலம் அரசு கவிழ்க்கப்படவுள்ளது எனவும் அப்புரட்சியின் சூத்திரதாரி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சீ.சீ.திஸநாயக்கவே எனவும் தெரியவந்தது. அத்தோடு அமைச்சர்கள் மற்றும் இடதுசாரித் தலைவர்களைக் கைதுசெய்வதே அவர்களது முக்கியநோக்கு என்பதும் இப்புரட்சிச் சதிக்கு இராணுவ அதிகாரிகள் குழுவொன்றும் உடந்தையாக இருப்பதும் ஏற்கனவே கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவினால் சில அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எக்காரணத்தை முன்னிட்டும் பம்பலப்பிட்டி டிப்போ பொலிஸில் இருந்து வாகனங்களோ, சுடுகலன்களோ, ரவைகளோ வெளியே கொண்டு செல்லப்படுவதைத் தடுத்து நிறுத்தும் விதத்தில் டிப்போ பொலிஸை மூடிவிடுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அடுத்த நடவடிக்கையாக அனுமதியின்றி தகவல்களோ, அறிவிப்புகளோ வெளிச் செல்வதைத் தடுக்கும் வகையில் பொலிஸ் தலைமையகத்திலுள்ள வானொலித் தகவல் பரிமாற்றப் பிரிவு சீல்வைக்கப்பட்டது பொதுவான அன்றாடச் செயற்பாடுகளைத் தவிர பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைகளைத் தவிர அதற்குப் புறம்பாக விடுக்கப்படும் எந்தவொரு உத்தரவுகளும் நடைமுறைப் படுத்தக்கூடாதெனவும் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பணிக்கு மாறும் பிரதமர் பொலிஸ்மா அதிபர் அபேகோனுக்குக் கட்டளையிட்டார்.

அதையடுத்து, பிரதமரால் முப்படைகளின் தளபதிகளும் அலரி மாளிகைக்கு வரவழைக்கப்பட்டனர். அலரிமாளிகை மற்றும் அதைச் சூழவுள்ள பிரதேசங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. அதற்குக் கடற்படையின் விசேட பாதுகாப்புப் படையணியொன்று அமர்த்தப்பட்டது.

அடுத்து இப்புரட்சிச் சதியின் சூத்திரதாரியான பிரதிப் பொலிஸ் மா அதிபர் சீ.சீ.திஸநாயக்க மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பீ.ஜோன் புள்ளே இருவரும் இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்றினால் அவர்களது இல்லங்களில் வைத்தே கைதுசெய்யப்பட்டனர்.

மேலும், பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க கதிர்காம உற்சவத்திற்குச் செல்லும் வேளையில் அங்குவைத்து அவரைக் கைதுசெய்து இரகசிய இடமொன்றில் அவரை மறைத்து வைத்து பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளதாக அவரிடமிருந்து பலவந்தமாக அவரது கையொப்பம் இடப்பட்ட கடிதமொன்றைப் பெறுவதே சதிகாரர்களது முதலாவது குறிக்கோளாக இருந்துள்ளது. பின்னர் அந்தக் கடிதத்தை மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலகாவிடம் கையளித்து அரசைக் கையேற்குமாறு அவரைப் பலவந்தப்படுத்துவது இரண்டாவது குறிக்கோளாகவும் இருந்துள்ளது. இப்புரட்சிச் சதியின் முக்கிய பங்காளியொருவரான தொண்டர் படையணியின் கட்டளையதிகாரி கேணல் எப்.சீ.டி.சேரம் இச்சதியில் சம்பந்தப்பட்டுள்ள மேலுமொரு இராணுவ அதிகாரியிடம் அதியுயர் மட்டத்திலிருந்தே தமக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார் எனவும் - தன்னலம் கருதி இப்புரட்சி திட்டமிடப்படவில்லை, நாட்டின் நலன்கருதியே இது இடம் பெறவுள்ளது எனவும் ஆரம்பத்தில் இராணுவக் கட்டமைப்பொன்றை நிறுவி ஆட்சியைக் கையேற்றதன் பின்னர் காலப்போக்கில் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு ஆட்சி அமைக்கப்படுமெனவும் தமது சகோதர அதிகாரிகளான மேலும் மூவருக்கு விளக்கமளித்துள்ள தகவல்களும் வெளிவந்தன. அந்த அதியுயர்மட்டம் சேர் ஒலிவர் குணதிலகா தானாவென்று அவரிடம் வினவப்பட்டபோதும் அவருக்கும் இப்புரட்சிச் சதிக்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை எனவும் சேரம் தெரிவித்திருந்தார். ஆயினும், மகாதேசாபதியின் பெயரும் இச்சதியில் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதாக அவரிடம் தெரிவிக்கப்பட்டது.







ஏனையோர் விசாரிக்கப்படுவது போன்று தன்னையும் விசாரணைகளுக்கு உட்படுத்தத் தாம் சம்மதிப்பதாக சேர் ஒலிவர் குணதிலக்க தெரிவித்ததையடுத்து இச்சதி தொடர்பாக இரகசியப் பொலிஸார் அவரிடமும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்ற தகவலும், பின்னர் இது தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் சபையில் இடம்பெற்ற விவாதமொன்றின்போது வெளியானது.

மேலும் புரட்சிச் சதி மூலம் கொழும்பில் கைதுசெய்யப்படுவோரை இராணுவத் தலைமையகத்தில் உள்ள வெடிப்பொருள் களஞ்சியத்தில் சிறைவைப்பதும் வெளிமாவட்டங்களில் கைதுசெய்யப்படுவோரை அப்பிரதேசங்களிலுள்ள பொலிஸ் தலைமையகங்களில் சிறைவைப்பதும் அவர்களது திட்டமாக இருந்துள்ளது.

ஆனால், சீ.சீ.திஸநாயக்க, ரொய் டி மெல் உள்ளிட்ட சில உயர் அதிகாரிகளால் உருவாக்கப்பட்டுள்ள இச்சதி மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலகவின் தலைமையில் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் திட்டமிடப்பட்டுள்ளதாக சிட்னி டி சொய்ஸா சில அதிகாரிகளிடம் தெரிவித்துள்ள தகவலும் வெளியாகின.

மேலும் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க 1962 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதியன்று கதிர்காமத்தில் இடம்பெறும் சமயநிகழ்வொன்றில் பங்கேற்க ஒழுங்கு செய்யப்பட்டிருந்தபோதும் இறுதிநேரத்தில் அது ரத்துச்செய்யப்பட்டது. ஆனால், அன்றைய தினத்தில் முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லயனல்குணதிலக்க, ஒலி கொரயா மற்றும் முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்க கொலைவழக்கில் எதிரியாகக் காணப்பட்டு விடுதலை பெற்றிருந்த அனுர டி சில்வா ஆகியோரும் அன்றைய தினத்தில் கதிர்காமத்துக்குச் சென்றிருந்தனர்.

பிரதமர் கதிர்காமத்துக்கு வருவார். ஆனால், திரும்பிச் செல்லமாட்டாரென அவர்கள் பேசிக் கொண்டதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்தப் புரட்சிச் சதியின் ஒரு பகுதி தெற்கிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரொருவரான நாடாளுமன்ற உறுப்பினர் நீல் டி அல்விஸ் அவரது பத்தேகம இல்லத்தில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வீ.எலிஸ்ரர் பெரேராவின் உத்தரவின் பேரில் (இருவரும் புரட்சிச் சதியின் முக்கிய பங்காளியாவார்) மறுநாள் மதியம்வரை அல்விஸ் பொலிஸ் நிலையத்தால் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பின்னர் சதிமுயற்சி தோல்வியுற்றதை அடுத்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இச்சதி முயற்சியை அடுத்து நாடுபூராகவும் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. புரட்சிச்சதி தொடர்பான [illegible] தணிக்கை விதிக்கப்பட்டது.

இச்சதி தொடர்பான விசாரணைகள் நடைபெற்றபோது அச்சதியில் சம்பந்தப்பட்டுள்ளதாகச்

> 1962 இல் சிறிமாவின் ஆட்சியைக் கவிழ்க்க இராணுவ, கடற்படை மற்றும் சிவில் அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட புரட்சிச் சதி மயிரிழையில் சறுக்கியது. அதுகுறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. தயா லங்காபுர எழுதி ஞாயிறு 'லக்பிம' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

சந்தேகிக்கப்பட்ட பீரங்கிப் படையின் கப்டனான லெண்டன் பொலியர் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்திருந்தார். இச்சதிக்கு உடந்தையாக இருந்தமையால் சமூகத்தில் முகங்கொடுக்க இயலாது தாம் தற்கொலை செய்து கொண்டதாக அவர் எழுதிய கடிதமொன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தப் புரட்சிச் சதி தோல்வியில் முடிந்ததையடுத்து அதன் சூத்திரதாரிகளான சீ.சீ.திஸநாயக்க, பீ.ஜோன் புள்ளே, எல்.ஜி.எஸ். வீஜேசிங்க, வீ.ஈ.பெரேரா, ரீ.வீ. விஜேசிங்க, டேவிற் தம்பையா, கொலின் வன்ரன் ரீபன், ஆர்.ஏ. கிட்டோ, டபிள்யூ சீ.ஓ. சிறிசந்திர ஆகிய பொலிஸ் அதிகாரிகளும் முன்னாள் பொலிஸ் அதிகாரிகளான சிட்னி டி சொய்ஸா, லயனல் குணதிலக்க ஆகியோரும் கேணல் றோய் டி மெல், கேணல் ஏப்.சீ.டி சேரம், லெப்ரினன் கேணல் பீ.ஆர்.யேசுஅசத், லெப்ரினன் கேணல் டபிள்யூ ஏப்ரஹாம் , மேஜர் பீ.ஐ.லொயேலா, மேஜர் டபிள்யூ ஜீ வய்ட், மேஜர் எப். பீ.ஜோசப், லெப்ரினன்ட் கேணல் ஜே.எச்.வீ.டி.அல்விஸ், கப்டன் ஜே.ஏ.ஆர்.பீலிக்ஸ், லெப்ரினன் கேணல் நொயெல் மதிஸ், கப்டன் டீ.ஈ.வீரசிங்க, கப்டன் ஜே.ஏ.பீ. அங்கி, கப்டன் என்.எஸ்.ஜய கொடி, மேஜர் வீ.ஈ.எச்.தனசேகர ஆகிய இராணுவ அதிகாரிகளும் சந்தேகத்தின்பேரில் கைதாகியிருந்தனர். முக்கிய சந்தேகநபரான றோய் சந்தமால் தலைமறைவாகியிருந்ததால் அவரைக் கைது செய்ய இயலாது போயிற்று.

அவர்களைத் தவிர சிவில்சேவை அதிகாரிகளான காணி அபிவிருத்தி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் டக்லஸ் லியனகேயும் கைதாகியிருந்தார். இது தொடர்பாக நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் வெளியிட்ட தகவல்களின்படி புரட்சிச் சதி தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 29 ஆகும்.

இதனிடையே சதிகாரர்களை நீதியின் முன்நிறுத்த அப்போதிருந்த சட்டங்கள் போதுமானவையாக இல்லாமையால் அரசு (விசேட குற்றவியல் சட்டவிதிகள்) சட்டமூலமொன்றை நிறைவேற்றியது. அரசுக்கு எதிராகச் செயற்படுவோர் எனச் சந்தேகிக்கப்படுவோர் மற்றும் அத்தகைய வழக்குகளில் சம்பந்தப்பட்டோரைக் கைதுசெய்வது மற்றும் சிறைவைப்பதற்கு குற்றவியல் சட்டவிதி மற்றும் நீதிமன்றக் கட்டளைச் சட்டம் மீளாய்வுக்குட்படுத்தப்படுவதே இச்சட்டமூலத்தின் நோக்காகும். இச்சட்டமூலம் பெப்ரவரி 15 ஆம் திகதி சபை முதல்வர் சீ.பி.டி.சில்வாவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இச்சட்டமூலத்துக்கு அமைய அரசுக்கு எதிராகப் புரட்சிச் சதி மேற்கொண்ட பிரதிவாதிகளுக்கு 10 முதல் 20 ஆண்டுகள் வரையான கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுவதற்கும் அவர்களது சொத்துகள் அரசுடைமையாக்கப்படுவதற்கும் வாய்ப்பு உருவானது. 1962 ஜனவரி முதலாம் திகதிமுதல் அச்சட்டம் செல்லுபடியாகுமெனவும் புரட்சிச் சதி தொடர்பாக மாத்திரமே இச்சட்டத்தைப் பயன்படுத்த முடியுமெனவும் அரசு அறிவித்தது.

30 மணித்தியாலங்களாக 'விவாதிக்கப்பட்ட பின்னர் 37 பெரும்பான்மை வாக்குகளால் அது நிறைவேறியது. செனற் சபையில் அதற்குச் சார்பாக 20 வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் பெற்று நிறைவேற்றப்பட்டது.

இப்புரட்சிச் சதி தோல்வியுற்றபோதும் அதன் பிரதிபலிப்பாக மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலக பதவியிழக்க வேண்டியதாயிற்று. பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க கடிதமொன்றை பிரித்தானிய அரசி எலிசபெத்திடம் சமர்ப்பித்து சேர் ஒலிவர் குணதிலக்காவைப் பதவியிலிருந்து விலக்கும் சம்மதத்தைப் பெற்றிருந்தார்.

அதற்கமைய 1954 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீலங்காவின் மகாதேசாதிபதியாகப் பதவிவகித்த சேர் ஒலிவர் குணதிலக்க நீக்கப்பட்டு, 1962 மார்ச் 2 ஆம் திகதி அப்பதவி வில்லியம் கொபல்லாவை மகாதேசாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

புரட்சிச் சதி தொடர்பான விசாரணைகளுக்காக விசேட நீதிமன்றமொன்றும் உருவானது. உயர்நீதிமன்ற நீதியரசர்களான ரீ.எஸ்.பிரணாந்து,எல்.பீ.சில்வா மற்றும் ஸ்ரீஸ்கந்தராசா ஆகிய மூவர் கொண்ட நீதிமன்றம் முன் அவ்வழக்கு விசாரணைகள் 1962ஆம் ஆண்டில் ஜூலை மாதம் 18 ஆம் திகதியன்று ஆரம்பமாயின.

வழக்கின் முக்கிய பிரதிவாதியொருவரான றொய் டி மெல் ஜூலை முதலாம் திகதியன்று தமது சட்டத்தரணிகளோடு நீதிமன்றில் ஆஜரானார்.

முடிக்குரிய அரசைக் கவிழ்க்க சட்டத்துக்கு முரணாக புரட்சிச் சதி மேற்கொண்டமை, அரசை அச்சுறுத்த முயன்றுள்ளமை ஆகிய குற்றச்சாட்டுகள் மீது டக்லஸ் லியனகே, றோய் டிமெல், எப்.சீ.டி.சேரம், சீ.சீ.திஸநாயக்க,

**தமிழில்: சரா**

சிட்னி டி சொய்சா, நொயெல் மதிஸ், பீ.ஆர்.யேசு அசத், டெரி விஜே சிங்க, எல்.சீ.எஸ்.வீரசிங்க மற்றும் வீ.எல்ஸ்ரர் பெரேரா ஆகிய பிரதிவாதிகளுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வழக்கின் இரண்டாண்டு கால விசாரணைகளின் போது 344 பேர் சாட்சியங்களை வழங்கியிருந்தனர்.

இக்காலகட்டங்களில் நீதிபதிகளும் மாறியிருந்தனர். இறுதியாக 1965 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் திகதியன்று எல்.பீ.டி.சில்வா, ஏச்.என்.ஜீ.பிரணாந்து மற்றும் எஸ்.சீ. சன்சோனி ஆகிய மூன்று நீதியரசர்கள் கொண்ட நீதிச்சபையினால் தோல்வியில் முடிந்த அப்புரட்சிச் சதி வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அத்தீர்ப்புக்கமைய பிரதிவாதிகள் 11பேருக்கும் தலா 10 ஆண்டுகள் வீதம் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதோடு அவர்களது சொத்துகளை அரசுடமையாக்கும்படியும் கட்டளையிடப்பட்டது.

ஆயினும், பிரதிவாதிகளால் இத்தீர்ப்பை எதிர்த்து பிரித்தானியாவிலுள்ள பிரிவுக் கவுன்ஸிலில் மேன்முறையீடு செய்யப்பட்டது.


(VII பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயம் புலிகள் பக்கமே!

சர்வதேச நாடுகளும், ஐ.நா.வும் அங்கீகரித்துள்ள தேசிய சுய நிர்ணய உரிமைக்காக ஈழத் தமிழர்கள் தங்களுக்கான தேசத்தைத் தாங்களே நியமித்துக் கொள்ளப் போராடுகிறார்கள்.

அரசியலில் ஜனநாயக அமைப்புகள் வழியாகத் தொடங்கிய இந்த உரிமைப் போராட்டத்தைத் தொடர்ச்சியாக ஒடுக்கிய ஸ்ரீலங்கா அரசும், தமிழர்கள் மீது இராணுவத் தாக்குதல்களையும் கட்டவிழ்த்துவிட்ட நிலையில், தமிழர்கள் அதை எதிர்கொள்ள ஆயுதம் தாங்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது.



அந்த நிர்ப்பந்தத்தின் வரலாற்று உருவாக்கம்தான் விடுதலைப் புலிகள் இயக்கம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அளப்பரிய தியாகங்களோடு தொடர்ச்சியாக அந்த இயக்கம் முன்னெடுத்துவர முடிகிறது என்றால், அதற்கான அடிப்படையான காரணம் ஈழத் தமிழர்களின் உணர்வுகளையும், உரிமைகளையும் பிரதிபலிக்கக் கூடிய ஒரே அமைப்பாக தமிழர்கள் அந்த இயக்கத்தை அங்கீகரித்துத் தழுவி நிற்பதுதான்.

அத்தகைய விடுதலைப் புலிகளின் வலிமையான எதிர் இராணுவத் தாக்குதல்களால் நிலை குலைந்து போன ஸ்ரீலங்கா ராணுவம் சர்வதேச சக்திகளின் ஆதரவைத் தேடி ஓடியது.

அப்படிச் சென்றதுதான் இந்திய இராணும். இந்திய இராணும் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு ஓய்வு கொடுக்கச் செய்து தாமே முன்னின்று விடுதலைப் புலிகளை அழிக்கத் திட்டமிட்டபோது, அந்த இயக்கத்தின் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையையும் போராதரவையும் கண்டு மலைத்துப் போய் மக்களுக்கு எதிராகவும் தாக்குதலைத் தொடங்கி அதன் காரணமாக உள்நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் பெரும் கண்டனத்துக்கு உள்ளாகி, கடும் தோல்வியோடு அவமானப்பட்டு, இந்தியாவுக்குத் திரும்பியது.

விடுதலை இராசேந்திரன்
பெரியார் திராவிடகழகம்

1,500 இந்திய இராணுவத்தினரை உயிர்ப் பலியாக்கி 3,000 இராணுவத்தினர் படுகாயமடைந்து ஊனமுற்றதுதான் கிடைத்தபலன்.

அப்போது உருவான 'ராஜீவ்– ஜெயவர்த்தன' ஒப்பந்தத்தின் பிரிவுகளை காற்றிலே பறக்கவிட்டு, இராணுவத்தைக் கொண்டு தமிழீழ மக்களின் நியாயமான உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கே இந்திய– ஸ்ரீலங்கா அரசுகள் சதி செய்தன.

போராட்டத்தை நிறுத்திவிட்டு ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையையும் விடுதலைப் புலிகள் ஏற்று செயற்படுத்த முன்வந்தார்கள்.

அப்போது தமிழ்நாட்டிலிருந்து ஈழத்துக்குத் திரும்பிய 12 விடுதலைப் புலி தளபதிகளை சிங்கள இராணுவம் கைதுசெய்து கொழும்புக்கு கொண்டு போக முயற்சித்தபோது அம்மாவீரர்கள் ஏற்றுக்கொண்ட ஒப்பந்தங்களுக்காக எதிர்த்துப் போரிடாமல் 'சைனைட்' விழுங்கி வீரமரணத்தைத் தழுவினர்.

முன்னதாக ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட விடயங்களை நிறைவேற்ற வலியுறுத்தி விடுதலைப் புலிகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல் திலீபன் மேற்கொண்ட அந்தப் போராட்டம் – 13 நாள்கள் நீடித்தும் இந்தியா மௌனமே சாதித்தது.

திலீபன் மரணத்தைத் தழுவிய தியாக வரலாற்றுக்கு புதிய அர்த்தத்தை உருவாக்கினான்.

அப்போது – இலங்கைக்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவப் படையின் தளபதியாக இருந்தவர் லெப் ஜெனரல் ஹரிஹரத்சிங். அவர் பதவி ஓய்வுக்குப் பிறகு தனது அனுபவங்களை ஒரு நூலாக எழுதினார்.

அதில் திடுக்கிடும் தகவல் ஒன்றை வெளியிட்டார். இந்தப் பிரச்சினைகள் நடந்த 1987 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக இருந்தவர் ஜெ.என்.டிக்ஸிட்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நேரடி உரையாடல் நடத்தும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பிரபாகரனை சுட்டுக் கொன்று விடுமாறு டிக்ஸிற் தனக்கு உத்தரவிட்டார் என்ற திடுக்கிடும் தகவலை இராணுவ தளபதி ஹரிஹதரத் சிங் அம்பலப்படுத்தினார்.

சமரசப் பேச்சைப் பயன்படுத்தி தமிழீழ மக்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்கான சதித் திட்டங்களை ரகசியமாக அரங்கேற்றும் – 'பார்ப்பனிய' அணுகு முறையையே அப்போது அரங்கேற்ற முயன்றார்கள்.

தொடர்ந்து ஒவ்வொரு முறையும் இராணுவ ஒடுக்குமுறைகள் தோல்வியடைந்த போதெல்லாம் பேச்சுத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

திம்பு, கொழும்பு, யாழ்ப்பாணம் என்று மூன்று கட்டங்களில் நடந்த பேச்சுகளும் இப்படி 'திரைமறைவு' சதிகளுடன் அரங்கேறின என்பது அவ்வப்போது அம்பலமாகியது. நான்காவது சுற்றுப் பேச்சு நோர்வை நாட்டின் முன்முயற்சியால் தொடங்கியது. ஆனையிறவு இராணுவ முகாமைத் தகர்த்து – புலிகள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தபோது உள்ளே சிக்கிக் கொண்ட பல்லாயிரக்கணக்கான சிங்கள இராணுவத்தினர் உயிருக்குப் போராடிய நிலையில் அவர்களை மன்னித்து விடுவிக்க விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்வந்தார்.

அத்தகைய பலம் பொருந்திய நிலையில் விடுதலைப் புலிகள் இருந்த கட்டத்தில்தான் தாங்களாகவே முன் வந்து யுத்த நிறுத்தத்தை அறிவித்து நோர்வே தலையீட்டை ஏற்று போர் நிறுத்த உடன்பாட்டை ஒப்புக் கொண்டு – சமரசப் பேச்சுக்குத் தயாராக முன்வந்தார்கள் விடுதலைப் புலிகள்.

ஆனால், மீண்டும் ஆளும் சிறிலங்கா ஆட்சி தனது ரகசிய சதித்திட்டங்களையே அரங்கேற்றத் துடித்தது இதுதான் உண்மை.

இப்போது நடைபெற்ற பேச்சுகள் முறிந்ததற்கான காரணம் என்ன? விடுதலைப் புலிகள் தான் 'போர்வெறி' பிடித்து ஒப்பந்தத்தை மீறுகிறார்கள் என்று பார்ப்பன ஊடகங்கள் திட்டமிட்டு செய்து வரும் பிரசாரத்தில் உண்மை இருக்கிறதா?

தமிழர்களுக்கு இதோ, சில உண்மைகளை முன்வைக்கிறோம்.

2002 ஆம் ஆண்டு பெப். 22ஆம் திகதி உருவான போர் நிறுத்த உடன்பாட்டில் மூன்று முக்கிய பிரச்சினைகள் இடம் பெற்றிருந்தன

அவை யாவை?

அதி உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து இராணுவம் விலக்கிக்கொள்ளப்படவேண்டும் என்பது முதல் நிபந்தனை.

## மக்கள் ஆதரவு பெற்ற விடுதலை இயக்கங்களை ஒடுக்கிவிட முடியாது!

தமிழர்கள் பிரதேசத்தில் கல்வி நிலையங்களிலிருந்து, வழிபாட்டுத் தலங்களிலும், காலியாகக் கிடந்த தமிழர்களின் வீடுகளிலும், இராணுவம் புகுந்து கொண்டு, தமிழர்களின் நடமாட்டங்களையே கட்டுப்படுத்தி, இயல்பு வாழ்க்கையை முடக்கி வந்தது.

இப்படி அவர்கள் முறைகேடாக ஆக்கிரமித்த பகுதிகளை 'உயர் பாதுகாப்பு வலயம்' என்று அழைத்துக் கொண்டார்கள். பள்ளிகளிலிருந்து 160 நாள்களுக்குள்ளும், பொதுக் கட்டடங்கள், வீடுகளிலிருந்து 30 நாள்களிலும், நகரங்களில் மக்கள் புழக்கமுள்ள பகுதிகளிலிருந்து 60 நாள்களிலும் – இராணுவம் விலக்கிக் கொள்ள வேண்டும் என்று ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால், நான்கு ஆண்டுகள் உருண்டோடியும், சிறிலங்கா இராணுவம் விலகவில்லை. ஒப்பந்தத்தை மீறியது யார்?


கடற்கரைப் பிரதேசங்களில் வாழும் தமிழர்களின் உயிர் வாழ்க்கைக்கு ஒரே ஆதாரம் மீன் பிடித் தொழில்தான். இராணுவம் – இந்தத் தொழிலையே முடக்கிப் போட்டது. உயிர் வாழும் உரிமையே மக்களுக்கு மறுக்கப்பட்ட நிலையில் கெடுபிடிகளோ செய்யக் கூடாது என்பது ஒப்பந்தத்தின் இரண்டாவது முக்கிய அம்சம்.

இப்படிச் சுமுகமான சூழ்நிலையை உருவாக்க ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்டிருந்த கெடு 90 நாள்கள். ஆனால், என்ன நடந்தது? நான்கு ஆண்டுகளுக்குப் பிறகும் கெடுபிடிகள் தளர்த்தப்படவில்லை மேலும் மேலும், புதிய புதிய நெருக்கடிகளை இராணுவம் தமிழ் மீனவர்களுக்கு உருவாக்கியது.

மீனவர்கள் தொடர்ந்து வாழ்வுரிமையை இழந்து நிற்கிறார்கள். ஒப்பந்தத்தை மீறியது யார்?


இராணுவத்துக்கு ஆதரவாக செயற்பட்டு வந்த ஈ.என்.டி.எல்.எப். போன்ற அயுதக் குழுக்களிடமிருந்து (இது இந்தியாவால் உருவாக்கப்பட்ட துரோகக் குழு) ஆயுதங்களைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்பது மூன்றாவது முக்கிய அம்சம். நடந்தது என்ன? ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் பறிக்கப்படவே இல்லை. அவர்கள் இராணுவத்தின் ஆதரவோடு வெளிப் படையாகத் திரிந்தார்கள்.

இத்தகைய போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தளபதிகள்



ஆயுதக் குழுக்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

அதே நேரத்தில் முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் தமிழர் பிரதேசங்களில் இராணுவத்தின் தாக்குதல்களும் அதிகரித்துக்கொண்டே இருந்தன.



இதை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு தமிழர்கள் தள்ளப்பட்டனர்.

பொது மக்கள் ஆயுதப் பயிற்சிகளை எடுத்தனர். ஆண்–பெண் –முதியவர் அனைவரும் தங்களைத் தற்காத்துக்கொள்ள ஆயுதம் தாங்கினர். வியட்நாம் போன்ற நாடுகளில் உருவானது போல் 'மக்கள் இராணுவம்' உருவாகியது.

இராணுவத் தாக்குதலுக்கு மக்கள் இராணுவம் பதிலடி கொடுத்தது. இப்படித் தாக்குதல் நடந்த பிரதேசங்கள் முழுமையாக விடுதலைப் புலிகளின் ஆளுகைக்கு உட்படாத இராணுவத்தின் முழுக் கட்டுப் பாட்டுக்குள் இருந்த பிரதேசங்கள் என்பதை கவனத் தில்கொள்ளவேண்டும். அதே நேரத்தில் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் எவ்வகையான பிரச்சினையும் இல்லை.

அங்கே கல்வி நிறுவனங்கள், நிர்வாக அமைப்புகள், நீதிமன்றங்கள், மருத்துவமனைகள் என்று ஓர் அறிவிக்கப்படாத ஆட்சியையே புலிகள் நடத்தி வருகின்றார்கள். இந்த நிலையில் 'அல்கெய்டா'போன்ற தீவிரவாத இயக்கங்களோடு விடுதலைப் புலிகளை ஒப்பிடும் பார்ப்பன ஊடகங்களின் பிரசாரம் அப்பட்டமான பொய்யல்லவா?

ஆயுதக் குழுக்களின் – ஆயுதங்களைக் களையாமல் அவர்கள் தாக்குதல்களைத் தொடர அனுமதித்த சிறிலங்கா அரசு – புதிய ஆயுதம் தாங்கிய குழு ஒன்றையும் உளவு நிறுவனங்களின் சதி ஆலோசனையோடு உருவாக்கியது.

### அரசு உருவாக்கிய கருணா குழு

அதுதான் கருணா தலைமையிலான குழு.

இந்தக் குழுவை உருவாக்கியது சிறிலங்கா அரசுதான் என்பதற்குச் சான்றுகள் உண்டு.

''பேச்சில் விடுதலைப் புலிகளை பங்கேற்க வைப்பதன் மூலம் அவர்களை சர்வதேச வலையில் சிக்க வைத்து விட்டோம் – அமைதிப் பேச்சின் ஊடாக கருணா தலைமையில் புதிய ஆயுதக் குழுவை விடுதலைப் புலிகளுக்கு எதிராக நாங்கள் தான் உருவாக்கினோம்'' இப்படி வெளிப்படையாக சிங்களவர்களிடம் சென்று மார்தட்டினார் ஆளும் ரணில் விக்கிரமசிங்க கட்சிஸ்ய சார்ந்த நவீன் திஸ்ஸநாயக்க.

இவர் 94 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் சந்திரிகாவை எதிர்த்து ரணில் கட்சி சார்பாக அதிபர் பதவிக்கு நிறுத்தப்பட்ட வேட்பாளர் காமினி திஸநாயக்க வின் மகன். (காமினி சிங்கள தீவிரவாதிகளின் குண்டு வெடிப்பில் பலியானர்)

(VIIபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைகள்

- பச்சை பசேல் பகட்டுக்காரி. பந்தலிலே ஊஞ்சல் ஆடுவாள். உள்ளமெல்லாம் கசப்புக்காரி.அவள் யார்?
**பாகற்காய்**

- முக்கண்ணன் முத்தான சுவையுடன் நீர் உடையவன். குடுமிக்காரன். வெள்ளை மனம் கொண்டவன். அவன் யார்?
**தேங்காய்**

- பந்தலிலே பச்சைப் பாம்பு. பாம்பாட்டிக்கு பயப்படாத பாம்பு. அது என்ன?
**புடலங்காய்**

- மஞ்சள் சேலைக்காரி உச்சியிலே கிரீடம் வைத்த மகாராணி, உடம்பெல்லாம் கண் கொண்ட மாரியாத் தாள் அவள் யார்?
**அன்னாசிப் பழம்**

- சிகப்பு சட்டைக்காரன். சிரித்தால் வாயெல் லாம் பற்கள் அவன் யார்?
**மாதுளம்பழம்**

- உடம்பெல்லாம் முள் கொண்ட குண் டம்மா.ஆனால் மனசுக்குள்ளே இனிப்புக் கண்ணம்மா. அவள் யார்?
**பலாப்பழம்**

- சிவப்பு வண்ண பட்டுச் சேலைக்காரி. உரிக்க உரிக்க மற்றவரை அழ வைப் பாள். அவள் யார்?
**வெங்காயம்**

- வெண்பட்டு உடுத்தியிருக்கும் ஒய்யார குடு மிக்காரி அவள் யார்?
**உள்ளி**

- பச்சைப் பெட்டிக்குள் ஐந்து அறைகள். அறைகள் முழுவதும் முத்துக்கள். எடுக் கலாம் தொடுக்க முடியாது அது என்ன?
**வெண்டிக்காய்**

- பிரியா

## பொன் மொழிகள்

- வெற்றியும் தோல்வியும் முயற்சியின் அறு வடை.
- அன்புக்கும் அறிவுக்கும் எல்லையே இல்லை.
- பிறப்பின் முடிவு இறப்பு. இறப்பின் முடிவு பிறப்பு.
- நீங்கள் சஞ்சலமற்ற ஒருவனை மடைய னாக்க முடியாது.
- மௌனம் என்பது சத்தமில்லாமல் இருப் பது மட்டுமல்ல, அத்துடன், மனதை ஒரு நிலைப்படுத்தி வைத்திருப்பதுமாகும்.
- பிறந்த நாட்டை பெற்றதாய் போல் நேசி யுங்கள்.
- நினைப்பது என்பது எல்லோராலும் முடி யும். செயற்படுவது ஒருவராலே தான் முடியும்.

நற்குணம் அபிராமி,
தரம் 3பி,
யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.




# சிறுவர்களும் கணனிக் கல்வியும்



உலகம் தற்போது மிகவும் சுருங்கியுள்ளது.யாவும் கணனி மயம். உலகமே வலைப்பின்னலால் இணைக்கப்பட்டு வலுவாகப் பிணைந்துள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகளை எடுத்து நோக்குவோமானால் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு கணனியாவது இணையத்தள இணைப்புள்ளதாகக் காணப்படும். அங்கு ஐந்து வயதுச் சிறுவன் கூட மிக இலாவகமாகக் கணனியைக் கையாள்வான். கணனியின் மூலமாக மிக வேகமாக உலகச் செய்திகளையும் கல்வி அறிவையும் பெற்றுக்கொள்வான்.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை இது ஒரு வளர்ச்சி அடைந்து வரும் நாடு. இங்கும் கூட கணனிகள் காணப்படுகின்றன. இணையத்தள இணைப்புக்கள் காணப்படுகின்றன. ஆனால், இவ்வசதி அனைத்துத் தரப்பினர்க்கும் கிடைக்கின்றதா? என்று ஆராய்ந்தால் முடிவு இல்லை என்றே கிடைக்கின்றது.

இங்கு பொருளாதாரம் சமமின்மையாகப் பரம்பியுள்ளது. பொருளாதார பலமுள்ள சிறுவர்கள் கணனி மயத்திற்கு ஈடுகொடுக்கின்றார்கள். வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பெரும்பாலான அனைத்து இன சிறுவர்களுக்கும் கணனி யுகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறுகிறார்கள்.

புதிய புதிய கணனி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் பொருளாதார வசதியின்மையால் எல்லாச் சிறுவர்களும் கணனி அறிவைப் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளனர். யாழ்ப்பாணத்தை எடுத்து நோக்குவோமானால் பெரும்பாலும் எதிர்கால உலகிற்கு ஈடுகொடுக்கும் வகையில் பெற்றோர்கள் பிள்ளைகளை படிப்பிக்கிறார்கள். ஆனால், பலர் தமக்குக் கிடைத்த பொருளாதர சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கணனி அறிவைப் பெற்றுக் கொள்ளாமல் தவறான வழியில் பயன்படுத்துகிறார்கள். அதாவது ஒரு சில சிறுவர்கள் கணனி கற்பதில் அக்கறை காட்டுவதில்லை. இதனால் கணனி தொடர்பான முழு அறிவையும் பெற்றுக்கொள்ளத் தவறுகிறார்கள்.

இன்னும் சில சிறுவர்கள் இணையத்தள தேடல் மையங்களிற்குச் சென்று தவறான இணையத் தளங்களை பார்வையிடுவதன் மூலம் தாமும் தீய வழியில் செல்வதுடன் தமது சகாக்களையும் இதில் ஆர்வத்தை ஈடுபடுத்தி தீய வழிக்கு இட்டு செல்கின்றனர்.

இந்த நிலைமை சீர் செய்யப்படவேண்டியது அவசியம். சிறந்த கணனி அறிவைப் பெற்று அதனை உரிய வழியில் பயன்படுத்த ஏங்கும் சிறுவர்களும் எம்மிடையே உள்ளார்கள் என்பதை மறுக்க முடியாது.

பா.நிரோசா, யா/ யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

# விந்தைச் செய்திகள்

- உயிரினங்கள் கர்ப்பமடைந்தால் பொதுவாக வயிற்றுப்பகுதி பெரிதாகும். ஆனால்,தேள் கர்ப்பமடையும் [illegible] பக்கம் பெரிதாகும். முதுகு ஓட்டைப் பிளந்து கொண்டு தேள் [illegible] வெளிவரும். பின்னர் புதிய ஓடு முளைக்குமாம்.

- ஒலிம்பிக் ஜோதி கிரீஸ் நாட்டில் மௌண்ட் ஒலிம்பஸ் என்னும் இடத்தில் சூரியக் கதிர்களால் ஏற்றப்படுகிறது. இந்தப் பந்தத்தை கொண்டு ஒலிம்பிக் ஆட்டங்கள் நடை பெறும் இடத்திற்கு கால் நடையாக ஒருவர் மாற்றி ஒருவராக பலர் தொடர்ந்து ஓடிக் கொண்டே செல்வார்.

- அமேசன் ஆற்றின் இரு கரைகளிலும் பெரிய காடுகள் உள்ளன. இங்கு மரங்கள் மிகவும் உயர்ந்து அடர்ந்து வளர்த்திருக்கும். பகலில் இந்தக் காட்டில் இருள் சூழ்ந்து காணப்படும். இதனால் இக் காட்டிற்குள் செல்வது மிகக் கடினம். அதனால், இதை இருண்ட வனம் என்றழைக்கிறார்கள்.

- கடற்குதிரை என்ற மீனினத்தில் ஆண்கள் தான் தன் வயிற்றில் முட்டைகளை வைத்து அடை காக்கின்றன. இது மீன்கள் இனப் பண்பு அதிசயங்களில் ஒன்றாகும். இந்த இன மீன்கள் ஹப்போ காம்பஸ் என்றும் அழைக்கப்படுகிறது.


- எமது வீடுகளில் நாய்களை செல்லப் பிராணிகளாக வளர்க்கிறோம். அழகுற பெயரிட்டு அன்புடன் அழைத்து நண்பனாக தட்டிக் கொடுத்து வருகிறோம். ஆனாலும், முக்கியத்துவம் என்பது அதிகம் வழங்கப்படுவதில்லை. ஆனால், வெளி நாடுகளில் நாய்களுக்கென்றே விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்தி பின்பற்றி வருகின்றனராம். இதோ சில தகவல்கள்
  * பிரெச்சு மக்கள் தாம் வளர்க்கும் நாய்கள் இறந்து விட்டல் அவற்றுக்கு கல்லறை கட்டி வழிபடுகிறார்கள்.
  * பரீஸ் நகர மக்கள் நாய்களுக்கு என்று தனியான உணவங்களை நடத்துவதோடு வங்கிகளில் சேமிப்புக் கணக்குகளையும் ஆரம்பித்து நடைமுறைப் படுத்தி வருகின்றனர்.
  * ஐரோப்பியர்கள் நாய்களை வெளியே அழைத்துச் செல்ல தனியான கார்களையே வைத்துள்ளனராம்.

- கஜன்

## உங்களின் கைவண்ணங்கள்



யோகநாதன் சுதர்சியா,
தரம் - 8 டபிள்யூ,
யா/ உடுவில் மகளிர் கல்லூரி.



லதுஷா உருத்திரகுமாரன்,
தரம் - 6,
யா/ தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.



புவீராஜ் கஜரூபன்,
தரம் - 10ஏ,
யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ணா வித்தி.



எஸ். றெமின்டன்,
தரம் - 9ஏ,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# செருக்கு

கடல் அரசனான திமிங்கிலத்திற்கு ஓர் அழகான ஆண் திமிங்கலக் குட்டி இருந்தது. தான் இளவரசன் என்பதை எண்ணியும் தனக்கு நிகர் கடலில் யாருமே இல்லை என்பதை எண்ணியும் இளவரசனுக்கு அளவில்லாத பெருமை. கர்வமும் கூட. அதனால் கடலில் , போகின்ற - வருகின்ற எல்லா உயிரினங்களையும் வம்புக்கு இழுத்து உதைத்து அனுப்பி வந்தது. எல்லா உயிரினங்களும் கடலரசானான பெரிய திமிங்கலத்திடம் முறையிட்டன.

இளவரசனை அழைத்த திமிங்கல அரசர் ''கடலில் நாம் தான் பலம் மிக்கவர்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அதற்காக செருக்கடையக் கூடாது. கடலில் உள்ள உயிரினங்களைக் காப்பது அரச குடும்பத்தாராகிய நமது கடமை. நமது குடிமக்களை அன்புடன் காத்து அவர்களது அன்புக்குப் பாத்திரமாக வேண்டுமே தவிர, இப்படி நமது பலத்தைக்காட்டி பயப்படுத்துவது நல்லதல்ல. இந்த வழக்கத்தைக் கைவிடு'' என்று புத்திமதி கூறியது.

திமிங்கல இளவரசன்,தந்தை கூறியதைக்கேட்கவில்லை.


''இளவரசனான நான் எதற்காக மற்றவர்களுக்குத் தலைவணங்க வேண்டும்? நான் ஒன்றும் கோழை இல்லை. என்னுடைய வலிமைக்கும் வீரத்திற்கும் மற்றவர்கள் தலைவணங்கி மதிப்புக் கொடுத்தே ஆக வேண்டும்'' என்று திமிராகப் பேசியது இளவரசன்.

''இளவரசே, இப்படிச் செருக்குடன் பேசாதீர்கள். வல்லவனுக்கு வல்லவன் உலகில் உண்டு. மனிதர்கள் மனது வைத்தால் நம்மைப் பிடித்து விடுவார்கள். அவர்களுக்கு நம்மளவுக்கு உடல் வலிமை இல்லை என்றாலும் அறிவு பலம் உண்டு என்பதை மனத்தில் வையுங்கள்'' என்றது அமைச்சர் திமிங்கிலம்.

''அற்ப மனிதர்களைப் கண்டு அஞ்சும் உங்களைப் போன்றவர்கள் நம் இனத்திற்கே தலைகுனிவு ஏற்படுத்துபவர்கள். இப்பொழுதே மனிதர்களை ஒரு கலக்குக் கலக்கிவிட்டு வருகிறேன்'' என்று திமிருடன் மேலே வந்தது இளவரசன்.

மீன் பிடித்துக் கொண்டிருந்த இரண்டொரு படகுகளை இளவரசன் கவிழ்த்து விட்டு செருக்குடன் அங்கு மிங்கும் நீந்தி மேய்ந்தது.

அடுத்த நாள் ஒரு பெரிய கப்பலில் மனிதக் கூட்டம் வந்தது. செருக்குடன் மேலே வந்த இளவரசன் அந்தக் கப்பலைக் கவிழக்க முயன்றது. கப்பலில் இருந்தவர்கள் உறுதியான நைலோன் வலையை வீசினர். திமிருடன் திரிந்த திமிங்கில இளவரசன் அந்த வலையில் சிக்கிக் கொண்டது. தப்பிக்க எடுத்த முயற்சிகள் எதுவும் வெற்றி பெறவில்லை.



செருக்கடையும் எல்லோருக்குமே இதுதான் முடிவு.

- கவிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாருக்காகவோ?

நான் அடிக்கடி
நயப்பிழந்து போகின்றேன்
எல்லோரும் என்னைவிட்டு
எட்டியோடிப் போவதால்
வெறிச் சோடிப் போகிறேன்!

இரும்புத் தும்பிகள் தாழ்வாக
இதயம் அதிரும்படி பறக்க
கரும் புகை கக்கும்
கவச வாகனங்கள்
கொடுக்கன்களைப் போல்
என் மீது ஊர
எங்கும் மயான அமைதி!

உயிர் குடிக்கும்
உந்து பொறிகள் தாங்கி
இரும்பு வார்த்த
தலைகளுடன்
சப்பாத்துக்களால்
என்னை மிதித்தபடி!

அழகும் நிழலும்
ஆக்கித்தந்த தருக்களுக்கு
தலை தறிக்கும் படி
தரப்படும் கட்டளைகளால்
மொட்டையடிக்கப்பட்டும்
மொத்தமாய்
வெட்டப்பட்டும்
உடுத்திருந்த ஓலையாடை
உரித்து அம்மணமாக்கி
வேலிகளில் கதியால்களாக!

மயான அமைதி
மணிக்கணக்கில் கூட
நிலைத்திருப்பதில்லை
நிசப்தம் கிளிக்கும்
ரவைகளின் முழக்கம்
அதற்கு மகுடம் வைக்கும்
கிளைமோர்களின்
பெருக்கம்
களைக்காது வெடிக்கும்
கைக் குண்டுகளின்
சிணுக்கம்!

எல்லாம் சேர்ந்து
என்னோடு வாழும்
உறவுகளின் உதிரம்
குடித்து
ஊனை வீழ்த்தும்
அசிங்க அவலம்!
இனவாதத்தின்
தராசின் முள்ளைச்
சமநிலைப் படுத்த
இரண்டு பக்கமும்
பிணக் குவியல்கள்

ஈனக்குரல்கள்
இன்னுமின்னும்
என் இதயத்தை தைத்து
குண்டுகளின் ரணங்களால்
குருதி கொட்ட வைக்கிறது!

இயல்பாய் மக்கள்
இயங்கத்தானே
என்னை
இட்டு வைத்தனர்
''தெரு'' வென்று!

இப்போது
இயல்பு கலைந்து
இதயம் நொந்து
மனைகளுள்
முடங்கினர்
மக்கள்!

ஆம்!
அடிக்கடி கேட்கும்
குண்டுகளின்
அதிர்வினால்
ஈனக் குரல்களின்
அலறல் ஒலிகளால்
நயப்பிழந்து போனேன்
கிடைப் பிணமாக!

காக்கப்படவேண்டிய
உங்களைத் தவிர
யாருக்காகவோ
காவல் கிடக்கின்றன
துப்பாக்கிகளும்
கவச வாகனங்களும்
சிப்பாய்களும்
கூடவே இனவாதமும்!

சூரியநிலா

## எண்ணங்கள்

நெஞ்சத்தில்
கீறல்களாய் சில.....
நெருப்பினில்
நீறாய் சில.....

நினைவென்னும்
நிஜங்களாய் சில.....
கனவென்னும்
கற்பனைகளாய் பல....

தெரிந்தும்
தெளிவில்லாமல் சில....
அறிந்தும்
புரியாதவையாய் பல....
மகிழ்வோடு
மலர்வதாய் சில
மறக்கமுடியாமல்
கனப்பதாய் சில....
உள்ளுக்குள
ஊமையாய் சில...
வெளியினில்...
வெறுமையாய் பல
கண்டதும்
களிப்பினில் சில....
காணாததும்
தவிப்பினில் சில....
இன்னும்.... இன்னும்....
பற்பல வடிவினில்
முடிவின்றி தொடர்வதாய்....
நம் எண்ணங்கள்.....

- யஸ்மினா

## தேடல்

மனித உடலுக்குள்
உற்பத்தியாகின்ற
உணர்வுகள்
காலப் போக்கில்
விலையாகியும்
விடுகின்றன....

சுயநலமான
எண்ணங்களைக்
கொண்டிருக்கும்
மனித மனங்களுக்கு
ஏது விலை.....?

ஆயினும்,
இவற்றுக்குத்தான்
இங்கே
விலைகளும் அதிகம்....

கேள்வியும்
போட்டியும்
இவைகளுக்காகவேதான்....

மிதமிஞ்சிப்போன
செல்வச் செழிப்புக்கள்
ஒரு சில இடங்களில்
மட்டும்தான்
வாழ்க்கை
நடத்துகின்றன....

அவைகளும் கூட
இல்லாதவனிடத்தில்
சுரண்டித் தானே
சேமித்துக்
கொள்கின்றன....!

இல்லாதவன்
தேடிக் கொள்வதோ
நல்ல
மனிதர்களை
மட்டும்தான்!

- அ. சூரியன்

# நியாயம் புலிகள்.....

(V பக்கத் தொடர்ச்சி)

நவீன் திஸநாயக்க இப்படி ஒரு கருத்தை வெளியிட்டதை அடுத்து –

கொழும்பில் இருந்து வெளிவரும் 'டெய்லி மிரர்' என்னும் ஆங்கில நாளேடு இந்தச் செய்தி உண்மைதானா என்பதை உறுதிப்படுத்த நினைத்தது. ரணில் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தவரும், விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற பேச்சுகளில் பங்குபற்றி வந்தவருமான மிலிந்த மொரகொட என்பவரை அந்த ஏடு பேட்டி கண்டது.''ஆம் உண்மைதான் கருணா தலைமையிலான ஆயுதக் குழுவை உருவாக்கியதே நாங்கள் தான் '' என்று அந்தப் பேட்டியில் அவர் ஒப்புக் கொண்டார்.

அதன்பிறகு தான் ரணில் ஆட்சியின் துரோகத்தைத் தமிழர்கள் புரிந்து கொண்டு அந்த ஆட்சியை இனியும் ஆதரிக்க முடியாது என்ற முடிவுக்கு தேர்தலின் போது வந்தனர்.

இந்த ஆயுதக்குழுக்களை சிறிலங்கா இராணுவம் பயன்படுத்திக் கொண்டதற்கும் சான்றுகள் உண்டு.

ஒரு சம்பவத்தை இங்கே பதிவுசெய்ய விரும்புகின்றோம்.

பின்லாந்து, அயர்லாந்து, நோர்வே போன்ற ஐரோப்பிய நாடுகளின் (ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம் பெறாத நாடுகள்) பிரதிநிதிகள் அடங்கிய போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஒன்று உருவாக்கப்பட்டு, அது ஸ்ரீலங்காவின் நிலைமைகளைக் கண்காணித்து வருகிறது.



இந்த நிலையில், கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில நாளேடு, 'தீவுச்சேனை' என்ற பகுதியில் கருணா மற்றும் ஈ.என்.டி.எல்.எவ். குழுக்கள் ஆயுதங்களோடு முகாமிட்டிருக்கின்றன என்ற செய்தியை வெளியிட்டது.

இது உண்மைதானா என்பதைக் கண்டறிய சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டபோது அந்தச் செய்தி உண்மைதான் என்பதை உறுதிப்படுத்தியது. அதுமட்டுமல்ல, சிங்கள இராணுவ முகாம்களுக்கு – அருகருகே உடனுக்குடன் தொடர்புகொண்டு, செயற்படும் வகையில், இந்த ஆயுதக் குழுக்களின் முகாம்கள் இருக்கின்றன என்பதையும் அம்பலப்படுத்தியது.

ஆயுதக் குழுக்களிடமிருந்து ஒப்பந்தப்படி ஆயுதங்களைப் பறிமுதல் செய்யவேண்டிய ஸ்ரீலங்கா இராணுவம், அதற்கு மாறாக ஆயுதக் குழுக்களைத் தனது தாக்குதலுக்குப் பயன்படுத்திக் கொண்டு வந்தது என்ற உண்மை சர்வதேச குழுக்கள் மூலம் வெளிச்சத்துக்கு வந்தது எனில், ஒப்பந்தத்தை மீறியது யார்?

இந்த நிலைமை தொடர்ந்த போதுதான், விடுதலைப் புலிகள், பேச்சிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தனர். தேர்தல் களத்திலும் எந்தக் கட்சியையும் ஆதரிக்காத நிலை எடுத்தனர். தமிழர்களும் தேர்தலை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்தனர்.

சந்திரிகாவின் கட்சியைச் சார்ந்த சிங்களத் தீவிரவாதி ராஜபக்ஷ – ஜே.வி.பி. சிங்களத் தீவிரவாத அமைப்பின் ஆதரவோடு அதிபர் பதவிக்கு வந்தார்.

''பேச்சுக்கான திட்டங்களை மாற்றி அமைப்பேன் – நோர்வேயில் பேச்சை நடத்தமாட்டோம் – ஆசியாவில் ஏதாவது ஒரு நாட்டில்தான் நடக்கவேண்டும் – கூட்டாட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை – ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சிக்குக் கீழ்தான் எந்தத் தீர்வையும் எடுப்போம்'' என்று 'வீர' முழக்கமிட்டார்.

நோர்வேக்கு எதிராக ஜே.வி.பி. போன்ற சிங்களத் தீவிரவாதிகள் போர்க்கொடி உயர்த்தினர்.

ராஜீவ் – ஜெயவர்த்தன ஒப்பந்தத்திலேயே தமிழ்ப்பகுதிகளுக்காகத் தனி மாகாணசபைகள் உருவாக்கப்பட்டு இந்தியாவின் பொம்மை ஆட்சி ஒன்று ஈழத்தில் அமைக்கப்பட்ட வரலாற்றை மறந்திருக்க முடியாது.


இப்படி பல்வேறு காலகட்டங்களைத் தாண்டிவந்த ஈழத் தமிழர் பிரச்சினையை மீண்டும் தொடக்ககால கட்டத்துக்கே கொண்டுபோகும் திட்டங்களையே ராஜபக்ஷ முன்வைத்தார்.

இந்த நிலையிலும்கூட – 'இந்து' நாளேடு உட்பட பார்ப்பன ஊடகங்கள் ராஜபக்ஷவை உயர்த்திப் பிடித்து – விடுதலைப் புலிகளுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் எதிராகவே பிரசாரத்தை ஊதிவிட்டன.

சமரச சதிவலைகள் ஊடாகத் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு முன்னெடுப்பதற்குப் பல்வேறு காலகட்டங்களில் அமெரிக்காவும் இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சியும் ஆயுதம், ஆயுதப் பயிற்சி என்று பல்வேறு உதவிகளை வழங்கி ஸ்ரீலங்கா அரசுக்கு முட்டுக்கொடுக்க முன்வந்தன.

இவ்வளவுக்குப் பிறகு சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காக விடுதலைப் புலிகளும் ஸ்ரீலங்கா அரசும் இணைந்து 'சுனாமிப் பேரலை நிவாரணக் கட்டமைப்பு' என்ற அமைப்பை உருவாக்கினர்.

நிதி உதவி வழங்கிய சர்வதேச நாடுகளின் வலியுறுத்தலால் இது உருவானது. இந்த அமைப்பை இந்தியாவும் அங்கீகரித்தது.



இதன்படி தமிழீழப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சர்வதேச நாடுகள் வழங்க முன்வந்த நிவாரண உதவிகள் – விடுதலைப் புலிகள் மூலமாகவே வழங்கப்படும் என்று முடிவெடுக்கப்பட்டது.

இதற்குப் பிறகு, இலங்கை நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து நீதிமன்றத்தின் மூலம் விடுதலைப் புலிகள் பங்கேற்பதைத் தடுத்து விட்டார்கள். அந்தக் கட்டத்திலும் 'இந்து' உட்படப் பார்ப்பன ஊடகங்கள் விடுதலைப் புலிகளைக் குற்றம் சாட்டியே பிரசாரம் செய்தன.

ஆனால், பிரச்சினைகளை உன்னிப்பாகக் கவனித்து வரும் சர்வதேசப் பார்வையாளர்களிடம் இந்தப் பொய்ப் பிரசாரங்கள் எடுபடவில்லை.

ஸ்ரீலங்கா ஆட்சிகளின் திட்டமிட்ட திசை திரும்பும் சூழ்ச்சிகளை, சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளத் துவங்கிவிட்டது. அதனால்தான் ராஜபக்ஷ மிரட்டல்கள் பலிக்கவில்லை!

நோர்வே பேச்சிலிருந்து வெளியேற வேண்டும் என்ற சிங்கள வெறியாளர்களின் கூப்பாடு தோல்வி அடைந்து, மீண்டும் நோர்வே பேச்சுகளை இப்போது முன்னெடுக்கிறது.

ஆசிய நாடுகளில்தான் பேச்சு நடக்கவேண்டும் என்று பிடிவாதம் பிடித்த ராஜபக்ஷ – இப்போது அதற்கு மாறாக சுவிற்ஸர்லாந்து நாட்டிலே ஜெனீவாவில் பேச்சு நடப்பதற்கு ஒப்புக் கொண்டுவிட்டார்.

இந்தியாவின் ஆதாரவோடு ஈழத் தமிழர்களின் போராட்டத்தை ஒடுக்கி விடலாம் என்று திட்டமிட்ட ராஜாபக்ஷவின் தந்திரங்கள் படுதோல்வி அடைந்து விட்டன.

நியாயம் புலிகள் பக்கமே என்பது இப்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ராஜபக்ஷவின் 'இந்திய' வருகையால் மீண்டும் தமிழகத்தில், ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான ஆதரவு எழுச்சி பெற்றுள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் ராஜபக்ஷவின் சந்திப்பு முயற்சிக்கு ஆதரவு காட்டவில்லை.

ராஜபக்ஷவைப் பயன்படுத்தி, இந்தியாவுக்கு நிர்ப்பந்தம் தந்து, விடுதலைப் புலிகளை ஒழித்து விடலாம் என்ற கற்பனைக் கனவில் மகிழ்ச்சிக் கூத்தாடிய 'இந்து' போன்ற பார்ப்பன ஊடகங்கள் – கட்டுரைகளும் தலையங்கங்களும் எழுதிக் குவித்தும் தூதுகள் அனுப்பியும் தங்களது சதித் திட்டங்கள் தோற்றுப் போய்விட்டனவே என்று ஏமாந்து நிற்கின்றன!

அவர்கள் அடுத்த சதித் திட்டத்துக்கு காய் நகர்த்தி வருகிறார்கள். இதுதான் இப்போது நடந்துவருகிறது!

அடுத்து ஜெனீவாப் பேச்சை நடக்கவிடாமல் சதி முயற்சிகள் தொடருமா?

கடந்தகால அனுபவங்களிலிருந்து இந்த ஆதிக்க சக்திகள் பாடங்களைப் பெறுவார்களா?

இக்கேள்விக்கான விடைகள் இனிமேல்தான் தெரியும்.

மக்கள் சக்தியோடு நடத்தப்படும் உண்மையான விடுதலைப் போராட்டங்களைத் தொடர்ந்து ஒடுக்கிட முடியாது என்பது மட்டும் உறுதி!

ஆகவே! தமிழர்களே!!
போர்நிறுத்த ஒப்பந்தங்களை மீறுவது யார்?
– நடுநிலையோடு சிந்தியுங்கள்!

## நாட்டின் முதலாவது....

(IV பக்கத் தொடர்ச்சி)

கடந்துசென்றுள்ள காலகட்டமொன்றுக்குப் பொருந்தும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டமூலமொன்றுக்கு அமைவாகவே பிரதிவாதிகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் அத்தீர்ப்பு செல்லுபடியற்றது எனவும் மேலும்அது அரசமைப்புக்கு முரணானது எனவும் பிரிவுக் கவுன்சில் மூலம் வழங்கப்பட்ட தீர்ப்புக்கமைய 11 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். அவ்வேளையில் நாட்டின் ஆட்சிப் பொறுப்பும் கைமாறியிருந்தமையால் அரசு பிரிவுக் கவுன்ஸில் இடம்பெற்ற வழக்குப் பற்றி அக்கறை செலுத்தவில்லை.

இறுதியில் பதவியிழந்த மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலக நாட்டைவிட்டு வெளியேறினார். அவரது சொத்துகளிலிருந்து 75 ஆயிரம் பவுண்களை மாத்திரம் தம்மோடு எடுத்துச் செல்ல அரசு அனுமதித்தது. இந்த வழக்கின் முக்கிய சந்தேகநபரான டக்லஸ் லியனகே 1977 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி அரசில் ராஜாங்க அமைச்சின் செயலாளராகப் பதவியேற்றார். அந்த வழக்கில் மேலுமொரு சந்தேக நபரான ஜே.ஏ.ஆர்.பிலிக்ஸ், தேசிய வருமான வரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார்.

அந்தப் புரட்சிச் சதி வழக்கு தொடர்பான பொலிஸ் விசாரணைகள் இரகசியப் பொலிஸ் பொறுப்பதிகாரியான பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.ஏ.திஸநாயக்கவின் தலைமையிலேயே இடம்பெற்றன. இந்த வழக்கின் முக்கிய பிரதிவாதியான சீ.சீ.திஸநாயக்க இவரது சகோதரரே. ஆயினும் இரத்த உறவை விடக் கடமையே மேல் எனக் கருதி தமது சகோதரருக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு சாட்சியங்களை முன்னிறுத்தி நீதியை நிலைநாட்டியுள்ள எஸ்.ஏ.திஸநாயக்கவை நீதிமன்றம் பெரிதும் பாராட்டியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்து வரும் கள்ளநோட்டுப் புழக்கம்

இரண்டாண்டுகளுக்கு முன்னர் பத்துக்கோடி ரூபாய்களுக்கு நான்கு சதவீதமாகக் காணப்பட்ட போலி ரூபாய் நோட்டுகளின் புழக்கம் இன்று 10சதவீதமாக அதிகரித்துள்ளது என ஸ்ரீலங்கா மத்திய வங்கியின் மதிப்பீடுகள் தெரிவித்துள்ளன.

வர்த்தகச் சந்தைகளில் இந்தப் போலி நோட்டுகளின் புழக்கம் பரந்த அளவில் இடம்பிடித்துள்ளது. நாடு முழுவதும் வியாபித்துள்ள கணனிமயச் செயற்பாடுகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ள பதிப்பகங்கள் போன்றவை இச்செயற்பாடுகளுக்கு மிக அனுகூலமாக இருப்பதாக ஸ்ரீலங்கா மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

போலி ரூபாய் நோட்டுகள் அச்சிடுவது மிக நுட்பமான செயற்பாடொன்றாகவே கருதப்பட்டுவந்துள்ள போதும், தற்போது நவீன நுட்பங்கள் கொண்ட சாதனங்களைப் பயன்படுத்தி எளிதில் கண்டறிய முடியாத போலிரூபாய் நோட்டுகள் மிக இலகுவாக அச்சிடப்படுகின்றன.

ஸ்ரீலங்கா மத்திய வங்கிமூலம் அரச அங்கீகாரத்தோடு வெளியிடப்படும் உண்மையான ரூபாய் நோட்டுகளில் காணப்படும் நீர்க்கோடுகள் போலி ரூபாய் நோட்டுகளிலிருந்து அவற்றை வேறுபடுத்திக் காட்டுகின்றன. ஆனால், தற்போது போலி ரூபாய் நோட்டுகளிலும் கூட அத்தகைய நீர்க்கோடுகள் இருப்பதைக் காணமுடிகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.


இன்னொரு முறையிலும் போலிநோட்டுகள் கண்டறியப்பட்டன. அந்த நோட்டுகளில் பெரும்பாலும் ஒரே தொடர் எண்களே காணப்படும். அவற்றை ஒப்பிட்டு உண்மையான நோட்டுகளைக் கண்டறிய முடிந்தது. ஆனால், இன்றுள்ள நவீன வசதிகளைப் பயன்படுத்தி போலி ரூபாய் நோட்டுகளும் வித்தியாசமான தொடரிலக்கங்களோடு புழக்கத்துக்கு வருகின்றன. இந்நிலை போலிரூபாய் நோட்டுகளை இனங்காண்பதில் பெரும் சிக்கலை உருவாகியுள்ளது.

1000 மற்றும் 500 ரூபா போலி நோட்டுகளே பெருமளவில் அச்சிடப்படுகின்றன. மேலும் அரசு 2000 ரூபா நோட்டையும் அறிமுகப்படுத்தவுள்ளது. (ஏற்கனவே அவை அச்சிட்டு முடிக்கப்பட்டுள்ளன) அதன் பின்னர் 2000 ரூபா போலி பணநோட்டுகளும் புழக்கத்துக்கு வரலாம்.

பெரும்பாலும் கல்வியறிவற்ற பாமர மக்கள் ஊடாகவே போலி ரூபாய் நோட்டுகள் புழக்கத்துக்கு வருகின்றன. அத்தோடு, பெரும்பாலும் இரவுநேரக் களியாட்ட விடுதிகள், சூதாடும் இடங்கள், கசினோ பொழுதுபோக்குகள் இடம்பெறும் இடங்கள் ஊடாகவும் இவை சந்தைகளில் புழக்கத்துக்கு வருகின்றன. இரவுநேரங்களில் பெருமளவில் போலிரூபாய் நோட்டுகளைப் புழக்கத்தில் விடுவது கைவந்த கலையாக மாறியுள்ளது.

போலி நோட்டுத் தயாரிப்பாளர்கள் அவற்றைத் திட்டமிட்டுப் புழக்கத்தில் விடுகின்றனர். போலி நோட்டுகள் நுட்பமாகத் தயாரிக்கப்படுவது போன்றே இச்செயற்பாடுகளும் சூட்சுமம் நிறைந்தனவாகவே உள்ளன. வாகனங்கள் மூலம் இலங்கையிலுள்ள பல்வேறு பிரதேசங்களுக்கு கமிஷன்பெறும் பிரதிநிதிகள் ஊடாக போலி நோட்டுகளின் விநியோகம் இடம்பெறுகிறது. போலி நோட்டுகளைத் தயாரிக்கும் சில நிறுவனங்கள் தமது விற்பனைப் பிரதிநிதிகளுக்கு 30வீதம் முதல் 50வீதம் வரையில் கமிஷன் வழங்குவதாகவும் தெரியவந்துள்ளது.

ஒருபிரதேசத்தில் போலிப்பண நோட்டுகள் புழக்கத்தில் விடப்பட்ட பின்னர் அவற்றால் சிக்கல்கள் உருவாகின்றனவா என்பது சிலகாலம் வரையில் கண்காணிக்கப்படுகிறது. போலிநோட்டுகள் தொடர்பாகப் பிரச்சினைகள் இல்லையென உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அடுத்த கட்டமாக சிறுசிறுதொகைகளாகப் போலிநோட்டுகளை அத்தகைய நிறுவனங்கள் புழக்கத்துக்கு விடுகின்றன. இத்தகைய சூட்சுமம் மிக்க செயற்பாடுகள் காரணமாக போலிநோட்டு விநியோகங்களைக் கட்டுப்படுத்துவது பெரும் சிரமமான காரியமாகியுள்ளது.



மேலும் இடவசதி குன்றிய இடங்களில் மிக இரகசியமாக இச்செயற்பாடுகளை மேற்கொள்ள முடிவதும் இவற்றைத் தடுப்பதற்குத் தடையாக உள்ளது.

என்றாலும் கள்ளநோட்டு உற்பத்தி நிறுவனங்கள் சில அண்மையில் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவற்றிற்கு எதிராகச் சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும் அதுகால வரையில் அந்த நிறுவனங்கள் மூலம் எவ்வளவு தொகைப்பணம் புழக்கத்தில் விடப்பட்டிருக்கும் என்பது சரியாகத் தெரியவில்லை.

அண்மையில் வர்த்தக வங்கியொன்றின் ஊடாகப் பெண்ணொருவருக்கு வழங்கப்பட்ட பணநோட்டுகளிலும் போலிப் பணநோட்டுகள் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது. அந்தப் பணநோட்டுகள் வங்கிக்குள் வந்த விதம் தொடர்பாக அவ்வங்கியினால் உறுதிப்படுத்த இயலாது போனது. அரச வங்கிகளில் கள்ளநோட்டுகளை இனங்காட்டும் சாதனங்கள் இருந்தாலும் நோட்டுக் கட்டுகளின் இடையே போலிநோட்டுகள் இருப்பின் அவற்றைக் கண்டறிவது நடைமுறைச் சாத்தியமற்றதாகும்.

இவ்வாறான போலிப் பணநோட்டுகளைப் பெறுவோர் அந்த ரகசியத்தைக் காப்பதே போலிநோட்டுகளைத் தடுப்பதற்கும் பெரும் தடையாக உள்ளது. இவற்றைப் பெறுவோர் அந்த ரகசியத்தை வெளிப்படுத்தினால் தமக்கு ஆபத்துவிளையும் எனக் கருதி அவற்றைத் தொடர்ந்தும் வைத்திருப்பதற்குப் பயந்து இரகசியமாக அவற்றை மாற்ற முயல்வதும் உண்மையான நிலைப்பாட்டைக் கண்டறியத் தடையாக உள்ளது.

ஒருவருக்குக் கிடைக்கும் பணநோட்டுகள் போலியானவை எனச் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் அதுபற்றிப் பொலீஸாருக்குத் தெரியப்படுத்தப்படவேண்டுமெனவும் அதன்மூலம் விசாரணைகளை மேற்கொள்ள முடியுமெனவும் முறைப்பாடு செய்தவர் குற்றவாளியாகக் கருதப்படமாட்டாரெனவும் போலிநோட்டுகளின் புழக்கத்தைத் தடுப்பதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமானது எனவும் ஸ்ரீலங்கா மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நிதி நிர்வாகம் மத்திய வங்கியின் முக்கியமான பொறுப்பாகும். பணச் சட்டமூலத்தில் அதுதொடர்பான சகல அதிகாரங்களும் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளன.

பணநோட்டு விநியோகம் விலைவாசி ஏற்றத் தாழ்வுகளுக்கு அமைய, பெரும் பாதிப்புகளை ஏற்படுத்த வல்லன என்பதால் நிதியைக் கையாளும் கொள்கையை மிகக் கவனமாக நடைமுறைப்படுத்தவேண்டியுள்ளது. பணவீக்கத்துக்கும் நிதி விநியோகத்துக்கும் நேரடித் தொடர்புகள் உள்ளன. விலைவாசி மட்டத்தை மட்டுப்படுத்தி பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக அடிப்படை ஒழுங்குமுறையொன்றைப் பின்பற்ற வேண்டியுள்ளது. இதன் காரணமாகத் திறைசேரி மூலம் புதிதாகப் பணநோட்டுக்களைப் புழக்கத்திற்கு விடும் செயற்பாடுகள் மிக மெதுவாகவே இடம்பெறுகின்றன.

**- சரா -**

2004 ஆம் ஆண்டில் மக்கள் வசம் புழக்கத்தில் இருந்த நிதி 1.4 கோடியால் அல்லது 16.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

ஆண்டுதோறும் இவ்வாறு புழக்கத்திறகு விடப்படும் நிதி வர்த்தகச் சந்தைகளில் சேருகின்றன. அத்தகைய நிலையில் போலியான பணநோட்டுகள் புழக்கத்துக்கு வருவதால் பல்வேறு பாதிப்புகள் உருவாகின்றன. விலைவாசி மட்டம் உயர்ந்து பணவீக்கமும் அதிகரித்து அதற்கு மேலதிகமாக போலிநோட்டுகள் தொடர்பான தகவல்களும் வெளியானதன் பின்னர் பொதுமக்கள் பணத்தை புழக்கத்தில் விட அஞ்சும் நிலை உருவாகிறது.

நிதி தொடர்பாக அவர்களுக்குள்ள நம்பிக்கையும் பங்கமடைகிறது. எனவே தமக்குக் கிடைக்கும் புதிய பண நோட்டுகளை எந்தவிதமாகவும் மாற்றவோ அல்லது பொருள்களைக் கொள்முதல் செய்யவோ அவர்கள் முயற்சிசெய்கின்றனர்.

இதனால், பணப்புழக்கத்தின் வேகம் அதிகரிக்கிறது. பொருள்களின் விலைகளும் அதிகரித்து வாழ்க்கைச் செலவும் அதிகரிக்கிறது பணக்கையாள்கை அடிப்படைகளும் சீர்குலைந்து வாழ்க்கைச் செலவீனங்ளும் நிலையாக இருப்பதில்லை.

இத்தகைய புறச்சூழலின் மத்தியில் நிதி வர்த்தகமும் சரிந்துபோவதற்கு இடமுள்ளது. நாட்டின் பொருளாதார இலக்கை அடைவதிலும் முட்டுக்கட்டைகள் உருவாக இடமுள்ளது. எனவே, போலிப் பண நோட்டு உற்பத்தி மற்றும் அவை புழக்கத்தில் விடப்படுவதைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பதைப் புதிதாகச் சொல்லவேண்டியதில்லை.

போலிப் பணநோட்டுகள் பொதுமக்களின் கரங்களில் கிடைக்குமாயின் அது தொடர்பாக அவர்கள் மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி அவர்களுக்கு அறிவுறுத்தப்படல்வேண்டும். அத்தோடு, அது தொடர்பாக அவர்கள் மத்தியில் நிலவும் பீதி மற்றும் சந்தேகங்கள் நிவர்த்திசெய்யப்படுவதும் அவசியமாகும். அதுபோன்றே இத்தகைய செயல்களில் ஈடுபடுவோருக்கு விதிக்கப்படும் தண்டனைகளைக் கடுமையாக்கும் விதமாக சட்ட ஆக்கங்களும் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது.

## ஆய்வுகள்!

சாட்சியற்ற
தீர்ப்புகளினாய்வுப்படி,
உனைப் பற்றி அவர்கள்
ஏதேதோ அலசலுற்றார்!
எனக்கேயான அடிமனசில்,
உனதைப் பற்றியதான
விமர்சனங்கள்
விரவித்தேங்கி
உனை ஆராயத் தூண்டிய
'சொற்ப'
பொழுதிலும்
ஆர்ப்பரித்த மனசதனைப்
பிடித்திருத்தி
உத்வேகந்தனை
தடுத்திழுத்தேன்!
பிறகோர் சிந்தை எனதுளே!
என்னுள்ளக்கிடக்கையதையே,
உய்த்தறிய இயலாத்
தருணமிதில்
உனைப்பற்றி
நானேன்
எதிர்வு கூறலென்பது
வாய்
முகிழ்த்துச் சீண்டியதால்
'ஒட்டுமொத்த'
ஆய்வுப்
பிணைப்பையுமே,
துரத்திப் பின் விலத்தி
நிஜங்களுக்காய்...
நிழல்களுள்
பயணித்தபடி நான்!

ச.நிரஞ்சினி

## வலியின் சுகம்...!

என் கைகளில்
ஒரு தேவதை
சுமந்து வருகிறேன்
தூரம் தெரியாமல்...
நேரம் புரியாமல்
கண்களை உருட்டி
மருட்டியவளை
நெஞ்சுக்குள் திணித்தும்
வலிக்கும் என்று
கைகளில் தாங்கியும்...
சுகம் கண்டவள்
இதம் கண்டவள்
தூங்கிப் போகிறாள்
என்னுடையதில்லை அந்தப் பெண்
புன்னகைக் கொத்தாய்
இருந்த முகம் மறைந்து
ஒரு பூவானது
இறங்குமிடம் வந்ததும்
வாங்கிப் போகிறாள் தாய்
தோழிலிருந்து
கை நெடுக
வலித்தவன்
ஞாபகம்!

- ப.அருள்நேசன்

## தெளிவாகப் புரிந்துகொள்!

அன்புக்கும்
வரையறை உண்டென்பதை
நீ புரிய வைத்திருக்கின்றாய்
அன்பு எதையும் சாதிக்குமென்பது
உன்மட்டில் பொய்த்தேதான் போயிற்று
வெறும் கானல் நீராய்
உன் கண்ணோட்டத்தில் அன்பு
மூழ்கித் தத்தளிக்கும்போது
நான் என்ன செய்யமுடியும்...?
உனை மாற்றிக் கொள்ளாத
சில நிலைகளிற்காய்
நான் வருத்தப்படவே செய்கிறேன்
ஆயினும் அந்த நிலைகளிலிருந்து
நானின்று மாறிக்கொள்ள விரும்புகின்றேன்.
அன்பை திணிக்கமுடியாததென்பதே
தெள்ளத் தெளிவான முடிவு
ஆனாலும்என் இதயமென்ற ஒன்று
உன் முன்னேற்றத்திற்காய்
நிச்சயம் பாடுபடுமென்பதை
நீ தெளிவாகப் புரிந்துகொள்!

சூரியா, மாணிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org